
KALKI 2-1-83

ரூ. 1.20

கல்கி




இல்லங்கள் தோறும்
மாக்கோலம், கைத்தறி
இழையும் துணியிலே
பூக்கோலம்!
சிறப்புத் தள்ளுபடி
20%
15.12.82 முதல் 14.1.83 வரை
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
எங்களது சிங்கப்பூர் விற்பனை நிலையத்திற்கு வருகை தாருங்கள்.
கோ-ஆப்டெக்ஸ் மெட்ராஸ் ஹேண்ட்லூம்ஸ்
N-6, மெஸ்ஸனைன் ப்ளோர் லக்கி பிளாசா, சிங்கப்பூர்-0923



1983 எப்படி இருக்கும்?

நியூமராலஜியின்படி 1983 எப்படி இருக்கும்? எண் கணித ஜோதிடரும் 'எண்களால் ஏற்றமிகு வாழ்வு' நூலின் ஆசிரியருமான திரு ஆர். இ. துரைமுருகர் சொல்வன:

1983 இந்த ஆண்டுக்கான எண்களின் கூட்டுத் தொகை 21. கடைசியில் 3. இந்த மூன்றும் எண்ணுக்கு அதிபதி குரு. இவரைத் தேவகுரு என்பார்கள். வழக்கில் உள்ள வாசகம் இது:'குரு பார்க்கக் கோடி புண்ணியம்,குரு பார்க்கக் கோடி தோஷ நிவர்த்தி.'

ஆனாலும் தமிழ் நாட்டின் தலைநகரம் சென்னை. அதாவது MADRAS ஆக இருப்பதால் இதற்குரிய எண் 6 ஆக உள்ளது. ஆறும் எண்ணுக்கு அதிபதி அசுர குருவான சுக்ரன்.

ஆகவே இந்த ஆண்டும், தமிழ் நாட்டின் ஆட்சி பீடம் உள்ள சென்னையும் ஒன்றுக்கொன்று பகையாக அமைகின்றன.

இதன் காரணமாகப் பொருளாதார நெருக்கடி தீவிரப்படும். உண்ணும் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு மோசமான நிலைமை உண்டாகும்.

'தமிழ்நாடு' என்ற சொல்லுக்குரியதான எண் இரண்டு. இந்த எண் சந்திரனுக்கு உரியது. பாதி வளர்ந்து பாதி அழியும் தன்மையுடையது சந்திரன்.



புதிய ஆண்டின் எண், தமிழ் நாட்டின் எண், தலைநகரத்துக்கான எண் இவற்றின் அடிப்படையில் பார்த்தால், ஜூன் மாதம் வரை மிகவும் சிரமமாக இருக்கும். ஜூலை முதல் நிலைமை சீரடையக்கூடும்.

நாட்டின் பிரச்னைகள் அதிகமாவதால், ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காகச் சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படக் கூடும். குருவுக்கு ஒழுங்கை நிலைநிறுத்துகிற ஆற்றல் உண்டு. இந்த ஆண்டில் தமிழ் நாட்டில் தொழில் வளம் பெருக வாய்ப்பிருக்கிறது.

ராஜ்யத்துக்கான எண்ணுக்கு அதிபதியாக சந்திரனும், ஆண்டுக்கான எண்ணின் அதிபதியாக குருவும் விளங்குவதால் இந்த ஆண்டில் குரு சந்திர யோகம் உண்டு.

ஆட்சியாளர்களுக்குக்கெடுதல் ஏற்படவோ அரசியலில் குறிப்பிடத் தக்க மாற்றம் ஏற்படவோ வழியில்லை. குரு கலைக்கு உரியவராகையால், இத்துறையில் பெரும் வளர்ச்சி ஏற்படக் கூடும்.

புத்தி சம்பந்தமான, எலக்ட்ரானிக் போன்றவை தொடர்புள்ள பொருள்களைப் போட்டி போட்டுக் கொண்டு உற்பத்தி செய்வார்கள். இதனால் இவற்றின் விலை குறையலாம். புத்தி சம்பந்தமான பொருள்கள் விலை குறைவுபட்டாலும், குருவுக்கு சுக்ரன் பகையாக இருப்பதால் விவசாயப் பொருள்கள் (பச்சைப் பொருள்கள்) உற்பத்தி குன்றி, விலை ஏறும். பச்சை நிறம் குருவுக்கு விரோதமான நிறம் என்பது காரணம்.

அகில இந்திய அளவில் பார்த்தால் நாட்டின் பெயரும் புகழும் இந்த ஆண்டில் ஓங்கிச் சிறக்கும். இந்தியா உயர்ந்த ஸ்தானம் வகிக்கும். அண்டை நாட்டுப் பிரச்னை வந்தபோதிலும் சமாளித்து வெற்றி யடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. ஏனெனில் 'இந்தியா'வுக்கான எண்ணும் மூன்றுதான். குருவுக்கு உரியது.

பேட்டி: யெஸ்பால்



⌘ ஆல்காட் - அன்னிபெசன்ட் - லெட்பீட்டர்

அதிசய மனிதர் ஆல்காட்

பிரும்மஞான சங்கத்தின் சர்வதேசத் தலைமையகம் அடையாற்றில் தோன்றி இன்று நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஒரு வாரக் கொண்டாட்டத்தின் இறுதி நாளான ஜனவரி 2ம் தேதி பிரதமர் வந்து ''மனிதனின் எதிர்காலம்'' என்ற தலைப்பில் பேருரையாற்றுகிறார்.

★ ★ ★


சங்கத்தின் முதல் அனைத்துலகத் தலைவர், அமெரிக்கர் கர்னல் ஆல்காட். மக்களால் ''ஆல்காட் தோட்டம்'' என்றே இன்றும் அழைக்கப்படும் அடையாறு தியாஸாபிகல் சொஸைட்டித் தோட்டத்தில் பசும் புல் வெளியில் சாய்வு நாற்காலியில் அவர் அமர்ந்திருப்பார். கண்ணிழந்தவர், கால் கை சுவாதீனமில்லாதவர்கள் பலருக்கு மெஸ்மரிஸம் போன்றதொரு அற்புத சக்தியால் நிவாரணமளித்தார். பிரும்மஞானத்தை அனைவரும்உணர வெளியிட்ட ரஷ்ய மாது பிளவாட்ஸ்கி. அவருக்கு இப்பணியில் உறுதுணையாக இருந்தார் ஆல்காட்.

கர்னல் ஆல்காட் பல நாடுகளிலிருந்து ஏட்டுச் சுவடிகளையும், புத்தகங்களையும் சேகரித்து அடையாறு நூல்நிலையம் நிறுவி பற்பல மதத் தலைவர்களை வரவேற்றுப் பிரார்த்தனைகளை ஓதச் செய்து திறப்பு விழாக் கொண்டாடினார். அப்போது முதல் சங்கக் கூட்டங்களில் பல மதப் பிரார்த்தனை மரபைத் துவக்கி எம்மதமும் சம்மதம் என்ற பிரம்மஞானக் கொள்கையைச் செயல்படுத்தினார். பஞ்சமர் என்று அழைக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு பள்ளிகள் எழுப்பி முதன் முதலாகக் கல்வி புகட்டி கண்ணியமாக வாழ ஊக்குவித்து சமூகத்தில் அவர்களை உயர்த்தினார். புத்தமதச் சின்னமாக ஒரே கொடியை உருவாக்கிக் கொடுத்து, எல்லாப் பிரிவினரையும் ஏற்கச் செய்தவரும் இவரே.

ஒரு நாள் பிளவாட்ஸ்கி அம்மையும், ஆல்காட் அவர்களும், ''நம் தலைமைச்செயலகத்தைப் பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றிக் கொண்டால் நல்லது. தகுந்த இடம் கிடைக்குமா?'' என்று பேச்சுவாக்கில் தங்கள் விருப்பத்தை வெளியிட்டனர். நண்பர் சுப்பையா செட்டியார், ''அடையாற்றின் கரையை ஒட்டி ஒரு இடம் — 28 ஏக்கர் — விலைக்குக் கிடைக்கும். நீங்கள் பார்க்கிறீர்களா?'' என்று கேட்டார்.

இயற்கை எழில் மிகுந்த அமைதியான இடம் அவர்களுக்குப் பிடித்துவிட்டது.

''நன்கொடையாகப் பணம் சேகரித்தே விலைக்கு வாங்க முடியும். காலம் தாழ்த்தினால் இந்த இடம் கைநழுவிப் போய்விடுமே'' என்று பேசிக் கொண்டார்கள். ''என் தகப்பனாரும் அவர் நண்பரும் வியாபாரத்துக்கு முதலீடு செய்ய இப்போது பணம் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அந்தத் தொகையைக் கடனாகத் தரும்படி அவரைக் கேளுங்கள். நன்கொடை திரட்டித் தந்துவிடலாம்'' என்று ஆவலுடன் சொன்னார் சுப்பையா செட்டியார்.



⌘ பிரம்மஞானசபை சர்வதேச தலைமையகம், அடையாறு

விவரம் தெரிய வந்தபோது சுப்பையாவின் தந்தை ''இப்படி ஒரு சிக்கலில் மாட்டி வைத்துவிட்டாயே, அதிகப்பிரசங்கி!'' என்று கடிந்து கொண்டார். ஆனால் அன்றிரவே அவருக்குக் கனவிலே ஒரு முனிவர் தோன்றி நல்ல காரியத்துக்கு உதவுமாறு பணித்தார்! பணம் கைமாறியது. நிலமும் பிரும்ம ஞானசங்கத்துக்கு உடைமையாயிற்று. ஒரே வருடத்துக்குள் கடனை அடைத்துவிட்டார்கள் ஆல்காட்டும், பிளவாட்ஸ்கியும்.

பின்னால் டாக்டர் பெஸன்ட் காலத்தில் சமுத்திரக் கரை வரை சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் வாங்கி அபிவிருத்தி செய்யப்பட்ட இந்தத் தோட்டத்தில், ஜோதிராலயம் என்ற ஹிந்து கோவில், புத்தர் ஆலயம், பார்ஸிகக் கோவில், கிறிஸ்தவச்சர்ச், ஸீக்கியரின் குருத்வாரா, இஸ்லாமிய மசூதி ஆகியவை அவரவர் மரபுப்படி கட்டப்பட்டிருக்கின்றன.

- சாரதா


உங்களது குழந்தை புத்திசாலியாக

வளர வழி

சில்ட்ரென்ஸ் நாலெட்ஜ் பாங்க்

பாகம் 1

குழந்தையின் ஆவலைச் சற்றே தூண்டிவிட்டால் போதும். அப்பப்பா! விந்தை நிறைந்த உலகின் அதிசய நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் துடிப்பினால் உந்தப்பட்டு குழந்தை தொடுக்கும் வினாக்கள் ஆயிரமாயிரம்! 'இது ஏன்?' 'அது எப்படி?' என்ற வினாக்களுக்கு விடை காணாமல் அந்தப் பிஞ்சு மனம் திணறுகிறது. சரியான விடை கிடைத்துவிட்டால், மனம் தெளிவடைந்து புத்தி கூர்மையுறுகிறது மேன்மேலும் அறிவு வளர்ச்சிக்கான தூண்டுதல் ஏற்படுகிறது.



விலை ரூ. 20/-
தபால் கட்டணம் தள்ளுபடி

அழகிய விளக்கப் படங்கள் டபுள் கிரவுன் சைஸ் 232 பக்கங்கள்
ஆங்கிலம், இந்தி மொழிகளில் 1 & 2 பாகங்கள் இதே விலைக்குக் கிடைக்கும்.

முதற் பாகத்தில் இடம்பெறும் 177 வினாக்களுள் ஒரு சில—

சில்ட்ரென்ஸ் நாலெட்ஜ் பாங்க்

உங்கள் குழந்தைகளின் மூளைக்கு ஒரு டானிக்

■ நாக்கு சுவையை அறிவிப்பது எப்படி? ■ ஆந்தை இரவில் பார்ப்பது எங்ஙனம்? ■ மிருகங்கள் நம்மைப் போல ஏன் பேசுவதில்லை? ■ வானவில் உண்டாவது எப்படி? ■ பட்டகை எவ்வாறு வானவில் நிறங்களை வெளிப்படுத்துகிறது? ■ கடிகாரத்தினுள் ஜுவெல்கள் பொருத்துவதேன்? ■ சீனத்து நெடுஞ்சுவர் ஏன் கட்டப்பட்டது? ■ பனித்துளிகள் எவ்வாறு உருவாகின்றன? ■ வைரங்கள் ஏன் பெருமதிப்புடையன?

■ கண்களை மூடி நேராக நடக்கமுடியாததேன்? ■ மனிதன் முதுமையடைவது ஏன்? ■ காலங்கள் மாறுவதேன்? ■ காற்றின் வேகத்தை அளப்பது எப்படி? ■ ஆலங்கட்டிகள் உண்டாவது எப்படி? ■ வாணவேடிக்கைகள் வண்ணமயமாகக் காண்பது எப்படி? ■ மூடுபனி எவ்வாறு உண்டாகிறது? ■ பேரண்டம் எவ்வாறு உருவானது? ■ பூமியின் இயக்கத்தை நாம் ஏன் உணர்வதில்லை? ■ சூரியனுக்கு இறப்பு உண்டா?


VANDANA/PM/Tam-8

'சில்ட்ரென்ஸ் நாலெட்ஜ் பாங்க்' பாகம் 2 தயாரிப்பில் உள்ளது. உங்கள் பிரதிக்கு அருகாமையில் உள்ள புத்தகக் கடையில் பதிவு செய்துகொள்ளவும்.

AVAILABLE AT:
Leading bookshops, Higginbotham's Railway Book Stalls or ask by V. P. P. from

PUSTAK MAHAL
Khari Baoli, Delhi-110006.
10-B. Netaji Subhash Marg. N.Delhi-110002.

ஜனவரி 6ம் தேதியிலிருந்து 16ம் தேதி வரை சென்னை உட்லண்ட்ஸ் டிரைவ்-இன் இடத்தில் நடைபெறும் ஆறுவது புத்தகக் கண்காட்சியில் எங்கள் புத்தகங்களை வாங்கி 10% சதவிகிதம் பயன் அடையுங்கள். மற்றும் எல்லா பெரிய புஸ்தகக் கடைகளிலும் எங்கள் புஸ்தகம் கிடைக்கும்.



ஆந்திரா-கர்நாடகா தண்ணீர் உதவி
தமிழகத்தில் நிறைவேறாத தண்ணீர்த் திட்டங்கள்
தண்ணீர்
முறைக்குப் புதிசா தலையிலே இடி தான் விழுது!
தமிழன்
எந்தப் புத்தில் எந்தப் பாம்போன்னு சொல்லுவாங்க.. இங்கே.. என்னடான்னா... எல்லாப் புத்துலேயும் விஷப் பாம்பா இருக்கு!
கட்சி உட்பூசல்
இ. காங்கிரஸ்
சத்துணவு போடுறேன் சாப்பிடு, கண்ணு!
புல்வலி அரிசி வர்ற வரைக்கும் காத்திருக்கணும்!

கல்கி

1983 ஜனவரி 2
துந்துபி மார்கழி 18
மலர் : 41 இதழ் : 23



அதிசய ரயில் விபத்து!

குஜ்ரால் ரயில், ஸ்டேஷன் ஸைடிங்கில் நின்று கொண்டிருந்தது. சவுத்திரி ரயில் ஸிக்னலைக் கவனியாமல் அசுர வேகத்தில் வந்து, சரேலென்று டிராக் மாறி, ஒதுங்கி நின்ற குஜ்ரால் ரயில் மீது இடி விழுந்தாற்போல் மோதித் தூள் கிளப்பியது! அதிசயமென்னவென்றால் ஒதுங்கி நின்று கொண்டிருந்த குஜ்ரால் ரயிலுக்குச் சேதமில்லை! புயலாகச் சீறி வந்த சவுத்திரி ரயில்தான் தடம் புரண்டு விழுந்து நொறுங்கிப் பரிதாபமாகக் காட்சியளிக்கிறது!

ரயில்வே போர்டு சேர்மனாக குஜ்ரால் வந்ததிலிருந்தே ரயில் போக்குவரத்தில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்களில் பேச்சு. குறிப்பாக சரக்குப் போக்குவரத்தில் ஏற்படக் கூடிய காலதாமதங்கள் சீர்ப்பட்டுள்ளதாகவும், அதனால் அதிகக் கட்டணம் வாங்கும் லாரி போக்குவரத்து கணிசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. புதிய லாரி சேஸிஸ்கள் விற்பனை பெருமளவு குறைந்து போயிருப்பதும் இதையே உணர்த்துகிறது.

இவையெல்லாம் அமைச்சர் கண்களை உறுத்தியதோ என்னவோ, குஜ்ரால் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வயிற்றைக் கிழித்துக் குடலை மாலையாகப் போட்டுக் கொள்ளாத குறையாக' ஆத்திரப்பட்டிருக்கிறார். அதுவும் எங்கே? பிரதமரிடமோ, அல்லது அமைச்சரவைக் கூட்டத்திலோ, அல்லது அமைச்சரவைக் காரியதரிசியிடமோ பேசாமல், பத்திரிகை நிருபர்களை வலுவில் அழைத்து குஜ்ரால் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார்! அமைச்சர் சவுத்திரியின் இந்தப் போக்கு நகைப்புக்கிடமாகிவிட்டது.

என்ன குறை அமைச்சருக்கு? ஆந்திரப் பிரதேசத்தில் நாற்பது பயணியர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தேர்தல் சமயமானதால் திடுமென விழித்துக் கொண்ட சவுத்திரி, 'அவற்றை உடனே மீண்டும் ஓடச் செய்ய வேண்டும்' என்றார். 'சிரமப்படும்' என்று குஜ்ரால் கூறிவிட்டார். வந்ததே கோபம் சவுத்திரிக்கு!

'குஜ்ரால் தமக்கென்று ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்; ரயில்வே போர்டிடம் அதிகாரங்கள் குவிந்துள்ளன; பிராந்திய மானேஜர்களுக்கு உள்ள அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன; ரயில்வே போர்டு பயணிகள் நலனைக் கவனிப்பதில்லை; இன்ஜின் டிரைவர்களில் பெரும்பாலோர் குடித்துவிட்டு ஓட்டுகிறார்கள்' என்றெல்லாம் தமது ஊழியர்கள், அதிகாரிகளைப் பற்றிய புகார்களைத் தாமே அடுக்கியிருக்கிறார்.

பயணியர் நலன் கவனிக்கப்பட வேண்டும் என்பதிலும், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதிலும் ஆட்சேபணையே இல்லை. ஆனால் இன்றுள்ள நடைமுறை சரியில்லை என்றால் அது யார் குற்றம்? அமைச்சரவையின் தீர்மானங்களையொட்டித்தானே அதிகாரிகள் செயல்படுகிறார்கள்? 'என்னவானாலும் சரி, மின் நிலையங்களுக்கு நிலக்கரி சுமந்து செல்லும் ரயில்களும், உணவு தானிய ரயில்களும் தாமதப்படவே கூடாது' என்று முடிவு எடுத்தது அமைச்சரவைதானே? 'அதன் பின் விளைவாகத்தானே நாற்பது பயணியர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன?' என்று யோசிக்கத் தேர்தல் ஜுரம் சௌத்திரியை அனுமதிக்கவில்லை! அதிகாரிகளுக்குப் பக்கபலமாக நிற்பதற்குப் பதில் காலை வாரிவிடப் போய்த் தாமே கீழே விழுந்து மண்ணைக் கவ்வியிருக்கிறார்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

தேர்தல் களத்தில் நமது நிருபர்



⌘ ராஜீவ் பொதுக் கூட்டத்தில் பேசுகிறார்

ஆந்திராவில் சில மாதங்களுக்கு முன் ஆரம்பித்த எதிர்க் கட்சிகளுக்கிடையிலான தேர்தல் கூட்டுப் பேச்சுக்கள் கடைசி கட்டத்தில் முறிந்தன. மொத்தம் உள்ள 294 தொகுதிகளில் தெலுங்கு தேசம் 288 இடங்களிலும், அதன் கூட்டணிக் கட்சியான மேனகாவின் சஞ்சய்காந்தி விசார் மஞ்ச் ஐந்து இடங்களிலும் போட்டியிடுகிறது... இந்திராகாங்கிரஸ் 294 இடங்களிலும் போட்டி இடுகிறது. எதிர்க்கட்சிக் கூட்டணியில், ஜனதா, இடது, வலது கம்யூனிஸ்டுகள், லோக்தள், காங்கிரஸ் (எஸ்) அங்கம் வகிக்கின்றன. பாரதீய ஜனதா கட்சி எந்தக் கட்சியுடனும் கூட்டு சேராமல் 80 இடங்களில் போட்டியிடுகிறது.

பல தொகுதிகளில் நான்குமுனைப்போட்டி இருந்தாலும் போட்டி தெலுங்கு தேசத்துக்கும், இந்திரா காங்கிரஸுக்கும்தான் என்பது தெரிந்த விஷயம்.

என்.டி.ஆருக்கு, கூட்டம் வருகிறது. மக்கள் அவரைப் பார்ப்பதற்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருக்கத் தயார். ஆனால் இவருக்கு வரும் கூட்டம் வோட்டுரிமை பெறாத கல்லூரி மாணவர்களின், மற்றும் சிறுவர்களின் கூட்டம்தான் அதிகம்.

பெண்கள் கூட்டமும் கணிசமான அளவில் உள்ளது. இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் நடக்கும் நாயுடு – ரெட்டி ஜாதிச் சண்டைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார், என்.டி.ஆர். தெலுங்கு தேசத்தின் ஐம்பது சதவீத வேட்பாளர்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்தவர்கள்தான். எந்தக் கூட்டமானாலும் அவருடைய தாக்குதல் டெல்லி



⌘ NTR வேன் மேலாக வெளிப்பட்டுத் தரிசனம் தருகிறார்!

யில் உள்ள காங்கிரஸ் தலைவர்களைநோக்கித் தான் இருக்கிறதே தவிர, உள்ளூர் அரசியலை அவர் பேசவில்லை. ''உணவு இல்லை, உடை இல்லை, டெல்லியைச் சேர்ந்தவர்கள் சொல்படி நடக்கிறவர்கள் காங்கிரஸ் கட்சியினர்'' போன்றவைகளைப் பேசி முடித்து விட்டு, 'ஜெய் தெலுங்கு தேசம்' என்று அவர் முடிக்க, கூட்டமும் சேர்ந்து ஆர்ப்பரிக்கும்போது, என்.டி. ஆரின், மந்திர வார்த்தைகளுக்கு இருக்கும் சக்தியைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தெலுங்கு தேசக் கட்சியிடம் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நிறைய சினிமா நடிகைகள் நன்கொடை வழங்கி இருக்கிறார்கள். (அவர்களே இ. காங்கிரஸ் கட்சிக்கும் வழங்கியிருக்கிறார்கள் என்பதும் உண்மை.) காங்கிரஸ் கட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, போஸ்டர்கள், அலங்கார வரவேற்புகள் போன்றவைகள் தெலுங்கு தேசக் கட்சிக்குக் குறைவுதான். ஆனால், பிரம்மானந்த ரெட்டி, பவனம் வெங்கட்ராம், பழைய ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டி ஆகியோர் மறைமுகமாக தெலுங்கு தேசத்துக்கு ஆதரவு திரட்டி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிற ஒரே ஓட்டு சேகரிப்பாளர் பிரதமர் இந்திரா காந்தி தான். எந்த மாநிலப் பொதுத் தேர்தலுக்கும் பத்து நாட்கள் பிரதமர் பிரசாரத்துக்குப் போயிருக்க மாட்டார். ஆனால் ஆந்திராவில் ஹெலிகாப்டரில் 10 நாட்கள் பிரசாரம் செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களும், சிறுபான்மை வகுப்பினரும் இன்னும் இந்திராவைத்தான் நம்பியிருக்கிறார்கள். சில இடங்களில் அவருக்கு எதிர்ப்புக் குரல் கிளம்பியிருப்பது, இந்திரா செல்வாக்குக் குறைந்து வருவதைக் காட்டினாலும் ஓட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, ஒரு பெரும்பான்மை அரசை அமைக்கக்கூடிய வாய்ப்பு இந்திரா காங்கிரஸுக்கு இருக்கிறது என்பதே இன்றைய (20–12–82) கணிப்பு.

காங்கிரஸ் கட்சியினர் நிறைய இடங்களில் அதிகாரபூர்வ வேட்பாளர்களை — எதிர்த்துப் போட்டியிட்டாலும் வெற்றி

✕ மது தந்தவாதே





✕ பங்காரப்பா



✕ பொம்மை

✕ ஜனா கிருஷ்ணமூர்த்தி



✕ ஜஸ்வர் ரெட்டி





✕ குண்டுராவ்



✖ ஜெமீருதீன்



✖ விஜயன்



✖ பிரமீளா



✖ ஜோஸப்



✖ குஷாலப்பா



✖ நாகபூஷணம்

பெற்றவுடன் ஹரியானாவில் நடந்த மாதிரி இ. காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிடுவார்கள் என்பது நிச்சயம்.

எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டுக் கூட்டணி அமைத்திருந்தால் காங்கிரஸ் கட்சிக்குச் சற்றும், ஆட்சி அமைக்க வாய்ப்பு கிடைக்காது என்பது உண்மை. ஆனால் என்.டி. ஆர். தமது ஒத்துழையாமையைக் காட்டி, கூட்டணியை முறித்துவிட்டார்.

என். டி. ராமாராவுக்கு உள்ள பெரிய பலம், ஈநாடு என்ற தெலுங்கு தினசரியின் ஆதரவுதான். ஆந்திராவில் நான்கு இடங்களில் வெளியாகும் இந்தப் பத்திரிகை காலை ஐந்து மணிக்கே ஆந்திராவின் மூலை முடுக்கெல்லாம் சென்றுவிடுகிறது. தினமும் என்.டி.ஆருக்கு முதல் பக்கத்தில் இடம் தருகிறது.

திருப்பதி: என்.டி.ராமாராவ் வெற்றி பெறுவாரா?

திருப்பதி தொகுதியில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து இருபதாயிரம் வாக்காளர்களில் ஐம்பது சதவீதத்தினர் 'கம்மா நாயுடு வகுப்பை (என்.டி.ஆர். வகுப்பு)ச் சேர்ந்தவர்கள். 45000 வாக்காளர்கள் ரெட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

நாடு அறிந்த நடிகராக என். டி. .ஆர் இருந்தாலும் இந்தத் தொகுதிக்கு அவர் அந்நியர்தான். அவரது சொந்த மாவட்டத்தில் உள்ள குடிவாடாவில் அவர்போட்டியிடுவது இந்தத் தொகுதியில் உள்ளவர்களைச் சற்றுச்சிந்திக்க வைத்துள்ளது. இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றால் எந்தத் தொகுதியில் இருந்து ராஜிநாமா செய்வார் என்று யூகிப்பது கஷ்டம் என்கிறார்கள் மக்கள்.

இவரை எதிர்த்து நிற்கும் இ. காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஈஸ்வர் ரெட்டி சட்டமன்றத்தின் தற்போதைய சபாநாயகர். இதே தொகுதியில் இருந்து இருமுறை போட்டியிட்டு வெற்றி பெற்றவர், தொகுதியில் சில புதிய அரசுத் துறைத் தொழிலகங்கள் உருவாகியுள்ளதால் மக்களிடம் ஆதரவைப் பெற்றுள்ளார். இருபது வருடங்களாக அரசியலில் இருக்கும் ஈஸ்வர் ரெட்டி தொகுதியின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு அறிந்தவர். திருப்பதி தேவஸ்தானம், வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் தொடர்பு வைத்துள்ளார். பணத்திற்கும் குறைவில்லை.

இவரை எதிர்த்துப் போட்டியிட தெலுங்கு தேசக் கட்சியில் தகுதியானவர் இல்லாததால்தான் என். டி. ஆரே போட்டியிடுவதாகச் சொல்கிறார்கள்.

திருப்பதி தொகுதி மக்கள் பேசுகிறார்கள்

நாகபூஷணம் (எலக்ட்ரீஷியன்) : என். டி.ஆர். அரசியலுக்கே புதுசு. அவர் சொல்றதெல்லாம் நடக்கும்னு தோன்றவில்லை. எம். ஜி. ஆர். மாதிரி பொதுக்

சிக்கனம் எனும் சக்கரங்களில் சுழலும்


சன்கோச்

லேலண்டு, டாடா, மற்றும் எல்லா சேசிஸ்களுக்கும் நாங்கள் கட்டும் நல்ல, தரமான 'சிட்டி' மற்றும் முபசில்' பஸ்பாடிகள்-சன் கோச்கள்-புதுவித முகப்புகள், அழகான கிரில், பெரிய விண்ட் ஷீல்ட் கண்ணாடி ஆகியவற்றுடன் கவர்ச்சிகரமாகக் காட்சி அளிக்கின்றன.


இதோ எங்கள் விலைகள்! ஒப்பிட்டுப் பாருங்கள்!


லேலண்ட் வைகிங்	210"	56 சீட்கள்	ரூ. 79,900
லேலண்ட் சீட்டா	210"	54 சீட்கள்	ரூ. 79,800
டாடா	205"	53 சீட்கள்	ரூ. 76,000

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,
கோச் டிவிஷன்,
மதுரை.



EP-SI 101





"ஏன் கருப்புக் கண்ணாடி போட்டுண்டு கச்சேரி பண்றாங்க? இவங்களெல்லாம் ஏதாவது அரசியல் கட்சியை சேர்ந்தவாளா?"

"இல்லே... இப்போவெல்லாம் எல்லாரும் நம்மைப் போல ராகமாலிகா புடவையைத் தானே கட்டிக்கிறாங்க. அதை பாத்து சங்கீதத்தை கோட்டை விடாம இருக்கறதுக்காக"

ராகமாலிகா
பட்டு சேலைகள்
ககன் ஆர்கேட் — பனகல் பார்க் அருகில்
ராஜேஸ்வரராவ் ரோடு, தி. நகர்,
சென்னை-600017
(ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு)

காரியங்களுக்கு என். டி. ஆர். பணம் கொடுத்ததே கிடையாது.

ரவி (தொழிற்சங்க தலைவர்) : எங்களுக்கு இந்திராகாந்தி மேல் வெறுப்பு கிடையாது. ஆனால் உள்ளூர் தலைவர்கள் ஜாதிவெறியை வளர்த்து விடுகிறார்கள். இது எங்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. என் வோட்டு தெலுங்கு தேசத்துக்குத்தான்.

பிரமீளா (சமூக சேவகி): திடீரென்று அரசியலில் குதித்துள்ள என்.டி. ஆரை எப்படி நம்புவது? காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர், படித்தவர், பண்புள்ளவர், தொகுதிக்கு நிறைய செய்துள்ளார். பெண்கள் என். டி. ஆரை பார்க்க வேண்டும் என்றுதான் கூடுகிறார்கள். நிச்சயமாக வோட்டுப் போடமாட்டார்கள்.

சிவராமமூர்த்தி (தெலுங்கு தேசத் தொண்டர்) : சொந்த மாவட்டத்தில் பலம் இல்லாததால் இங்கு என். டி. ஆர். நிற்கிறார் என்கிறார்கள். அப்படியானால் இந்திராகாந்தி வேறொரு மாநிலத்தில்நின்று ஜெயித்தாரே? பொதுக் காரியங்களுக்குச் சொந்தப் பணத்தை என்.டி. ஆர். கொடுக்கவில்லை என்கிறார்கள். ஏன் கொடுக்கவேண்டும்? உங்கள் பணத்தை நீங்கள் கொடுப்பீர்களா?

விஜயன் (பஸ் கண்டக்டர்) : நாங்கள் போன தேர்தலில் இ.காங்கிரஸுக்கு வேலை செய்தோம். இந்தத் தேர்தலில் தெலுங்கு தேசத்துக்கு வேலை செய்கிறோம். ஒரு மாறுதல் தேவை என்று மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

கர்நாடக களம்

ஆந்திர மாநிலத்தில் இ. காங்கிரசுக்குச் சவாலாகத் தெலுங்குதேசம் இருப்பதைப் போல ஒரு பலமான எதிர்க் கட்சி கர்நாடகாவில் இல்லை. ஆகவே இ. காங்கிரஸ் காட்டில் மழை.

224 தொகுதிகளில் 223ல் இ.காங்கிரஸ் போட்டியிடுகிறது. கோலார் தங்கவயல் தொகுதியை மட்டும் குடியரசு கட்சிக்கு விட்டுக் கொடுத்திருக்கிறது. மிகவும் கஷ்டப்பட்டுக்கூட்டணிஅமைத்தஎதிர்க்கட்சிகளான ஜனதா, கிராந்தி ரங்கா, வலது, இடது கம்யூனிஸ்டுகள், காங்கிரஸ் (எஸ்) லோக் தளம் ஆகியவை 220 இடங்களில் போட்டியிடுகின்றன. பாரதீய ஜனதா தனியாகக் கோதாவில் இறங்குகிறது. 111 இடங்களில் அது போட்டியிடுகிறது. சில முக்கியமான இடங்களில், எதிர்க்கட்சிக் கூட்டணியுடன் இணைந்து வேலை செய்கிறது.

எதிர்க்கட்சியினர் இப்போது வருத்தப்படுவது தேவராஜ் அர்ஸ் உயிரோடு இல்லையே என்றுதான். அவர் இருந்தால் குண்டு ராவுக்குப் பெரிய தலைவலியாக இருந்திருப்பார்.

குண்டு ராவ் ஆட்சியில் ஊழல்கள் இல்லாமல் இல்லை. சிமெண்ட் ஊழல், காட்டு நிலங்களை ஏலம் விட்டதில் ஊழல் போன்ற பல இருந்தாலும் மக்கள் அதை ஒரு

மங்கையர் மலர்

ஜனவரி '83

எப்படி இருக்கும் '83?

பணத்தை எங்கு சேமிக்கவேண்டும்?

பேணி வளர்த்தேன் கட்டுரைப் போட்டி

வையவனின் குறுநாவல்

பொருட்டாக நினைப்பதில்லை என்பது வேதனைக்குரிய ஒரு விஷயம். ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான மந்திரிகள் ரேணுகா – ராஜேந்திரன், சி. எம். இப்ராஹிம், ஆகியோருக்கு மீண்டும் டிக்கட் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

பிரதமரும், குண்டு ராவும் ஹெலிகாப்டரில் பறந்து, பிரசாரம் செய்கிறார்கள். குண்டு ராவ் மனு தாக்கல் செய்வதற்கே ஹெலிகாப்டரில்தான் சென்றார். ஆனால் எதிர்க்கட்சியினர், பிரசாரத்துக்கு ஹெலிகாப்டர் ஒன்றை வருவிக்க ஏற்பாடு செய்தபோது, அந்த ஹெலிகாப்டர் நிறுவனத்தாரிடம் மிரட்டி 'ஹெலிகாப்டர் கொடுக்காதே' என்று சொல்லிவிட்டார்களாம்.

வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, பல காரியங்களில் ஆளும்கட்சிக்குப் போலீஸார் உதவி செய்ய ஆரம்பித்துள்ளனர். கல்லூரி மாணவர்களைப் பற்றியும், தொழிற்சங்கத் தலைவர்களைப் பற்றியும் மற்றும், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்போர் பற்றியும், தகவல்கள் போலீஸாரால் சேகரித்துத் தரப்படுகின்றன. அவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களை வளைக்கப் பணம் தண்ணீராகச் செலவழிக்கப்பட்டு வருகிறது. ''ரெவின்யூ இலாக்காவினரும், வணிக வரித்துறை இலாக்காவினரும் மிகத் தீவிரமாக ஆளும் கட்சிக்குத்தேர்தல் வசூல் செய்யப் பணிக்கப்பட்டுள்ளனர்'' என்று கூறினார், கர்நாடக மாநில ஜனதா தலைவர் எஸ்.ஆர்.

பொம்மை. ஜனதா பிரசாரத்துக்கு வந்திருக்கிறார் மதுதந்தவாதே.

அர்ஸ் கட்சியின் தலைவர் பங்காரப்பா எதிர்க்கட்சிக் கூட்டணி அமைப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தவர். ''என் சொந்தத் தொகுதியில் பிரசாரம் செய்யப் போவதில்லை. மாநிலமெங்கும் சுற்றி, பிரசாரம் செய்து காங்கிரஸ் கட்சியைப் பதவியிலிருந்து இறக்கிக் காட்டுகிறேன்'' என்று உறுதியுடன் சொல்கிறார். பேச்சில் எழுச்சி இருக்கிறது.

தென் மாநிலங்களில் பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக இருக்கும் ஜனா கிருஷ்ண மூர்த்தி, ''கர்நாடகா, ஒரு போலீஸ் ராஜ்யமாக மாறிவிட்டது'' என்று குற்றம்சாட்டுகிறார்.

இ. காங்கிரஸுக்கு வேலை செய்ய சுமார் 2000 ஜீப்புகள் வந்திருக்கின்றன. போஸ்டர்கள், வரவேற்புகள், அலங்கார வளைவுகள் எல்லாமே பிரமாதப்படுகிறது. இந்திரா காந்தியின் கூட்டத்துக்கு டிராக்டரிலும், லாரிகளிலும் ஆட்கள் அழைத்துவரப்படுகிறார்கள்.

மிகவும் கஷ்டப்பட்டுப் பணிபுரிந்தாலும் எதிர்க்கட்சிகள் எல்லாமே சேர்ந்து 80 இடங்களுக்கு மேல் பெற முடியாது என்பது இன்றைய (22–12–82) கணிப்பு.

குண்டுராவ் தொகுதியில்....

முதல்வர் குண்டுராவ் குடகு மாவட்டத்தில் உள்ள சோம்வார் பேட் தொகுதியில் போட்டியிடுகிறார். 1972, 1978 தேர்தல்களில் அதே தொகுதியில் போட்டியிட்டு வென்றவர் குண்டு ராவ்.

குண்டு ராவை எதிர்த்துப் போட்டியிடும் ஜனதா கட்சியைச் சேர்ந்த பி. ஏ. திவிஜயா சிறு அளவில் தேயிலை உற்பத்தி செய்பவர்களின் சங்கத் தலைவராக இருக்கிறார். இவருடைய சொந்த ஊர் சோம்வார்பேட். ஆனால் குண்டு ராவின் ஊர் குஷால் நகர். ஜனதா வேட்பாளருக்கு ஆதரவாக முழு மூச்சாக ஈடுபட்டு இருக்கிறார்கள் கட்சித் தொண்டர்கள். குண்டு ராவுக்கு, ஆதரவாகத்தொகுதியில் முகாமிட்டு, பணத்தைத் தண்ணீராகச் செலவழித்துப் பிரசாரம் செய்து வருகிறார் எப். எம். கான்.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வோருக்குக் குறைந்தபட்ச கூலி வேண்டும் என்பதற்காக ஜனதா வேட்பாளர் போராடியிருக்கிறார். ஆகவே, 20,000 தோட்டத் தொழிலாளர்களின் வோட்டுக்களில் பெருமளவை இவர் பெறுவார் என்கிறார்கள். 1978 தேர்தலில் 3806 வோட்டு வித்தியாசத்தில் தான் இதே ஜனதா வேட்பாளரை குண்டு ராவ் தோற்கடித்தார்.

கிட்டத்தட்ட 15000 முஸ்லீம் வாக்காளர்கள் இருப்பதால், முஸ்லீம் ஒருவரும் போட்டியிடுகிறார். இந்த முஸ்லீம் வேட்பாளரை வாபஸ் பெறச் சொல்லி இந்திரா காங்கிரஸ் மிரட்டல், பணத்தாசை காட்டல் எல்லாம் இருந்ததாகவும் ஆனால் அவர் மறுத்துவிட்டதாகவும் எதிர்க்கட்சியினர்கூறுகிறார்கள்.

வெற்றி வாய்ப்பைப் பற்றிக் கூறும்படி பொதுமக்களையோ, வியாபாரிகளையோ கேட்டால் வாய் திறக்கமாட்டேன் என்கிறார்கள். அந்த அளவுக்குப் போலீஸ், மக்களைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோருமே சோம்வார் பேட் தொகுதிக்கு வரப்போகிறார்கள். ஆனால், குண்டு ராவுக்கு ஒக்கலிக்கா, லிங்காயத்து இனத்தவரின் ஆதரவும் இருப்பதால், வெற்றிக் கோட்டை அவர் ஒருவரால் மட்டுமே தொட முடியும் என்று தோன்றுகிறது!

சோம்வார் பேட் தொகுதி மக்கள் சொல்கிறார்கள்

ஜோஸப் (காட்டிலாகா காண்ட்ராக்டர்): எதிர்க்கட்சியினர் ஒற்றுமையாக வேலை செய்கிறார்கள். குண்டு ராவினால் தொகுதிக்குப் பெரிய நன்மை ஒன்றும் ஏற்படவில்லை. இதுவரை 22 தடவை குஷால் நகருக்கு ஹெலிகாப்டரில் வந்திருக்கிறார். இந்தப் பகுதி மக்களுக்கு ஹெலிகாப்டரைப் பார்த்துச் சலித்துவிட்டது. காங்கிரஸ் கட்சியையே பார்த்துச் சலித்துப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

ஜெயினுதீன் (ஜனதா தொண்டர்): நான் 1982மார்ச் வரை இ.காங்கிரஸில்தான் இருந்தேன். ஆனால் தொகுதி மக்களுக்குக் குண்டு ராவ் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடியவில்லை. எங்களால் அவரைச் சுலபமாகச் சந்திக்கக்கூட முடியவில்லை. அவருக்காக வோட்டுக் கேட்க இனி மேலும் சென்றால் தொகுதி மக்கள் கேள்விகளால் எங்களைத் துளைத்துவிடுவார்கள்.

சுப்பையா (பாரதீய ஜனதா தொண்டர்): குண்டுராவ் இந்தத் தொகுதிக்கு என்ன செய்துவிட்டார்? அர்ஸ் அடிக்கல் நாட்டிவிட்டுப் போன பஸ் நிலையத்தையும், சுஜாரு அலுவலகத்தையும்கூட இன்னும் கட்டி முடிக்கவில்லை. வீரேந்திர பட்டீல் அடிக்கல் நாட்டிய ஹாரங்கி அணை வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. அரசின் எந்த இலாகாவிலும் ஊழல். குறைந்தபட்ச ஊதியம் கொடுக்க அரசு உத்தரவிட்டாலும் இங்குள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தேயிலைத் தோட்ட அதிபர்கள் மிகவும் குறைவான கூலியைத்தான் கொடுக்கிறார்கள். இந்தத் தடவை குண்டுராவ் தோற்பது நிச்சயம்.

குஷாலப்பா: இந்திராகாந்தியிடமும், குண்டுராவிடமும் இந்தத் தொகுதி மக்கள் அன்பையும் பாசத்தையும் வைத்திருக்கிறார்கள். ஏராளமான சிறு நீர்ப்பாசன திட்டங்களைக் குண்டு ராவ் இந்தத் தொகுதியில் நிறைவேற்றியிருக்கிறார். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சொல்வது சுலபம். ஆனால் ஒன்றுகூட நிரூபிக்க முடியாது. அரசாங்க காரியங்கள் விறுவிறுப்பாக நடந்தது குண்டு ராவ் ஆட்சியில்தான்.



96 பக்கங்கள் • தனி பிரதி ரூ. 2/- ஆண்டுச்சந்தா ரூ. 24 கோகுலம், கிண்டி, சென்னை-600 032.

நாலாவது நர்சரி

சாருகேசி

"இதுவா மாமா என் ஸ்கூல்?'' என்று துளிக்கூட அழாமல் கேட்டான் ரவி. வயது: மூன்றரை. மாமா பெயர்: நந்தகுமார். வயது சுமார் இருபத்தெட்டு.

''ஸ்கூலுக்குப் போகிறபோது அழாமல் இருக்கிற முதல் பிள்ளை நீதான்டா!'' என்று மருமானுக்கு ஒரு ஷொட்டுக் கொடுத்தான் நந்தகுமார். எத்தனை குழந்தைகளைக் காலைக் கட்டி, கையைக் கட்டி, அலற அலற குண்டுக் கட்டாய்த் தூக்கி சைக்கிள் ரிக்ஷாவில் 'போட்டு' பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வருகிறார்கள்!

சின்னதாக இருந்த காம்பவுண்டுக்குள் நந்தகுமார் ரவியுடன் நுழைந்தபோது, கடுகு சைஸ், கத்தரிக்காய் சைஸ்களில் குழந்தைகள் உள்ளே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

''குட் மார்னிங் மிஸ்!'' என்று கோரஸ் குரல் கொடுத்த குழந்தைகளிடம் ''குட்மார்னிங்!'' என்று புன்னகைத்தது ஓர் ஐந்தரையடி உயரத் தேவதை.

பெயர்: உமா.

இதற்குள் 'மே... மே...' என்று கத்திக் கொண்டு ஐந்தாறு ஆட்டுக்குட்டிகள் பாய்ந்து வரவே, ரவி பயந்து போய் நந்தகுமாரைக்கட்டிக்கொண்டான்.

''மிஸ், இது நர்சரி ஸ்கூலா, வெட்டரிநரி ஸ்கூலா?'' என்று நந்தகுமார் கேட்டபோது உமா மிஸ் சிரித்தபடி ஆட்டுக் குட்டிகளை உள்ளுக்குள் அடைக்கக் கூப்பிட்டாள்.

''மாமா, இந்த ஸ்கூலே போதும். ஆட்டுக் குட்டிகள் நிறைய இருக்கு. ஜோரா விளையாடலாம்!''

''அப்புறம் ஆடு மேய்க்கத்தான் போகணும். ஆனா கவலைப்படாதே. ஒரு டிகிரி வாங்கினப்புறம் நீ அதைத் தான் செய்யவேண்டியிருக்குமோ என்னவோ?''

''என்ன அட்மிஷனா?'' என்று கேட்டாள் உமா மிஸ்.

''ஆமாம்'' என்றான் நந்தகுமார்.

''ஆட்டுக்குட்டிகளெல்லாம் நர்சரி ஸ்கூல் உரிமையாளரோடது. பின்னால் ஆட்டுக் கொட்டகை; அதற்குப் பின்னால் மாட்டுக் கொட்டகை...''

''ஆடு மாடுகளைக் கட்டி மேய்ப்பது போலத்தான் குழந்தைகளையும் மேய்ப்பீர்கள் போலிருக்கிறது!''

''ஏன், ஒரு யானையைக்கட்டக் கூட இடம் இருக்கிறது. பக்கத்துசிவன்கோவில்யானையை இரவில் வெளியே கட்ட முடியாதாம். கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஓனர் அம்மாள் யோசித்துக் கொண்டிருக்கிறாள்!''

''அப்படியே புலி, நரி, மான் என்று வகைக்கு இரண்டிரண்டு இங்கேயே கட்டி விட்டால் மினி-மிருகக் காட்சி சாலை ஆகி விடும். குழந்தைகளைத் தெருத் தெருவாய்



இழுத்துக் கொண்டு ஜூவுக்குக் கொண்டு போய்க் காண்பிக்க வேண்டாம்!''

''யாருக்கு அட்மிஷன்?'' என்று கேட்டாள் உமா. (வேண்டுமென்றே).

''நீங்கள் டீச்சராயிருக்கிற பட்சத்தில் எனக்கு அட்மிஷன் கொடுத்தால் கூடப் பரவாயில்லை!'' என்றான் நந்தகுமார் (வேண்டுமென்றே). ''இவனுக்குத்தான்! பெயர் ரவி. செல்லப் பெயர் வால். என் மருமான்!''

''எல்.கே.ஜிதானே?''


''ஆமாம். அதையே இரண்டு மூன்று நர்சரி ஸ்கூலில் படித்து விட்டான். ஒரு ஸ்கூலில் மிஸ் கவுன் போட்டுக்கொண்டிருந்தாளாம். தொடை யெல்லாம்காட்டற இந்த மிஸ்கிட்டப் படிக்க மாட்டேன் என்று வந்து விட்டான்!''

''நிச்சயம் பிற்காலத்தில் சென்ஸார் போர்டு சேர்மன் ஆகிவிடுவான் ரவி! இல்லேப்பா? ஆறு இது எத்தனையாவது நர்சரி எல்கேஜி?''

''மூணாவது'' என்றான் நந்தகுமார். ''ஒவ்வொரு ஸ்கூல்ல ஒவ்வொரு கம்ப்ளெயிண்ட். எல்கேஜி—யூகேஜி படிச்சே ரவி இருபது வயசைக் கழிச்சுடுவான் போலிருக்குமிஸ்!''

''அது பரவாயில்லையே. படிப்பெல்லாம் முழுசா முடிச்சு அறுபது வயசுக்கப்புறம் வேலை தேடப் புறப்பட்டாப் போதும்!''

ரவியை ஸ்கூலில் சேர்த்துவிட்டுத்தான் ஆபீசுக்குப் போனான் நந்தகுமார். அங்கிருந்தே தங்கை ராஜிக்கும் அவள் கணவர் பரசுவுக்கும் ''உங்கள் பிள்ளையைப் பள்ளியில் சேர்த்தாயிற்று'' என்று அறிவித்தான்.



''உமா மிஸ்உன்னை இன்னிக்கு ரொம்ப விசாரிச்சா மாமா!'' என்றான் ஒரு நாள். ஒரு மாதம் போனதே தெரியவில்லை.

''டே மெதுவா... மெதுவா... உங்கம்மா காதில்விழப்போகிறது!''

''யார் அது உமா மிஸ்? இந்த ஸ்கூல்களிலேயே இப்படித்தான்! எல்லாரும் மிஸ்ஸை முன்னால் போட்டால், இவர்களுக்கு மட்டும் அது பின்னால்தான் வரும். யாருடா அது ரவி, உமா மிஸ்?''

'ஸ்...ஸ்...' என்று ரவியைத் தடுக்கப் பார்த்தான் நந்தகுமார்.

''என்னோட கிளாஸ்மிஸ் அம்மா, மாமாவுக்குத் தெரியும். என்னைச் சேர்க்கிறபோது உமா மிஸ்கிட்டத்தான் மாமா நிறையப் பேசிக்கிட்டிருந்தார்!''

ராஜி பார்த்த பார்வையில் 'உண்மையைச் சொல்லிவிடு' என்ற உத்தரவு தெரிந்தது. ரவியைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்த பிறகு உமாவை நாலைந்து முறை சந்தித்ததைச் சொல்வதா, சொல்லாமலே இருப்பதா?..

''ஒண்ணுமில்லே அம்மா... உமா மிஸ்ஸை ஸ்கூல்லேருந்து போகச் சொல்லிட்டாங்களாம். நாளைவரைக்கும்தான் உமா மிஸ் எங்க டீச்சர்.''

தூக்கி வாரிப் போட்டது நந்தகுமாருக்கு. கொஞ்சம் சிரமப்படும் குடும்பம் என்றும் பட்டம் வாங்கிய பிறகு வேலைக்கு வந்ததையும், கல்யாணம் எல்லாம் இப்போது நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்றும் சொன்னாளே...

உமாவை மறுநாள்பள்ளிக்கூடத்தில்சந்தித்தபோது ''இன்றைக்குச் சந்திர கிரகணமா என்ன?'' என்றான் நந்தகுமார். ''உன் முகம் ஒரேயடியாக இருண்டு

கிடக்கிறதே. அதற்குச் சொல்கிறேன்!''

''நல்ல வேலை. வாரா வாரம் டீவியிலே பழைய சினிமாவெல்லாம் பார்த்துப்பார்த்து 'வதனமே சந்திர பிரகணமோ'ன்னு பாடாமல் இருந்தீர்களே! நந்து. என்னோட இப்போதைய பிரச்னை வேறு வேலை தேடிக் கொள்வது. அதாவது இன்னொரு ஸ்கூல்!'' என்றாள் உமா. ''முதலாளி அம்மாவோட உறவுப் பெண்ணுக்கு என்னோட இடத்தைக் கொடுக்கணுமாம்!''

''அக்கிரமம், அக்கிரமம்'' என்றான் நந்தகுமார். ''நான்தான் உன்னை...உன்னை...''

''கல்யாணம் பண்ணிக்கொள்வதுதானே? அது அப்புறம். கொஞ்ச நாளைக்கு என் சம்பளம் என் குடும்பத்துக்குத் தேவையாயிருக்கிறது. என்ன செய்யலாம்?''

''நீ இந்த ஆடு-மாடுகள் சூழ்நிலையில்தான் பாடம் சொல்லித் தருவேன்னு பிடிவாதம் பிடிப்பே. இல்லையென்றால் நானே ஒரு நர்சரி உனக்காக ஆரம்பித்து விடுவேன்!''

''ஐடியா பிரமாதம். ஆனால் நடத்தறது எப்படி?''

''எப்படியா? ஒரு போர்டு போட்டு, சுற்று வட்டாரத்திலே கொஞ்சம் நோட்டீசு விநியோகம் பண்ணினால் கும்பல் சேர்ந்துடுமே! எதுக்குப் பஞ்சம்னாலும் இந்த நாட்டிலே பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குப் பஞ்சமில்லே. ஆரம்பிக்கப் போற புதுப் பள்ளிக்கூடத்திலே முதல் பையன் ரவிதான்!'' என்றான் நந்தகுமார்.

''பாவம், நாலாவது நர்சரி ஸ்கூலா?'' என்று சிரித்தாள் உமா.

இடம்தேடி அலைந்தபோதுதான், எத்தனை முட்டாள்தனமான ஐடியாவைக்கொடுத்து விட்டு இப்படி விழிக்க வேண்டியிருக்கிறது என்று நந்தகுமாருக்குத்தோன்றிற்று. வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம்— வாக்குச்சீட்டுக்கொடுக்கலாம், வாக்கு மூலம் கொடுக்கலாம்; ஆனால் வாக்கு மட்டும் கொடுக்கக் கூடாதுடா சாமி என்ற ஞானோதயம் கூட உண்டாகி விட்டது.

காலியான பெரிய கார் ஷெட், காலியாகப் போகிறது என்று தோன்றும் சாராயக் கூடாரம், பாழடைந்த பங்களா — என்று எதுவும் விட்டுவைக்காமல் தேடி, அலுத்துப் போய் ஐடியாவைக் கைவிட்டு விடலாம் என்று நந்தகுமார் நினைத்தபோது—

உமா அவனைத் தேடி ஆபீசுக்கே வந்து விட்டாள்.

''ஏதாவும் நல்ல சேதி உண்டா?'' என்று பரபரத்தான் நந்தகுமார்.

''ஏதும் இல்லை. ஆனால் ஸ்கூல் தொடங்குகிற ஐடியாக் கொடுத்த நீங்களே இடம் பிடிக்கிற பிரச்னையையும் தீர்த்து வைத்தால் பரவாயில்லை. எத்தனை நான் சும்மா இருப்பது?''

''எல்லோருக்கும் ஸ்கூலில்இடம்கிடைப்பது பிரச்னை என்றால் நமக்கு ஸ்கூலுக்கே இடம் கிடைப்பது . பிரச்னையாக இருக்கிறதே!'' என்ற நந்தகுமார், ''ஆ. இது தோன்றாமல் போச்சே!'' என்று துள்ளிக் குதித்தான். ''எங்கள் வீட்டு மொட்டை மாடியில் கூரை போட்டால் ஆயிற்று! நர்சரி ஸ்கூல் போர்டு கட்டிவிட்டால் குழந்தைகள் சேருவதா கஷ்டம்! ஹ!''

''உங்கள் வீட்டிலேயேவா...?''

''ஏன், முதலில் உமா மிஸ்ஸாக என் வீட்டுக்குள் வா. அப்புறம் மிஸஸ் உமாநந்தகுமாராக வரலாம். ஐடியா நன்றாக இல்லை?' என்றான் நந்து. ஏஷியாடில் தங்க மெடல் வாங்கியவனின் சந்தோஷத்தோடு.

பல திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட வெங்கடேசன் நிரம்ப பக்தி உள்ளவர். எவ்வளவு கொள்ளையடித்தாலும் கொஞ்சம் மாங்காடு அம்மனுக்குக் காணிக்கை அளிப்பார். அதுவே இவருக்கு ஆபத்தாய் முடிந்தது. இந்த விவரம் அறிந்த போலீஸார் ஒரு திருட்டுக்குப்பின் மாங்காடு கோயிலில் இவரைக் கைது செய்தனர்.

கணபதி சுப்பிரமணியம்

ஆதாரம்: ஸண்டே





எண்ணெய் மற்றும் எரிவாயு கமிஷன், சமீபத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் வேளூர் பகுதிகளில் எண்ணெய் கிடைக்குமா என பூமியில் ஆழப் பரிசோதனை செய்தனர். எண்ணெய்க்குப் பதில் தண்ணீர் கிடைத்தது! இப்போது அந்தத் தண்ணீரை நாகை நகர் மற்றும் சுற்றுப்புறங்களுக்குக் குடிநீராகப் பயன்படுத்துகின்றனர்.

—ராஜேஸ்வரி

தொடர்கதை:

இரும்பு குதிரைகள்

முன்னோட்டம் இரண்டு

● . தாரிணி அவனை வெறித்தாள்.'' என்னையும் குழந்தைகளையும் மாடிலேர்ந்து தூக்கிப் போட்டுக் கொன்னுட்டு எங்க வேணாப் போங்கோ. ஒருவேளை ஓஹோன்னு சினிமா டைரக்டரா வந்துடலாம். ஆனா குழந்தைகளுக்கு நல்ல அப்பனா இருக்க முடியாது. ஏதோ கவிதை எழுதறேன், கதை எழுதறேன் போனாப் போறது. இதென்ன பேராசை. எதுக்கு இந்தத் தற்கொலை? குடும்பத்தை நாசம்பண்றயோசனை. வேண்டாம்னு, சொல்றதைக் கேளுங்கோ. அந்தச் சினிமா சகதி வேண்டாம்.'' தாரிணி காலைப் பிடித்துக் கெஞ்சினாள்.

ஒரு லாரி டிரைவர் முயன்றால் சினிமா நடிகனாக முடியும். ப்ரொட்யூசராக முடியும். ஒரு கிளீனர் டைரக்டராகி விடலாம். என்னால் முடியாது. நான் குமாஸ்தா. என்றென்றும் குமாஸ்தா. பரம்பரை பரம்பரையாய்க் குமாஸ்தா. ஒரு குமாஸ்தா அதிகம் ஆசைப்படக் கூடாது. சினிமா ஆசை கூடவே கூடாது.

ஆனால் விஸ்வநாதனுக்குப் பிடித்த டைரக்டர் கூட ஆரம்ப வாழ்க்கையில் ஒரு குமாஸ்தாதான்.

வாழ்க்கையில் முன்னேற பயம் அவஸ்யம். பயத்துக்குப் பாதுகாப்பற்ற தன்மை அவஸ்யம். பாதுகாப்பற்ற தன்மைக்குச் சிதிலமான குடும்பம் வேண்டும். விஸ்வநாதன் குடும்பம் உறுதியாய் இருந்தது. அவனைச் சுற்றிப் பலவிதமான பாதுகாப்புகள் இருந்தன. அவனை முன்னேற ஓட்டாமல் இழுத்தன.

எழுதுபவர்:

பாலகுமாரன்




பெண்ணாசை

3

ஹேமா ஆனந்ததீர்த்தன்

உமாவும் நடராஜ அய்யரும் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்று ஒரு வாரமாகி விட்டது. இந்த ஒரு வாரத்தில் சிவகுரு மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டார். எந்த விதத்திலும் ராஜத்துக்குத் தம் பேரில் சந்தேகமோ, பயமோ தோன்றி விடக் கூடாது என்பதில் வெகு கவனமாக இருந்தார். அவசரப்பட்டுத் தான் ஏதாவது செய்யப் போக, ராஜம் தம் உள்ளத்தின் அழுக்கைப் புரிந்துகொண்டு எச்சரிக்கை அடைந்து விட்டாள் என்றால் காரியம் கெட்டுவிடும் என்பதால், தேர்ந்த ஒரு வேட்டைக்காரன் தன் இரையைப் பிடிப்பதற்குக் கண்ணி வைத்துப் பொறுமையாகக் காத்திருப்பது போலக் காத்திருந்தார். தம்மால் அவளுக்கு ஒரு தீங்கும் நேரிடாது என்ற நம்பிக்கை அவள் உள்ளத்தில் உறுதியாக நிலைபெற்ற பிறகுதான் தமது பகடைக் காய்களை நகர்த்த வேண்டும் என்று திட்டம் போட்டுத் தருணத்தை எதிர்நோக்கியிருந்தார். அவ்வாறு காத்திருப்பது அவருக்குச் சுலபமாக இருக்கவில்லைதான். முள் மேல் நிற்பது போலத்தான் தவித்துக் கொண்டிருந்தார். இருந்தாலும் அதுதவிர்க்க முடியாததாக இருந்தது. 'எப்படியும் ஒரு மாதத்துக்கு முன்னால்உமாவோ நடராஜய்யரோ திரும்பி வரப்போவதில்லை. வேண்டியசமயம் இருக்கிறது.



என்ற எண்ணம் ஆறுதலைத் தந்தாலும் சீக்கிரமே தமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு விட்டால் அவர்கள் வரும்வரையில் தங்கு தடையில்லாமல் அநுபவித்துக் கொண்டிருக்கலாமே — நாட்களை விணுக்காமல் — என்ற எண்ணம்தான் அவரது தவிப்புக்குக் காரணம்.

ராஜம் காலையில் ஆறு மணிக்கே வந்து விடுவாள். ஆறரை மணிக்கு சிவகுருவுக்கு அவரது படுக்கை அறையிலேயே காப்பி கொண்டு வந்து கொடுப்பாள். அதற்குள்ளாக அவர் படுக்கையறையோடு ஒட்டியிருந்த குளியலறையில் பல் தேய்த்துவிட்டு ரேடியோவில் காலை நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கொண்டிருப்பார். அவரிடம் காப்பியைக் கொடுத்துவிட்டு அவள் அறைக்கு வெளியே சென்று கதவையொட்டியபடி நின்று கொண்டு அவர் காப்பி குடித்து முடிப்பதற்காகக் காத்திருப்பாள். முடித்துவிட்டதாகத் தெரிந்ததும் உள்ளே வந்து டபரா டம்ளரைஎடுத்துக் கொண்டுபோய்விடுவாள். இருவரும் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டார்கள்.

அதே போல எட்டரை மணிக்குச் சரியாக சிவகுரு டைனிங் ஹாலுக்குக் காலைச் சிற்றுண்டி சாப்பிடுவதற்காக வந்துவிடுவார்.

''என்ன பண்ணியிருக்கே?''

''இன்னிக்குச் சமையல் என்ன பண்ணப் போறே?''

''இவ்வளவு சட்னி வேண்டாம்.கொஞ்சம் எடுத்துடு'' என்பன போன்றஇரண்டொரு பேச்சுக்களோடு சரி.

மத்தியானம் சாப்பாட்டுக்கு சிவகுரு வீட்டுக்குவருவதில்லை. சமையல் முடிந்ததும் ராஜம் டிபன் காரியரில் சாப்பாட்டைப் போட்டு அதற்காக வரும் சிவகுருவின் காரியாலயச் சிப்பந்தியிடம்கொடுத்தனுப்பி விட்டுத் தன் வீட்டுக்குப் போய்விடுவாள். பிறகு நாலரை மணிக்கெல்லாம் திரும்பி வந்து சிவகுருவின் வரவுக்காகக் காத்திருப்பாள். அவர் வந்ததும் டிபன், காப்பிகொடுப்



பாள் — டைனிங் ஹாலில். சாப்பிட்டுவிட்டு அவர் போனதும் ராஜம் இரவுச் சமையலைக் கவனிப்பாள்.

இரவுச் சாப்பாட்டின்போது சிவகுரு கொஞ்சம் அதிகமாகப் பேசுவார். அவளுடைய தம்பி, தங்கைகளின் படிப்பைப் பற்றிக் கேட்பார். அவளுடைய தாயாரின் உடல்நிலையைப் பற்றி விசாரிப்பார். மறுநாள் காலைப் பலகாரத்துக்கு என்ன செய்யலாம் என்பது பற்றி யோசனை சொல்வார். மிருந்திருக்கும் சாப்பாட்டை டிபன் காரியரில் போட்டு எடுத்துக் கொண்டு போய் அவள் தாயாருக்கும் தம்பி தங்கைகளுக்கும் போடச் சொல்லுவார்.

எட்டாவது நாள் இரவு சிவகுரு எட்டு மணியடித்தும் டைனிங் ஹாலுக்குச் சாப்பிடப் போகாமல் தமது அறையிலேயே உட்கார்ந்திருந்தார்.

எட்டேகால் வரை பொறுத்துப் பார்த்துவிட்டு ராஜம் அவர் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து பார்த்தாள்.

ஏதோ புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த சிவகுரு தலைநிமிர்ந்து பார்த்து, "என்னம்மா, ராஜம்?" என்று கேட்டார்.

"மணி எட்டேகால் ஆச்சு. சாப்பிட வரலையா?" என்று கேட்டாள்.

சிவகுரு அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்தார். ஏதோ யோசிப்பது போல் பாவனை செய்தார்.

அவருடைய அந்தத் தீர்க்கமான பார்வையை ஏற்றுக்கொள்ள முடியாமல் ராஜம் தலையைக் குனிந்து கொண்டாள்.

"ஒண்ணு செய்யறியா ராஜம்?"

"என்ன மாமா?"

"எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு. சாப்பாடு இங்கியே கொண்டு வந்துடேன். உனக்குக் கஷ்டமா இல்லாட்டா."

"ஓ! கொண்டு வரேன். அதுக்கென்ன கஷ்டம்" என்று கூறிவிட்டு மறைந்தாள்.

அடுத்த பத்து நிமிடங்களில் அவரது படுக்கையிலேயே ஒரு சின்ன ஸ்டூலைப் போட்டு அதன் மீது கட்டு வைத்துப் பரிமாறினாள்.

"ஐயா, காசு போடுங்க. சாப்பிட்டு ரெண்டு நாளாச்சி."

"இன்னிக்கு ஒரு நாள் சாப்பிடாட்டி என்ன ஆகும்?"

"மூணு நாள் ஆகுங்க."

—நா. செந்தில் முரளி



"இன்னிக்கி உங்கப்பா கிட்டேந்து லெட்டர் வந்ததா?"

"ஊம்."

"என்ன எழுதியிருக்கார், நடராஜய்யர்?"

"பாருங்களேன். இங்கியேதான் இருக்கு லெட்டர்" என்று கூறி வெளியே போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் லெட்டரைக் கொண்டுவந்து அவர் முன் வைத்தாள்.

"நீயே படி."

படித்தாள்.

நீண்ட கடிதமாகவே எழுதியிருந்தார் அய்யர். ராஜம் நின்று கொண்டே அதைப் படித்தாள். சிவகுரு அவள் தன்னைக் கவனிக்காமல் தான் அவளைக் கவனிப்பதற்குச் சாதகமாக இருந்த அந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்து, "அவ்வளவு வேகமாகப் படிக்காதே. மெதுவாகப் படி. உக்காந்துக்கோ. எவ்வளவு நேரம் நின்னுக்கிட்டே படிப்பே?" என்று படுக்கையின் ஒரு ஓரமாக அவள் உட்கார்ந்து கொள்ளும்படி சைகை காட்டினார்.

அவள் அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் உட்கார விருப்பமில்லாமல், ஆனால் அதைக் காட்டிக்கொள்ளவும் விரும்பாமல், அதைக் கவனிக்காதவள் போல் சிறிது தூரத்தில் இருந்த ஒரு நாற்காலியில் பட்டும் படாமலும் உட்கார்ந்து கொண்டு கடிதத்தை பேற் கொண்டு படித்தாள்.

"ராஜம், உனக்கு பாட்டுப் பாட வருமா" என்று இடையில் குறுக்கிட்டார் சிவகுரு.

அந்தக் கடிதத்தில் அவருக்கு சுவாரஸ்யம் இருக்கவில்லை. அவளுடைய குரலைக் கேட்பதிலும், அவளுடைய உடலழகைப் பார்ப்பதிலும்தான் அவருக்குச் சுவை.

"ஏன் மாமா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் ராஜம்.

"இந்தக் கடிதத்தைப் படிக்கறப்பவே உன் குரல் இவ்வளவு அருமையா — ஐ மீன் இனிமையா இருக்கே. பாட்டுப் பாடினா இன்னும் ஷோக்கா இருக்குமேன்னு தோணித்து."

"சுமாராப் பாடுவேன்."

"ஏதாச்சும் ஒரு பாட்டுப் பாடேன்" என்று சிவகுரு சொன்னதும் ராஜம் திடுக்கிட்டாள். நிஜமாத்தான் சொல்றாரா என்று நம்ப முடியாமல் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏன் ராஜம் அப்படிப் பார்க்கறே? சும்மா கூச்சப்படாமப் பாடு. உன்னை நான் சமையக்காரப் பொண்ணுவோ, என்னை உனக்குச் சம்பளம் கொடுக்கிற எஜமானனுவோ நினைக்கல்லே ராஜம். ஒரு பிரியத்தோடதான் கேக்கறேன்."

"வேண்டாம். அது எனக்குச் சரின்னு தோணல்லே."

"இதுலென்னம்மா தப்பு?"

"நீங்க சாப்பிடுங்க."

"நீ பாடினாத்தான் நான் சாப்பிடுவேன்."

"இன்னிக்கு வேண்டாம். இன்னொரு நாளைக்கு ஆகட்டும்."

"என்னிக்கு?"

முதலீடு செய்பவர்களுக்கெல்லாம் ஓர் அமுதசுரபி இந்துவே

ஆம். முதலீடு செய்யப்பட்ட உங்கள் செல்வம் நன்றாகப் பாதுகாக்கப் படுவதோடு மட்டுமின்றி, பல்கி பெருகிட வழிகாட்டுவது இந்து மோட்டார் பைனான்ஸ் கார்ப்பரேஷன்.



20%
வட்டி

நம்பிக்கையையும், நாணயத்தையும் தனது முழுமூச்சாகக் கொண்டு பணிபுரியும், இந்து உங்கள் முதலீட்டுக்கு 20% வரை வட்டி அளிப்பதோடுமல்லாமல், அழகியதோர் வெள்ளிப் பரிசையும் உங்களுக்குப் பெற்றுத்தருகிறது.

இந்து உறுதியுடனும், உத்தரவாதத்துடனும், உங்கள் முதலீட்டினைக் கட்டிக்காத்து உங்கள் செல்வம் பெருகிட வழிகாட்டுகிறது. வற்றாது வழங்கும் அமுதசுரபியே இந்து.

வட்டி விகிதம்—பிக்சட் டெபாசிட்டுகள்

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
16%	17%	18%	20%

IMFC


இந்து மோட்டார் பைனான்ஸ் கார்ப்பரேஷன்
H.O. 155, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை-600 017.
போன் : 445529

கிளைகள் 32, ரங்கநாதன் தெரு, சென்னை-600 017
18, சிங்கண்ண நாயக்கன் தெரு, சென்னை-600 001
24, வடக்குமாடவீதி, பூந்தமல்லி, சென்னை-600 056-போன்-69566
41, தொப்பாமுதலியார் தெரு, பெங்களூர்-560 001 போன் : 579585
194, வக்கீல் புதுத் தெரு, மதுரை-625 001 போன் : 34940
106, பெரியதெரு, திருவண்ணாமலை-606 601 போன் : 681
22, வணிகர் தெரு, காஞ்சிபுரம்-631 201 போன் : 3048

UIPC: IMF: 305

இந்துவுடன் சேர்ந்து வளம் பெறுங்கள்

ஒரே டீலக்ஸ் டிவி TS62



சீரான உன்னத ஹை-ஃபை ஒலிக்கு 10 வாட் ஒலிபெருக்கியும், 20 செ.மீ. டியூயல் கோன் ஸ்பீக்கரும் கொண்ட ஒரே டீலக்ஸ் டிவி சாலிடெர் TS62. இத்துடன் உங்கள் ரெக்கார்டு பிளேயர், டேப் ரெக்கார்டர், எப்எம் ஏஎம் (FM AM) டியூனர் முதலியவற்றை இணைத்து, டிவியில் நிகழ்ச்சி இல்லாத நேரங்களிலும் சாலிடெர் டிவியை உபயோகிக்கலாம்.

செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட தெளிவாகத் தெரியும் படத்தோற்றம். இதில் சாலிடெருக்கு நிகர் சாலிடெர் ஒன்றே.

இது மட்டுமின்றி, துரிதமான, சிறந்த சர்வீஸ் அளிப்பதில் பிரசித்திப் பெற்றது சாலிடெர்

HE 189 A

சாலிடெர்



''அப்பா, பிரார்த்தனையின்போது புகை பிடிக்கலாமா?''

''கூடாது மகனே, அது பாவம்.''

''அப்பா, புகை பிடிக்கும்போது பிரார்த்தனை செய்யலாமா?''

''தாராளமாகச் செய்யலாம் மகனே!''

—மஞ்சு தேவன்

''அப்பாவும், உங்க வீட்ல அம்மாவும் வந்ததுக்கப்புறம். எல்லாரும் சேர்ந்து இருக்கறப்ப.''

''பாத்தியா? அப்ப என்னோட தனியா இருக்கறப்ப பாடறது தப்புங்கற மாதிரித் தானே நீ நினைக்கிறே?''

''அது தப்புதாங்க.''

''ராஜம், உன்னையும் என்னையும் இந்த வீட்ல தனியா இருக்காப்பல விட்டுட்டு உங்கப்பாவும் உமாவும் டில்லிக்குப் போயிருக்காங்களே, எதுக்காகத் தெரியுமா?''

அவர் என்னசொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவளாக, ஒரு இனம் புரியாத சிறு அச்சத்துடன் ராஜம் அவர் முகத்தைப் பார்த்தாள்.

''உங்கப்பா உங்கிட்டே ஒண்ணும் சொல்லலியா?''

''இல்லியே, எதைப் பத்தி?''

''உமாவும் ஒண்ணும் சொல்லலியா?''

''ரெண்டு பேரும் எனக்கு எவ்வளவோ சொல்லியிருக்காங்க, மாமா. ஆனா நீங்க எதைப் பத்தி கேக்கறீங்கன்னு தெரியல்லே.''

''ராஜம் நீ மாமா, மாமான்னு என்னைக் கூப்பிடறது எனக்குப் பிடிக்கலே.''

''தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க. இனிமேல் கூப்பிட மாட்டேன், ஐயா.''

''ஐயாவா? இது அதைவிட மோசம்.''

''பின்னே எப்படிக் கூப்பிடறது? எனக்கு ஒண்ணும் புரியலே.''

''புரிஞ்சுப்பே. எனக்குத்தான் எப்படிச் சொல்றதுன்னு புரியல்லே.''

''நீங்க பேசறதைக் கேட்க எனக்கு என்னமோ பயமாயிருக்கு.''

''பைத்தியம். எதுக்காகப் பயம்?''

''இந்த மாதிரிப் பேச்சு நம்ம ரெண்டு பேருக்கு நடுவே பேசிக்கறது சரியில்லே.''

''நான் ஒண்ணுமே தப்பாப் பேசலியே ராஜம். நீ என்னவோ நினைச்சுப் பயப்படறே போலிருக்கு. அதனாலே நான் இப்பவே உன் கிட்டே உடைச்சுச் சொல்லிடறேன். எனக்கு விஜயா ஒருத்திதான் குழந்தைன்னு உனக்குத் தெரியும். ஆண் குழந்தை இல்லையேங்கற ஏக்கம் என்னை வாட்டிண்டே இருக்கு. உமாவுக்கு இனிமேல் குழந்தை பிறக்காது. எப்பவோ அவளோட கர்ப்பப் பையை எடுத்தாச்சு. அதனாலே என் ஆசை நிறைவேறணும்னு நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணும். அப்படி நான் பண்ணிக்கிறதுக்கு உமாவும் சம்மதிச்சிருக்கா. எழுத்துலே எழுதித் தரவும் அவ தயாரா இருக்கா. உன்னைப் பார்த்தது லேந்து எனக்கு உன் மேல ஒரு அபிப்பிராயம் விழுந்துட்டுது. அதை உங்கப்பா கிட்டயும் உமா கிட்டயும் சொன்னேன். அவங்களுக்கும் இதுல பிரியம்தான். அவங்க உன் கிட்டச் சொல்லியிருப்பாங்கன்னு நினைச்சேன். சொல்லலை போலிருக்கு. பரவாயில்லை. என் மூலமாவே நீ இந்த சந்தோஷ சமாசாரத்தைக் கேட்கணும்னு. உனக்குச் சொல்லி உன் சம்மதத்தை வாங்கற பொறுப்பை என்னிடமே விட்டுட்டுப் போயிட்டாங்க போல இருக்கு. அவங்களுக்கு இதுல சம்மதமில்லாட்டா நம்ம ரெண்டு பேரையும் இப்படித் தனியா விட்டுட்டுப் போயிருப்பாங்களா? என்ன சொல்றே ராஜம்? உனக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் தானே?''

சிவகுருவின் இந்த நீண்ட பேச்சு எதிர்பாராமல் யாரோ அவளுடைய செவிட்டில் பளாரென்று அறைந்து விட்டதைப் போல ராஜத்தைத் தாக்கியது. அவளுடைய முகம் வெளிறி விட்டது. பொடிப் பொடியாக வியர்வைத் துளிகள் அவள் நெற்றியின்மீது அரும்பின.

''என்னாலே இதை நம்ப முடியல்லே'' என்றாள் ராஜம். ஆனால் அவள் மனத்தில் நினைத்துக் கொண்டது. 'நான் உங்களை நம்பவில்லை'.

''நம்பாமலிருக்க என்ன இருக்கு ராஜம்? என்னை உனக்குப் பிடிக்காமலிருந்தால்தான் நீ இதை நம்பத் தயங்கணும். என்னை உனக்குப் பிடிக்கலையா?''

''இந்தப் பேச்சே எனக்குப் பிடிக்கலே.''

''ஏன்?''

''காரணம் சொல்லணும்னு தேவையில்லேன்னு நினைக்கிறேன்.''

''நீ அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம் ராஜம். இன்னிக்கு வீட்டுக்குப் போய்ப் படுத்து நல்லா யோசிச்சுப் பாரு. வேணும்னா இன்னும் நாலு நாளைக்கு யோசி. அப்புறம் உன் முடிவை எனக்குச் சொல்லு. ஆனா ஒண்ணு. இதைப் பத்தி உங்கம்மா கிட்டச் சொல்லாதே. வேறே யார் கிட்டயும் சொல்லாதே. உங்கப்பாவுக்கும் லெட்டர் கிட்டர் எழுதிடாதே. எல்லாம் ரகசியமாகவே இருக்கட்டும். நாம ஒரு முடிவுக்கு வந்ததுக்கப்புறம் சர்ப்ரைஸா எல்லாருக்கும் சொல்லலாம். அப்படி உனக்கு இஷ்டமில்லாமப் போச்சுன்னா, இந்த மாதிரி ஒரு ப்ரபோஸல் இருந்ததுங்கறதே தெரிய வேண்டாம்.''

''என்னை மன்னிச்சுடுங்க ஐயா. அஞ்சு நாளானாலும் பதினஞ்சு நாளானாலும் நான் இதுக்கு ஒத்துக்குவேன்னு தோணல்லே'' என்றாள் ராஜம். (தொடரும்)



நெஞ்சங்கள்

● ஓ நெஞ்சமே! ''குற்றவாளி யார் என்று நீயே சொல் — குழந்தையைக் கடத்த முயற்சி செய்த தியாகராஜனா? இல்லே, அக்குழந்தையைக் காப்பாற்றுகிறேன் பேர்வழி என்று எடுத்துக் கொண்டு போய் அவளைப் பெற்றோர்களிடம் ஒப்படைக்காமல், லட்சுமியிடம் விட்டு விட்டு, தாமதப்படுத்தி, கதை வளர வழி வகுத்த சிவாஜி கணேசனும் மகேந்திரனுமா?''

நெஞ்சம்: இருவரும் இல்லை. கதாசிரியர் தான் குற்றவாளி. அதனால்தான் அந்த வழவழா.

● **நெஞ்சமே!** சீரியஸாக எடுத்துக்கொண்டு போக வேண்டிய கதையைச் சிறுபிள்ளைத்தனமாக்கிச் சிதற வைத்திருப்பது டைரக்டர் மேஜரின் கவனக் குறைவுதானே?

நெஞ்சம்: ஆமாம்! பயங்கரமான தோற்றத்தில் ஒரு வில்லனை (சுதர்சன்) அறிமுகப்படுத்திய பிறகு அவனை வலை போட்டுப் பிடித்த சிவாஜி கணேசன் போலீசில் ஒப்படைக்காமல் நாலு பேரை நம்பி விட்டு விட்டு ஜாலியாகப் பாட்டுப் பாட வைத்திருப்பதும் அதில் சேர்த்தி.

● **நெஞ்சமே!** குறை சொல்வதை நிறுத்தி விட்டு சிவாஜி கணேசனின் நடிப்பை நீ பாராட்ட மாட்டாயா?

நெஞ்சம்: ஒய் நாட்? அவர் நடிக்காத நடிப்பா? இதில் அவரைப் பிரித்துக் காட்டிப் பாராட்டத் தனியான குணச்சித்திரம் ஒன்றும் தெரியவில்லை... அதனால்...''

● **நெஞ்சமே!** கதாநாயகி ஜோதியா? லட்சுமியா? மஞ்சுளாவா? யாரைத் தேர்ந்தெடுத்தாய்?

நெஞ்சம்: ஒரு தாய் குழந்தையைப் பிரிந்த ஏக்கத்தைக் காட்டச் சந்தர்ப்பம் இல்லாமல் ஜோதி ஒதுங்கி விடுகிறார். லட்சுமியிடம் குழந்தையை உரிய இடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்கிற எண்ணம் அமுங்கிப்போய் தம்பி மகேந்திரனை போலீசில் சிக்காமல் காப்பாற்றும் சுயநலமே தலைதூக்கி நிற்பதால் அவரும் சோபிக்கவில்லை. 'பிளாஷ் பேக்' காட்சியில் வரும் நாயகி மஞ்சுளாவுக்கும் அந்த ஸ்தானம் பொருந்தாது. ஆகையால் மூவருமே...

● **நெஞ்சமே!** லாட்டரிப் பித்தராக வரும் தேங்காய்க்காவது இடம் கொடுப்பாயா?

நெஞ்சம்: பெருமாள் படத்தைச் சுற்றிலும் லாட்டரிச் சீட்டுக்களை ஒட்டி வைத்து வேண்டிக் கொள்வதிலிருந்து வேஷ்டி அவிழ்ந்த நிலையில் அரியாணு லாட்டரி டிக்கட்டைத் தூக்கிக் கொண்டு பேங்குக்குள் நுழையும்வரை சக்கைப்போடு போடுகிறார்.

● **நெஞ்சமே!** உன் முடிவுதான் என்ன?

நெஞ்சம்: நெஞ்சில் நிறையவில்லை.

சின்னஞ் சிறுசுகள்

● குருடனாகவும், ஊமையாகவும், கணவனாகவும் மோகனை 'நடிக்க' வைத்த மாதிரி சினிமாவிலும் யாராவது நிஜமாகவே நடிக்க வைக்கக் கூடாதா? கோணங்கித் தனங்கள் செய்து நம் எரிச்சலுக்கு ஆளாகாமல் தடுக்கக் கூடாதா?

சுலக்ஷணா பாத்திரம் பெண்களைத் தலைகுனிய வைக்கிறது. என்னதான் வீடு வாடகைக்குப் பெறத் திருமணம் ஆனதாகப் பொய் சொல்லியிருந்தாலும் அதற்காக முன் பின் தெரியாதவனைக் கணவனாகத் தன் வீட்டில் சேர்த்துக் கொள்ள எந்தப் பெண்தான் முன்வருவாள்?

. பிரபு குடிக்கு அடிமையான வக்கீலாக வருகிறார். பாக்யராஜ் சுழற்றிய மாதிரி குச்சியைச் சுழற்றி ஒரு சண்டையும் போட்டிருக்கிறார். மாதிரிதான்.

சிலுக்கு ஸ்மிதாவின் டான்ஸ் நடுக் கூடத்திற்கு வந்து விட்டது. 'ப்ச'

வெண்ணிற ஆடை மூர்த்தி தன் மனைவி சத்யசித்ரா மீது காட்டும் சந்தேகத்தில் விரசம் தலைதூக்கி நிற்கிறது.

படத்தை விட இத்துடன் காட்டப்பட்ட 'ஏஷியாட் பார்ட்-4' கலர் செய்திப் படம் சுவாரஸ்யமாய் இருந்தது.

மாதுளை முத்துக்கள்

● பச்சை மிளகாயைக் கடித்த மாதிரி ஒரு கதை. காரத்தைச் சொல்லவில்லை. கதையில் உள்ள வி-காரத்தைச்சொல்கிறேன்.

தறுதலைப் பையன் சேகர். சதா சிட்டாட்டமும் பெண்களை வம்புக்கு இழுப்பதும்தான் வேலை. துஷ்ட நண்பர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டுதன்னைக்காதலிப்பவளையே கடத்திச் சென்று பங்களா ஒன்றில் அடைத்து வைக்கிறான். அப்புறம் அவளாலேயே திருந்தித் தாலியும் கட்டுகிறான். இருவருமே ஜோடியாக வீடு திரும்பியதும் அவன் கணவனைத் 'திடும்' என்று 'வெளியே போ' என்கிற போதே குளத்தில் புரளும் எருமை மாதிரி கதையும் படுத்து விடுகிறது.

வீட்டை விட்டு வெளியே போன சேகர் வண்ணாத்தி சொக்கி வீட்டில் தங்குகிறான். அவள் அவனைக் கற்பனையிலேயே திருமணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்திருப்பதாகச் சொல்வது அநாகரிகமான கற்பனை.

சேகராக வருபவர் சுரேஷ். கதாநாயகனுக்குரிய வீர தீரங்கள் இல்லாத கதாபாத்திரம். அதனால் சோபிக்கவில்லை.

கதாநாயகியாக நடிப்பவருக்குச் சிரிக்கத் தெரிய வேண்டும்: அழத்தெரிய வேண்டும். இரண்டையும் மனோசித்ரா இப்படத்தில் வெளிப்படுத்தவில்லை. அடுத்த படத்தில் பார்ப்போம்.

நடிப்பில் நிற்பவர்கள் ஜான் மோகனும், விஜயசாந்தியும்தான்.

டைரக்டர் கே. எம். பாலகிருஷ்ணனைப் பாராட்டப் படம் வாய்ப்புத் தரவில்லையே!

திரைஞானி'

சின்னஞ் சிறுசுகள்



சின்னச் சின்ன அழுத்தங்கள்! யமஹா எவ்வியது. இரண்டு பக்க அவென்யூ மரங்கள் படக்கென்று பறந்தன. கீழே அஸ்ஃபால்ட் பரப்பு தலை எகிறிப் பாய்ந்தது. கி. மீ. கள், பாலங்கள், வண்டிகள், கார்கள், மனிதர்கள் எல்லாம் வெறும் வெளிச்சத் தீற்றல்களாக இரு பக்கமும் வழிந்தார்கள்.

கண்களில் வெறி. தலை, புஜங்கள் இரண்டிலும் ஷர்ட் துணியின் துடி துடிப்பு! பல்லைக் கடித்த வண்ணம் வாகனத்தைப் பொல்லாத விரட்டு விரட்டினான் அவன்.

தூரத்திய அந்த நீண்ட பாலத்தைத் தாண்டியதும் சிறிது தளர்த்தினான்.

மொத்தம் எத்தனை சங்கிலி இருக்கும்? எட்டுச் சங்கிலி. ஒவ்வொன்றும் எத்தனை பவுன்? இரண்டு பவுனுக்குக் குறையாது. சில ஆறு ஏழு கூட இருக்கும். இருபத்தி ஐயாயிரத்துக்கு வரும்படி குறையாது. பன்னிரண்டு முயற்சிகளில் எட்டுத்தான் வெற்றி பெற்றன.

அந்த எட்டாவது பெண் எப்படிச் சாடி வந்தாள். விடவில்லை. அவன் சட்டைப் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டு அடாவடியாகக் கூச்சல் போட்டு...

ஒரு விநாடியில் பாலன்ஸ் தவறிக் கீழே விழுந்திருக்க வேண்டியது. ஒரு சாகஸத்தில் அவன் யமஹா விழாமல் சமாளித்தது.

தங்கம், தங்கம், தங்கம்! இந்தப் பைத்தியம் இருக்கிறவரை ஜனங்கள் உருப்படப் போவதில்லை.

மினுக்கிக்கிட்டுத் தெருவிலே வராங்க. அறுத்து எடுத்துட்டா வாழ்க்கையே போச்சு! அவன் அபகரித்த எட்டுப் பெண்களும் ராத்திரி தூங்க மாட்டார்கள்.

இதற்குள்ளாகப் போலீசுக்குச் செய்தி போயிருக்கும். கண்ட்ரோலுக்குச் சொல்லி ஊர் முழுதும் ஒலிபரப்பி விருப்பார்கள்.

—எக்ஸ் எக்ஸ் எக்ஸ் 8181 யமஹாவில் போகும் ஆசாமியை எங்கே கண்டாலும்

சங்கிலித் திருடன்

புஷ்பா தங்கதுரை



பிடிக்க வேண்டியது. அவசரம், அவசரம். போகிற திசை நகரத்தை விட்டு வட மேற்காக இருக்க வேண்டும்.

போலீஸ் ஜீப்புகளும் வான்களும் பறந்திருக்கும். உண்மையில் சில அவனது நடத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கும். வெறியாகப் போலீஸார் வந்து கொண்டிருப்பார்கள்.

ஒருவேளை அகப்பட்டால்....

-மைலார்ட்! என் அப்பா என் செலவுக்குத் தகுந்த பணம் கொடுப்பதில்லை. நான் ஒரு இள வாலிபன். என் மற்ற சகாக்கள் பணத்திலும் வசதியிலும் புரளும்போது நான் ஒருவன் சும்மா இருக்க முடியுமா? வரும்படிக்காகச் சங்கிலியை அறுத்தேன். நிச்சயம் அது என் குற்றமல்ல. இல்லை – இல்லாமை இடையே எழும் போராட்ட விளைவுதான் இது!

ஆமாம். அப்படித்தான் தைரியமாகச் சொல்லணும். உண்மையும் அதுதானே! இந்த அப்பா பஞ்சாங்கம், மாசம் ஐம்பது ரூபாய் பாக்கெட் மணி தர்றதுக்கு மூக்காலே அழுகுது. ஐநூறு ரூபா வேணும்! ஆமாம்! ஒவ்வொருத்தனும் டிரைவ்-இன்லே வந்து செலவழிக்கிறதைப் பார்த்தா?

எட்டு சங்கிலியும் பத்திரமா இருக்கிறதா? இவர் விளைவு தோன்ற அந்த நீளச் சாலையில் ஒரு ஒதுக்குப் புறத்தைத் தேடினான்.

இருட்டிவிட்டது. மரங்கள் வெறும் நிழல் கொம்புகளாக நின்றன. வெல்வெட் போன்ற ஒரு முன்னிரவு வந்துகொண்டிருந்தது. தூரத்தில் ஒரு கிராமத்தின் சிணுங்கலான வெளிச்சங்கள் தெரிந்தன.

என்ன கனம்! பாண்ட் பாக்கெட் முழுக்கும் சங்கிலி! சங்கிலி! சரியான வேட்டை..! மைலார்ட்! அப்படித்தான் திருடுவேன்! நாட்டில் சமதர்மம் வரவில்லை.

பையில் இருந்தா ஆபத்து. பைக்கின் விலாப்புறத்தில் அந்தக் கித்தான்-கிட் இருக்கிறதே அதில் போட்டு வைத்தால்...

அடாடா! அதன் ஓரத்தில் ஓட்டை ஒன்று இருந்ததே சின்னதாகச் சுண்டு விரல் போகிற மாதிரி!....

உள்ளே அழுக்குத்துணிஇருந்தது. அதில்சங்கிலிகளை வைத்துஉருண்டையாகக் கட்டிக் கித்தான் கிட்டில் போட்டான். இனி பத்திரமாக இருக்கும்.


வண்டி மீண்டும் புறப்பட்டது. அதே வேகம். இருட்டில் அவன் கண்கள் துல்லியமாகச் சாலையைப் பார்த்தன.

ஹூம்! போலீசாவது என்னைத் தொடர்வதாவது!

நிச்சயம் தொடர முடியாது. ஆனால் செய்தி தெரிவித்து நாட்டுப்புறப் போலீஸ் போகிற வழியை மறித்துக்கொண்டு நின்றால்...?

ம்ஹூம்! நான் செய்தது தப்பிதமே இல்லை. அந்தக் குடும்பங்களுக்கு இந்தச் சங்கிலிகள் வெறும் நாகரிகத்துக்குத்தான். அத்தியாவசியத்துக்கு அல்ல!

அப்படிப்பட்ட பொருளை நான் எடுத்துக் கொண்டால் என்ன?



ஹ ஹா! சரியான திருட்டு! மோட்டார் சைக்கிளில் திருட்டு! யாரும் லேசில் கண்டுபிடித்துவிட முடியாது. இதை நிறைவேற்றுவதும் சுலபம். பைக் ஓட்டத் தெரிந்தால் போதும்!

அதென்ன? பின்னால் வெளிச்சம்!

தகதகவென்று அதன் சீற்றம். அதி உக்கிரமான கதிர்களை வாரி விட்டுக்கொண்டு ஏதோ வாகனம் வருகிறது.

போலீசாக இருக்குமோ?

இருக்காது. அதற்குள்ளே போலீஸாவது, வரதாவது?

ரோடு முரண்படாமல் நேர் கோடாக ஓட, யமஹாவைக் கிட்டத்தட்ட அவன் பறக்க வைத்தான்.

அவன் அதிரவில்லை. ஆனால் ரோடு அதிர்ந்தது. காற்று அவன் முகத்தில் மோதிச் சீறிக் கொண்டு ஓடியது. கண்களிலிருந்து நீராக வழிந்தது. வண்டியில் வெளிச்சத்தை அவன் அணைத்திருந்தான். ஏதோ ஒரு பைசாச நிழல் போல் கரிதாக ஓடினான்.

ஐந்து நிமிடத்திற்குப் பிறகு திரும்பினால் அதே புதிர் வட்டம் நன்றாகத் தெரிந்தது. அதன் வெளிச்சத் தண்டு முன்னை விட அவனை நெருங்கியிருந்தது. பின்னால் வரும் வாகனம் அதிஅவசரத்தில் வருகிறது என்பது அந்த வெளிச்சத்தின் துடிப்பிலிருந்து தெரிந்தது.

உள்ளே அவன் மனசுக்குள் அது போலீஸ் வண்டி என்று தோன்றியது. போலீசுக்கு இப்போது நிறைய நவீன சாதனங்கள் இருக்கின்றன. ஒரு நொடியில் ஆளைத் தூரத்தி வந்து விடுவார்கள்.

ஹூம் வரட்டுமே!

சொன்னானே தவிர கை பரபரத்தது. வாகனத்தில் வேகம் ஏறியது. சூடு ஒன்று அவன் தலைக்குள் திடீரென்று பற்ற ஆரம்பித்தது. இரண்டு பக்க உலகங்களும் அவனுக்குப் பயந்து ஒதுங்கித் தூரமாக ஓடின.

ஏலம் போடுபவருடன் பேட்டி:
''சமீபத்தில் என்ன படம் பார்த்தீங்க?''
''டார்லிங்! டார்லிங்! டார்லிங்!''
–ஜி. நடராஜன்



ஒரு குடியிருப்புப் பகுதி மினுக்கும் வெளிச்சங்கள் அவனை நோக்கி வந்தது.

ஏதோ ஒரு புதுக் காலனி! நகரத்தைச் சுற்றித் தூர தூரங்களில் எத்தனையோ புதுப் புதுக் காலனிகள் தோன்றியிருந்தன.

ரோடு அந்தக் காலனியை இரண்டாக வகிர்ந்து கொண்டு ஓடியது.

அதை நெருங்க நெருங்க, அசுர லாரிகள் இரண்டு முன்னே ஓட, அவைகளை விலக்கி ஓட அவனுக்கு வழி இல்லை. ரோட்டில் அங்கங்கே சொற்ப நடமாட்டமும் இருந்தது. லாரிகளும் வேகமாக ஓட, இடைவெளி விட்டுப் பின்னால் ஓட்டினான் அவன்.

அந்தச் சாலையின் இருபுற வீடுகளும் பறந்தன. சிலவற்றின் சத்தங்கள்கூட அவனது காதுகளில் ரீங்கரித்து விழுந்து ஓடின. அங்கங்கே துணுக்குகளாக வார்த்தைகள் விழ,

ஒரு வீட்டிலிருந்து, –ராதா! வெளியே போகாதே! என்று உச்சமான குரல் கேட்க, அதே நேரத்தில் சாலையின் குறுக்கே ஒரு எட்டு வயதுப் பெண் துள்ளி ஓடினாள்.

லாரிகள் கடந்த உடனே அவள் சாலையைக் கடக்கவேண்டுமா? தொடர்ந்து வரும் மோட்டார் பைக்கை அவள் கவனிக்கவில்லை, அவனும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அந்தப் பெண்ணின் மீது முன் சக்கரம் படும்போது அவன் கண்களை மூடினான்.

சொத்தென்று அவன் ஹாண்டில் பாரில் ஏதோ பட்டு, அப்பால் தெறித்து விழுந்தது. அது அந்தப் பெண்தான் என்று அவனுக்குத் தெரியும்.

கைகள் பதற, கண்களில் ஏதோ திரவம் விழுந்து உள்ளே கரிக்க, அவன் வெகு சீக்கிரம் தன்னைச் சமாளித்துக் கொண்டு ஓட்ட ஆரம்பித்தான்.

நல்ல வேளை: அந்தப் பகுதியில் சாலை விளக்குகள் வரவில்லை. நடை பாதையிலும் யாருமில்லை. இரண்டு லாரிகள் பின்னால் ஒரு மோட்டார் பைக் போனதா என்பதே யாருக்கும் தெரியாது.

வண்டியை விரட்டிக்கொண்டு ஓட்டினான். சீக்கிரம் காலனி கடந்துவிட்டது. திரும்பவும் பரந்த வெளிக்கு வந்ததும் அவன் ஒரு எக்கு எக்கி இரண்டு லாரிகளையும் கடந்தான். பிறகு செயற்கைக் கோளின் வேகத்தில் வெறும் நிழலாகச் சாலையில் ஓட்டினான்.

உடம்பில் பதற்றம் இன்னும் இருந்தது. திருடியதோடு இல்லை. ஒரு கொலையையும் செய்து விட்டான்.

ஹாண்டிலைச் சரியாகப் பிடிக்க முடியவில்லை. வழுக்கியது. அதன் வேகம் நடுங்குவதைப் பார்த்தால் கீழே உதிர்ந்து விடுவான் போல இருந்தது. அரைக் கணம் என்றாலும் அந்தப் பெண்ணை அவன் நன்றாகப் பார்த்திருந்தான். நெருக்கமாகப் பார்த்திருந்தான். ரொம்ப இளசு! பிஞ்சு! இரட்டைப் பின்னல் போட்டிருந்தது. முனகுவதற்குக்கூட நேரமில்லாமல் இறந்திருக்கும்.

காலனியை விட்டுச் சிறிது தூரத்தில் லாரிகள் வேறு பக்கம் திரும்பி விட்டதாக உணர்ந்தான். மேலே சிறிது தொலைவு

"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு"



"சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான்
எவருக்கும் தேவைப்படும்
23 மூலாதார ஊட்டச் சத்துக்களால்
முழுமை பெற்றது.

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.



"அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு"

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

-GLC. 10-2015 TM



ஆண் - பெண் நல்வாழ்வு வாழ அழைக்கிறோம்

பிரபல பழனி வைத்திய திலகம், வைத்யராஜ்

டாக்டர் எஸ். காளிமுத்து, R.M.P. (IND). V.V.C. A.M.I.H.,

அவர்களிடம் சிகிச்சை பெற்று குணமும், மகிழ்ச்சியும் அடையுங்கள்

சித்த வைத்தியத்தில் இந்தியாவின் சுற்றுப் பயணத்தில் தனிச் சிறப்பு பெற்றவர். சித்த வைத்திய மாமன்னன், சித்த வைத்தியச் செம்மல், சித்த வைத்தியக் கவிவேந்தன், வைத்தியத் திலகம், வைத்தியராஜ், பல பாராட்டுப் பட்டங்களும், மெடல்களும், பதக்கங்களும் பெற்றவர். பல தலைமுறைகளாக வைத்தியக் குடும்பத்தின் ஒரே வாரிசாகத் திகழ்பவர். முன்னாள் சென்னை, நாட்டு வைத்தியக் கல்லூரியில் வி.வி. கோர்ஸ், சித்த வைத்தியமும் ஆங்கில வைத்தியமும் பயின்றவர். ஹோமியோபதியிலும், ஆயுர்வேதத்திலும் அரசாங்கத்தாரால் பதிவு பெற்றவர். முதன் முதலாக டெல்லி, பூனா, பம்பாய், பெங்களூர் மற்றும் தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் செய்து, பல்லாயிரக் கணக்கான வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தி நற்சாட்சிகளும் பெற்றவர். உலகம் புகழ் பெற்ற சிட்டுக்குருவி லேகியம், தங்கபஸ்பம் போன்ற ஏராளமான மருந்துகள் தயாரித்து தனிப் பெயர் பெற்றவர் இவரே.

கீழ்க்கண்ட தொந்தரவுகள் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள்

தளர்ச்சி, குழந்தை பாக்கியம் இல்லாத பிரச்சினை, உடல் பலவீனம், இல்வாழ்க்கையில் மகிழ்ச்சிக் குறைவு, உடனே பலவீனம், ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, தேக வலி, நித்திரைக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, உறுப்புக்கள் தளர்வு, அடிக்கடி சிறுநீர், சரும நோய்கள், வயிற்றுவலி, இருமல், இளைப்பு, ஆஸ்த்துமா, தும்மல், நவநாவ வியாதிகள், வாய்வு, மற்றும் இதில் குறிப்பிடாத வியாதியஸ்தர்களுக்கு எமது 63 வருட அனுபவ மருந்துகளால் சுகவாழ்வு வாழலாம். ஆர்டருடன் மருந்து விவரங்களைக் குறிப்பிட்டு வி.பி.பி. தபால் பார்சலில் பெறலாம். வி. பி. பி. தபால் செலவு இலவசம். கேம்பிலும், நேரிலும் டாக்டரிடம் மருந்துகள் பெறலாம்.

(பழனி சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே)

ஒரு மாத சிகிச்சை மருந்துகள்

தங்கபஸ்பம், ஸ்பெஷல் செட் ரூ. 330, தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம் 30 வேளை ரூ. 60, 60 வேளை ரூ. 120, 90 வேளை ரூ. 180

ஸ்பெஷல் லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் (மிக உயர்தரம்) ரூ. 90

ஆ. இருமல் செட் ரூ. 124, சரும நோய் செட் ரூ. 140, 260, வயிற்று வலி செட் ரூ. 92

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி, விலாசங்கள் கவனிக்கவும்:

1-ந் தேதி திருநெல்வேலி, நெல்லை லாட்ஜ், ஜங்ஷன் ரோடு, போன் 147, காலை 8 மணி முதல் 12 மணிவரை
1-ந் தேதி நாகர்கோவில், பகல் 2 மணி முதல் 4 மணிவரை, ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், தபாலாபீஸ் சந்திப்பு
2-ந் தேதி மதுரை மணிக்கபே, டவுன்ஹால் ரோடு, போன்: 2019 காலை 8 முதல் பகல் 12 மணி வரை
2-ந் தேதி புதுக்கோட்டை, மாலை மணி 4 முதல் 5-30 மணி வரை, சாந்தி லாட்ஜ் (வசந்தா லாட்ஜ்) போன்: 46
3-ந் தேதி காரைக்குடி, காலை 9 மணி முதல் 11 மணி வரை, ஏ.வி.எம்.பி.எல். ரெஸ்ட் ஹவுஸ், போன்: 309
3-ந் தேதி பட்டுக்கோட்டை, பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை, ஹோட்டல் அலங்கார், மணிக்கூண்டு சமீபம்
3-ந் தேதி மன்னார்குடி, மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை, மன்னை லாட்ஜ், ஸ்டேட் பாங்க் அருகில்
4-ந் தேதி திருச்சி, ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை, போன்: 4601
4-ந் தேதி கரூர், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை, பெரியார் லாட்ஜ், ஜவஹர் பஜார்
5-ந் தேதி தஞ்சாவூர், காலை 8 மணி முதல் 12 மணி வரை, ராஜா ரெஸ்ட் ஹவுஸ், போன்: 57
5-ந் தேதி திருவாரூர், மாலை 2 மணி முதல் 4 மணி வரை, அபூபக்கர் பில்டிங், நாகை ரோடு, விஜயபுரம்
5-ந் தேதி நாகப்பட்டினம், இளங்கர் விலாஸ், ரயில்வே ஸ்டேஷன் எதிர், மாலை 5 மணி முதல் 6 மணி வரை
6-ந் தேதி காரைக்கால், அசோக் லாட்ஜ், பஸ் ஸ்டாண்டு எதிர், காலை 8 மணி முதல் 10 மணி வரை
6-ந் தேதி கும்பகோணம், காலை 12 மணி முதல் 2 மணி வரை, தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம்
6-ந் தேதி மாயவரம், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை, காளியாகுடி லாட்ஜ், பெரியகடை வீதி, போன் 460
6-ந் தேதி சிதம்பரம், மாலை 5-30 மணி முதல் 7 மணிவரை, ஜெயராம் லாட்ஜ்
7-ந் தேதி பாண்டிச்சேரி, காலை 8 மணி முதல் 9-30 மணி வரை, (அருணா லாட்ஜ்) பாரிஸ் லாட்ஜ், ஜவஹர்லால் [நேரு வீதி, போன்: 352
7-ந் தேதி திருவண்ணாமலை, காலை 10 மணி முதல் 12 மணி வரை, மாடர்ன் கபே.
7-ந் தேதி செங்கல்பட்டு, மாலை 4 மணி முதல் 6 மணி வரை கணேஷ் லாட்ஜ்
7-ந் தேதி கடலூர் என்.டி. காலை 10-30 மணி முதல் 12 மணி வரை, ஹோட்டல் பிருந்தாவனம்
10, 11-ந் தேதி சென்னை, காலை 9 மணி முதல் 12 மணி வரை, 3 முதல் 5 மணி வரை நியூ உட்லேண்ட்ஸ் ஹோட்டல்
12-ந் தேதி காஞ்சிபுரம், ஸ்ரீராமா லாட்ஜ், நெல்லுக்காரத் தெரு, காலை 10 மணி முதல் 12 மணி வரை
12-ந் தேதி ஆரணி பகல் 3 மணி முதல் 5 மணி வரை கிரிஜா லாட்ஜ், காந்தி ரோடு எதிரில். போன்: 63111
13-ந் தேதி வேலூர், என். ஏ. காலை 10 மணி முதல் 12 மணி வரை, அசோக் லேண்ட்மார்க், போன்: 123
13-ந் தேதி குடியாத்தம், பகல் 3 மணி முதல் 5 மணி வரை, அலங்கார் லாட்ஜ்
13-ந் தேதி கிருஷ்ணகிரி, காலை 9 மணி முதல் 10 மணி வரை, ஸ்ரீராம் லாட்ஜ், போன்: 139
13-ந் தேதி தர்மபுரி, பகல் 12 மணி முதல் 1 மணி வரை, சீனிவாசா லாட்ஜ்
13-ந் தேதி சேலம், பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை, லட்சுமி ராஜ்பவன், போன்: 2301
14-ந் தேதி மதுரை காலை 9 மணி முதல் 12 மணி, மாலை 2 மணி முதல் 4 வரை, சந்தானம் லாட்ஜ்
15-ந் தேதி ஈரோடு, காலை 10 மணி முதல் 12 மணி வரை, நவபவனம் லாட்ஜ், போன்: 907
15-ந் தேதி திருப்பூர், பகல் 2 மணி முதல் 4 மணி வரை, ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ், போன்: 186
15-ந் தேதி பொள்ளாச்சி, மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை, கோபால் பில்டிங், போன்: 666
16-ந் தேதி கோவை காலை 9 மணி முதல் 12 மணி வரை, விஜயா லாட்ஜ், போன்: 22669
17, 18, 19-ந் தேதி சென்னை நியூ உட்லாண்ட்ஸ் ஹோட்டல் காலை 10 முதல் 12 மணி வரை, மாலை 3 முதல் 5 வரை
20, 21-ந் தேதி பம்பாய், பிரகாஷ் லாட்ஜ், ரயில்வே சமீபம், செம்பூர், போன்: 521049 [போன்: 63111
22-ந் தேதி கோவை, காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை ஹோட்டல் குரு
23-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை பழனி தலைமை வைத்தியசாலை.

எமது மருந்துகள் கிடைக்கும் இடம்: **கவிதா எண்டர்பிரைசஸ்,**
26, வாலாஜ் ரோடு, (மவுண்ட் ரோடு, பி. ஆர். & சன்ஸ் அருகில்) சென்னை-600 002

GOVT. REGD. T.M. No. 204841 REGD. 15443 MFG. LIC. No. 5

போன்: 316, 316-A, 420 தந்தி: சித்தர்

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி-624 601

(பழைய தாராபுரம் ரோடு, (இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்)

போவதற்கு முன் அந்த வெளிச்சத் தண்டு திரும்பவும் அவன் பின்னால் வருவதை உணர்ந்தான். அதே நடுநடுங்கி வரும் கதிர் வட்டம்.

இந்த முறை அவன் தைரியம் சற்று மாற்றுக் குறைந்திருந்தது. உள்ளே உடலில் புதிதாக ஓர் அயர்ச்சி வந்திருந்தது.

மீண்டும் ஒரு விளக்கில்லாத காலனி வர, திடீரென்று யோசித்து, ஒரு கிளைத் தெருவுக்குள் திரும்பி பைக்கை நிறுத்தினான்.

தாமதித்தான். பிரதான சாலையைப் பார்த்துக் கொண்டே இருக்க; போலீஸ் லாரி திரும்பாமல் ஒரே வேகத்தில் மேலே போய் விட்டது.

சில நிமிடம் யோசித்தான். இனிமேல் மேலே போகக் கூடாது. திரும்ப வேண்டியது தான். ஏதாவது வளைவான வழி இருக்கிறதா?

வண்டியைக் கிளப்பி, ஊரை ஒரு பிரதட்சிணம் சுற்றி ஒரு உத்தேசப் பாதையைப் பிடித்தான்.

இருபது நிமிடப் பிரயாணம். இப்போது ஒரு ஊர் போல் மற்றொரு காலனி குறுக்கிட்டது.

உள்ளே அதன் சாலையில் போனபோது அந்தக் கூட்டமும் இரைச்சலும் அவன் உணர்வுகளை மரத்துப் போகச் செய்தன.

அது அந்தப் பழைய காலனியேதான். அந்தக் கூட்டம் அந்த விபத்து நடந்த இடத்தில் கூடிய கூட்டம்தான்.

அவன் மோட்டார் பைக் கூட்டத்தை நெருங்கி விட்டிருந்தது. ஒரு போலீஸ்காரர் அவனை உற்றுப் பார்த்தார். அவன் உள்ளே ஒரு திமிர்ப் புரட்சி பரவ, மரத்துப்போய் அங்கே நிற்க,

—நீங்க போறவங்கதானே! ஏன் நிறுத்திக் கூட்டம் போடறீங்க? என்றார் போலீஸ்காரர் கோபமாக.

அவன் சட்டென்று வண்டியைக் கிளப்பினான். கூட்டத்தின் ஓரமாக ஊறும்போது அவன் அந்த உடல் இருந்த பக்கம் திரும்பவே இல்லை. லாரி அடித்து விட்டது என்று பொதுவாகப் பேசும் குரல்கள் அவன் காதுவரை கேட்டன.

கூட்டம் தாண்டியதும் ஓட்ட ஆரம்பித்தான். பெரிய கண்டத்திலிருந்து தப்பித்தோம் என்ற நினைப்பு.

ஆனால் முந்திய வேகம் இல்லை. மனம் நினைத்தாலும் உடல் வேலை செய்யவில்லை.

ஒரு வரம்பான வேகத்தில் சிறிது தொலைவு போய்த் திரும்பிப் பார்க்க, ஒரு முறை உடம்பு சிட்டை விட்டே எழுந்தது.

அந்த வெளிச்சத் தண்டு அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. அதே கதிர் வட்டம். உறுதி செய்யும் வகையில் தலையில் ஒரு சுழலும் சிவப்பு விளக்கு!

போலீஸ்தான்! எப்படி அவன் போவதை அறிந்தார்கள்?

வேகத்தை ஏற்றினான். பைக் எவ்வியது. ஆனால் எதிர்க் காற்றில் மூச்சு சரியாக விட முடியவில்லை. உள்ளே ஒரு களைப்பு பீறி அடித்து வந்து கொண்டிருந்தது.



''உங்களுக்கும் உங்க மனைவிக்கும் என்ன தகராறு?''

''ஒண்ணுமில்லே. புதுப் புடவை வேணும்னு. தூக்கக் கலக்கத்திலே ஏதோ ஞாபகமா லெட்டரை முதல்லே டைப் அடிச்சு முடி. அப்புறம் பார்க்கலாம்னுட்டேன்.''

—எஸ். ராஜேந்திரன்

பல்லை இறுக்கி வேகத்தை அதிகரித்தான். இந்த முறை மோட்டார் சைக்கிளும் அவன் உடம்பு போல் பதறியது. அவன் பொருட்படுத்தவில்லை. கண்மூடி வேகத்தில் விட ஆரம்பித்தான்.

போகப் போகத் திரும்பிப் பார்க்க, வெளிச்சத்தின் இடைவெளி குறுகிக்கொண்டே வர, அந்தப் பதற்றமும் ஆத்திரமும் அவனுள் ஆவிர்ப்பவித்தன. உடலை வளைத்து அவன் வேகத்தை அதிகரிக்கப் பார்த்தான்.

வெளிச்சம் அவனை நெருங்கிக் கொண்டே வந்தது.

அது அவன் பதற்றமா அல்லது வேறு காரணமா?

ஏதோ அவனைத் தடுத்தது போல் தெரிய, அவனது மோட்டார் பைக் ஒரு குட்டிக் கரணமிட்டுப் பள்ளத்தில் விழ,

தரையில் கற்களில் மாறி மாறி அவன் தலை மோதி அதன் அதிர்ச்சியில் அவன் இறக்கு முன் அவன் கடைசியாகப் பார்த்தது சக்கரத்திலிருந்து பீறி வந்து முகத்தில் அடித்த ஒரு சங்கிலி.


'கிட்'டில் போட்டிருந்த சங்கிலிகள் துணியிலிருந்து ஆட்டங்களினால் விடுதலை பெற்று 'கிட்'டில் இருந்த ஓட்டை வழியாக ஸ்போக்கில் புகுந்து விட்டன. சங்கிலிகள் ஒருங்கிணைந்த ஒற்றைத் தொடர் போல் சிக்கி, இணைந்து சக்கரத்துள் பாய்ந்து அதை இடையூறுக்கி நிறுத்தி விட்டன.

பின்னால் வந்தது போலீஸ் லாரி அல்ல! சிறுமியைத் தூக்கிப்போக வந்த ஆம்புலன்ஸ் வண்டி! தங்கள் முன் ஒரு மோட்டார் சைக்கிள் ஆசாமி கீழே விழுந்துவிட்டதை உணர்ந்து அவனையும் தூக்கித் தங்கள் ஆம்புலன்ஸில் ஏற்றினார்கள்.

ஆனால் சிறுமிக்கு மட்டும்தான் உயிர் இருந்தது!



டைரக்டர் ஸ்ரீதர் இயக்குகிறார்





என்ன என்பதை நடிகர்களுக்குப் புரிய வைப்பது டைரக்டரின் வேலை. சில சமயம் வாயால் சொல்லிப் புரிய வைப்பார். சில வேளைகளில் நடித்துக் காட்டவும் செய்வார்.

சித்ராலயாவின் 'ஒரு ஓடை நதியாகிறது' படப்பிடிப்பின்போது ரகுவரனுக்கும், மனோ சித்ராவுக்கும் **டைரக்டர் ஸ்ரீதர்** நடிப்புச் சொல்லித் தருவதையும் ஒரு நடிகராக மாறி நடித்துக் காட்டுவதையும் புகைப்படக்காரர் **ரவி** இங்கே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

நடனக் காட்சிக்கும் கூட அவரே அபிநயம் பிடித்துக் காட்டுவதைப் பாருங்கள்!

- திரைஞானி







கள்வனின் காதலி

அமரர் கல்கி

அத்தியாயம் 21

சுமைதாங்கி

தை மாதம். அறுவடை காலம். சென்ற மாதம் வரை பசுமை நிறம்பொருந்தி விளங்கிய வயல்கள் எல்லாம் இப்போது பொன் நிறம் பெற்றுத் திகழ்கின்றன. நெற் கதிர்களின் பாரத்தால் பயிர்கள் வயல்களில் சாய்ந்து கிடக்கின்றன. காலை நேரத்தில் அவற்றின் மீது படிந்திருக்கும் பனித் துளிகளின் மீது சூரிய கிரணம் படுங்கால் எண்ணிலடங்காத வெண் முத்துக்கள் சிதறிக் கிடப்பது போல் தோன்றிற்று. வயல் வரப்புகளில் நடந்து போனால், பசும் புல்லில் படிந்திருக்கும் பனித் துளிகள் காலில் படும்போது ஜில்லு ஜில்லுவென்று வெகு சுகமாயிருக்கிறது. சில வரப்புக்களில் துவரஞ் செடிகள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. அந்தச் செடிகளில் சிலுசிலுவென்று பூத்திருக்கும் சின்னஞ் சிறு பூக்களுக்குத் தானென்ன அழகு! எத்தகைய பசும் பொன் நிறம்!

இன்னும் சில வரப்புக்களில் செம்புச் செடிகள் அடர்த்தியாக வளர்ந்திருக்கின்றன. அவற்றின் இலைகளுக்கு

என்ன மிருதுத் தன்மை? அந்த இலைகளின் மீது அப்படியும் இப்படியும் ஊசலாடிக் கொண்டிருக்கும் பனித் துளிகளை நாளெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் அலுக்காது. ஆனால் அந்தத் துளிகள் தான், நேரம் ஆக ஆக, வெயில் ஏற ஏற மாயமாய் மறைந்து போகின்றன.

கதிர்கள் நன்றாக முற்றிவிட்ட வயல்களில் அதிகாலையில் ஆட்கள் இறங்கி அறுக்கத் தொடங்குகிறார்கள். அப்படி அறுவடையாகும் வயல்களிலிருந்து கம்மென்று புது வைக்கோலின் மணம் வீசுகிறது. அந்த வாசனையை முகர்ந்துகொண்டு, அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு வாழ்நாளெல்லாம் கழித்து விடலாம் போல் தோன்றுகிறது.

சூரியன் உச்சி வானத்தை அடையும்போது அறுப்பதை நிறுத்துகிறார்கள். அறுத்த பயிர்களைக் கட்டுக் கட்டாய்க் கட்டுகிறார்கள். பிறகு அக்கட்டுக்களைத் தலையில் சுமந்துகொண்டு போய்க் களத்தில் போடுகிறார்கள்.

திருமகள் செந்தாமரையில் வசிப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். வருஷத்திலே பத்து மாதத்துக்கு இது உண்மையாயிருக்கலாம். ஆனால் தை,



மாசி மாதங்களில் மட்டும் நன்செய் நிலப் பிரதேசங்களில் உள்ள நெற் களங்களிலேதான் அவள் வசிக்க வேண்டும். அந்த மாதங்களில் நெற் களங்களின் காட்சி அவ்வளவு அழகாயும் லக்ஷ்மி விலாசம் பொருந்தியும் இருக்கும். களத்தில் சில இடங்களில் அறுவடையான நெற் பயிர்க் கட்டுக்களைக் கொண்டு வந்து போடுகிறார்கள். அவற்றை எடுத்துச் சில இடங்களில் டபார் டபார் என்று அடித்துக்கொண்டிருக்கிறார்கள். தானியம் உதிர்ந்ததும் வைக்கோலைப் போர் போராய்ப் போடுகிறார்கள். நெல்லைக் குவித்துக் குவியல் குவியலாய்ச் செய்கிறார்கள்.

களத்துக்கு நடுவில் ஒரு பெரிய ஆலமரம் விழுதுகள் விட்டு இறங்கி விஸ்தாரமாகப் படர்ந்திருக்கிறது. அதன் கிளைகளில் காக்கைகளும், குருவிகளும் இன்னும் பலவிதமான பட்சிகளும் அமர்ந்து கீதமிசைத்துக் கொண்டிருந்தன. ஆமாம்; அவ்வேளையில் காக்கை கத்துவது கூட நல்ல சங்கீதமாகவே தோன்றுகிறது. புள்ளினங்கள் தங்களுடைய இறகுகளை அடித்துக்கொள்ளும் சப்தம் காதுக்கு இன்னிசையாய்த் தொனிக்கிறது.

அந்த ஆலமரத்தின் அடியில் அங்கங்கே சில ஸ்திரீகள் எதிரில் கூடைகளுடன் உட்கார்ந்திருப்பதைக் காணலாம். இவர்களுக்கு அங்காடிக்காரிகள் என்று பெயர். இவர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு கூடையும் ஒரு சின்னக் கடை. அதில் வறுத்தகடலைக்கொட்டை வேகவைத்த சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சுட்ட சோளக் கொண்டை, வெற்றிலை பாக்கு புகையிலை இவை யெல்லாம் இருக்கும். இவற்றை அவர்கள் நெல்லுக்கு விற்பார்கள். லாபம் தம்பிடிக்குத் தம்பிடிதான்! ஆனாலும் மொத்தத்தில் லாபம் ஒன்றும் பிரமாதமாயிராது. நாலணா சாமான்கள் கொண்டு வந்தால் எட்டணா நெல்லுடன் திரும்பிச் செல்வார்கள். அவ்வளவுதான்.

இம்மாதிரி அங்காடி விற்கும் பெண்பிள்ளை ஒருத்தியைத் தொடர்ந்து போகும் அவசியம் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. அவள் களத்தில் தனக்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு அங்காடிக்காரியிடம் சண்டை போட்டுக் கொண்டு ''சீச்சீ! உன்னைச் சொல்லி என்ன பிரயோசனம்? உன்னைப் படைச்சானே பிரும்மா, அவனைச் சொல்லணும்!'' என்று கடுமையாய்ப் பேசிவிட்டு, அங்காடிக் கூடையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு விரு விரு என்று நடக்கத் தொடங்கினாள். அவள் வயல் வரப்புக்கள் வழியாக நடந்து சென்று கடைசியில் ஒரு வாய்க்காலின் கரையை அடைந்தாள். அந்த வாய்க்காலின் இரு புறமும் அடர்த்தியாகக் காடு மண்டியிருந்தது. கரையோடு ஒரு ஒற்றையடிப் பாதை போயிற்று. கூடைக்காரி அந்தப் பாதையோடு போனாள். கொஞ்சதூரம் நடந்த பிற்பாடு அந்தப் பெரிய வாய்க்காலிலிருந்து இன்னொரு சின்ன வாய்க்கால் பிரியும் இடம் வந்தது. அப்படிப் பிரியும் இடத்தில் ஒரு மதகு இருந்தது. கூடைக்காரி அந்த மதகண்டை வந்ததும் ஆவலுடன் உற்றுப் பார்த்தாள். அந்த மதகின் மேல் ஒரு முழு ரூபாய் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தது. கூடைக்காரி அந்த ரூபாயை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு ''என் அப்பனே! மவராசா! நீ யாராயிருந்தாலும் சரி, தெய்வமாயிருந்தாலும் சரி, மனுஷனாயிருந்தாலும் சரி, நீ நன்றாயிருக்கணும். உன்னை நான் பார்த்து அறிய மாட்டேன். ஒரு நாளைக்கு நீ அசரீரி வாக்கு மாதிரி சொன்னாய். அதன்படியே நானும் இரண்டு நாளைக்கொரு தடவை இங்கே வாரேன். நீயும் ஒவ்வொரு ரூபாய் படி அளக்கிறாய். சாமி! ஆண்டவனே! என் காலமெல்லாம் இப்படியே போயிண்டிருந்தா— நான் சாகிறதுக்குள்ளே முழுசா ஒரு ஆயிரம் ரூபாய் சேர்த்திடுவேன். அப்புறம் என்னை யார் என்ன கேட்கிறது?'' என்று இவ்விதம் புலம்பிக் கொண்டே கூடையிலிருந்த நிலக்கடலை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு எல்லாவற்றையும் எடுத்து மதகின் மேல் வைத்துவிட்டு, கடைசியாக, ஒரு

''மானேஜர் சார்! உங்களை எப்படிப் புகழறதுன்னே தெரியலே.''

''அதனாலேதான் இருபது வருஷமா கிளார்க்காவே இருக்கீங்க!''

எஸ். விஜயா ஸ்ரீனிவாஸன்



PALLAVI CASSETTES
introduce the inimitable
Lalgudi Jayaraman
in their Heritage Series*
in 3 Stereo albums.

* Pallavi Cassettes Heritage Series aims to preserve for posterity the very best in Carnatic Music, by featuring artists of eminence at their peak. Crafted with utmost care, cassettes of the Heritage Series, besides offering listening pleasure, will have archival value in perpetuating the finest traditions of Carnatic Music.



Recorded and marketed by

AVM MUSIC SERVICE

Madras 600 026

Pallavi CASSETTES
56 Nungambakkam
High Road
Madras 600 034

NOW AVAILABLE WITH ALL AVM DEALERS.

Chhaya/PC/214 B

Quench your thirst for knowledge at this eternal spring.
The immortal words of the great seer and statesman, Rajaji

Now available at reduced prices

Title	Price Rs. P.
Mahabharata	12-00
Ramayana	12-00
Rajaji's Speeches Vol. I	12-00
Rajaji's Speeches Vol. II	13-00
Bhagavad Gita	10-00
Stories for the Innocent	15-00
Kural – The great Book of Tiruvalluvar	12-00
Upanishads	7-00
Our Culture	5-00
Avvaiar – (The Great Tamil Poetess)	4-00
Rescue Democracy from Money Power)	20-00

* 20% discount on all books
* On orders for less than Rs. 25-00 nett, postage, charges Rs. 3-00 extra
* Free delivery by post on order for over Rs. 25-00 nett
* Full set for Rs. 90-00 only

THE OFFER IS VALID UPTO 31ST JANUARY 1983 ONLY

Please send full payment in advance (M.O. / Bank Draft) to:

BHARATIYA VIDYA BHAVAN

MUNSHI SADAN, Kulapati K. M. Munshi Marg, BOMBAY-400 007

ஸமாரியாஸ் பைனான்ஸஸ்

அறிவிக்கும்

புத்தாண்டு முதலீடு வெகுமதி மாதம்

1983 ஜனவரி 1 முதல் 31 வரை

எங்கள் அனைத்து கிளைகளிலும்

1% கூடுதல் வட்டி
மேலும்
சிறப்பு வெகுமதிகள்

எங்களது கிளைகள் :

திருவனந்தபுரம்-4 ● திருவல்லா-1 ● ரான்னி-1
கோட்டயம்-1 ● கொச்சின்-31 ● ஆலப்புழை-1 ● கள்ளிக்கோட்டை-2
பெங்களூர்-42 ● சென்னை-5

நிர்வாக அலுவலகம் :

29, லஸ் அவின்யூ, சென்னை-600 004. போன் : 75523, 75524

சோற்று மூட்டையையும் எடுத்து வைத்தாள். பிறகு, ''சாமி ஆண்டவனே! காப்பாத்து!'' என்று இரண்டு கன்னத்திலும் போட்டுக் கொண்டு வெறும் கூடையுடன் கிளம்பிச் சென்ருள்.

அவள் போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் புதரை விலக்கிக் கொண்டு முத்தையன் வெளியில் வந்தான். மதகின் மேல் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். சாவகாசமாக நிலக்கடலையை உரித்துத் தின்னத் தொடங்கினுன்.

அப்போது ஒரு மரத்தில் ஏதோ சலசலவென்று சத்தம் கேட்கவே முத்தையன் பளிச்சென்று குதித்து எழுந்து இடுப்பில் செருகியிருந்த கத்தியைக் கையில் எடுத்தான். ''சாமி! சாமி! நான்தான் சொக்கன்'' என்று சொல்லிக்கொண்டே குறவன் சொக்கன் முன் வந்தான்.

''அடே! முட்டாள்! கண்ட இடத்தில் எல்லாம் நீ என்னைத் தேடிக் கொண்டு வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறேனே? ஏன் இங்கு வந்தாய்?'' என்று கேட்டான் முத்தையன்.

''இல்லைங்க, சாமி! அந்த ஆளு சொன்னேனே அது வந்திருக்கு, பணத்தோட வந்திருக்கு'' என்ருன் சொக்கன்.

''சரி, சாயங்காலம் கையெழுத்து மறைகிற சமயத்துக்குச் சுமைதாங்கிக் கிட்ட அழைத்துக்கொண்டு வா. இப்போ இங்கே நிக்காதே போ!'' என்றதும் சொக்கன் ''அப்படியே ஆகட்டும் சாமி'' என்று சொல்லிவிட்டுப் போனுன்.

* * *

அன்று சாயங்காலம் முன்னே லாக்அப்பிலிருந்து முத்தையன் தப்பிச் சென்ற இரவில் அவன் படுத்துத் தூங்கிய அதே சுமைதாங்கி மேடையில் ஓர் ஆசாமி உட்கார்ந்து, அப்புறம் இப்புறம் பார்த்து முழித்துக் கொண்டிருந்தான். பொழுது சாயச் சாய அவனுடைய கவலையும் அதிகமாகிக் கொண்டிருந்தது. கடைசியில் சுமைதாங்கியின் பின்புறத்தில் ஏதோ சத்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்க்க அங்கே முகமூடி அணிந்து ஓர் உருவம் கையில் கத்தியுடன் நிற்கக் காணவும் உளறியடித்துக் கொண்டு எழுந்திருந்தான். நல்ல வேளையாக, அந்த உருவத்துக்குப் பின்னுல் குறவன் சொக்கனும் தென்படவே, அவனுடைய படபடப்பு ஒருவாறு அடங்கியது.



''ஒரு கன்னத்தில் அடிச்சா மறு கன்னத்தைக் காட்டணும்னு சொல்லுவீங்களே!''
''ஆமாம். அதுக்கென்ன இப்போ?''
''அவன் என் மூக்கிலே அடிச்சுட்டான் சார் என்ன செய்யறது?''
—கிருஷ்ண சங்கர்

''என்ன ஐயா, எங்கே வந்தே? சீக்கிரம் சொல்லு!'' என்ருன் முத்தையன்.

''ஒஒஒ—ஒண்ணுமில்லை... வவவவ... வந்து....'' என்ருன் அந்த ஆசாமி.

''நநந—நாசமாய்ப்... போபோபோ போச்சு!'' என்ருன் முத்தையன்.

''கொ கொ கொ கொஞ்சம்... நே நே நேக்கு... தெ தெ தெ தெத்து''

''கொஞ்சம் தெத்தா? ஜாஸ்தியாயிருந்தால் இன்னும் அது எப்படி இருக்குமோ? போகட்டும், எங்கே வந்தே சொல்லித் தொலை.''

''ஒஒஒ — ஒன்னை... பபப.. பாக்கத்தான் வந்தேன்.''

''சரி, பார்த்தாச்சா? போகலாமா?''

''பொ பொ பொ— பொறு அப்பா! பு பு பு — புலிப்பட்டி எசமான் ப ப ப பணம் கொடுத்திருக்காரு....''

''சரி, கொடுத்துத் தொலை.''

அந்த ஆசாமி மடியிலிருந்த பண நோட்டுக்களை எடுத்து முத்தையனிடம் கொடுத்தான்.

வ வ வ — வந்து .. கா காகாகா—காரியத்தை மு மு மு முடிச்சுட்டாக்க...''

இந்தச் சமயத்தில் குறவன் குறுக்கிட்டு, ''இதோ பாருங்க ஐயா! நீங்க சமாசாரம் சொல்றதுக்குள்ளே பொழுது விடிஞ்சு போயிடும். எங்கிட்டத்தான் எல்லாச் சமாச்சாரமும் சொல்லிட்டீங்களே! நான் விவரமாய்ச் சொல்லிப்புடறேன். நீங்க போய் வாருங்க'' என்ருன்.

அந்த ஆசாமி, ''அ அ அ—அப்படியானுச் சரி'' என்ருன். பிறகு குறவனைச்

சமிக்ஞை செய்து அருகில் அழைத்து அவன் காதோடு, ''அந்தப் பொ பொ பொ பொ பொம்பளையை... ப ப ப-- பைசல் பண்ணிவிடணும்'' என்று கூறினான்.

அத்தியாயம் 22

நிலவும் இருளும்

முத்தையன் பண நோட்டுக்களைக் கையில் அலட்சியமாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு, லயன் கரையிலிருந்து படுகையில் இறங்கித் தண்ணீர்த் துறையை நோக்கி நடந்தான். தண்ணீர்த் துறையை அடைந்ததும், நீர்க்கரையோடு கிழக்கு நோக்கி நடக்கலானான். அன்று பௌர்ணமி. கிழக்கே பூரணச் சந்திரன் உதயமாகிச் சற்று நேரம் ஆகியிருந்தது. மேற்கே இருட்ட இருட்ட நிலவு வெண்ணிறம் பெற்றுப் பிரகாசித்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த நதிப் பிரதேசம் முழுவதும் ஒரு மோகன மாய உலகமாக மாறிவிட்டது. வெண்ணிலவு: வெண் மணல்; வெண்மையான நாணல். ஜலமும் நெடுந் தூரத்துக்கு வெள்ளியை உருக்கி வார்த்தது போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அந்த வேளையில் அந்த நதிக் கரையோரமாய் வெண் மணலில் நடந்து கொண்டிருந்த முத்தையனுக்குக் கல்யாணியின் ஞாபகம் வந்தது. ''கல்யாணி! கல்யாணி! என்னிடம் பணமில்லை என்றுதானே என்னை நீ நிராகரித்தாய்? கிழவனைப் போய்க் கல்யாணம் செய்து கொண்டாய்? இப்போது என்னிடம் பணமிருக்கிறது: வேண்டிய அளவு இருக்கிறது. இரு, இரு. ஒரு நாளைக்கு உன்னை நான் பார்க்காமல் இருக்கப் போவதில்லை. இவ்வளவு பணத்தையும் உன் தலையிலே போடுகிறேன். அப்போது நீ என்ன சொல்லப் போகிறாய் பார்க்கிறேன்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

''நீ என்ன சொல்லப் போகிறாய்? என்னைத் திருடன் கள்ளன் என்று சொல்லப் போகிறாய். என்னைப் பார்க்கவே பயப்படுவாய். உளறியடித்துக் கொண்டு போலீஸ்காரனைக் கூப்பிடுவாய். ஹா ஹா ஹா!'' என்று சிரித்தான். அந்த நிசப்தமான நதிப் பிரதேசத்தில் அந்தச் சிரிப்பின் ஒலிபயங்கரமாய்க் கேட்டது.

''ஆனால் என்னைத் திருடனாகப் பண்ணியது யார்? நீதான்! நீயும், உன் தகப்பனும், உன் உற்றாரும், உன் ஊராரும்தான்! ஹா ஹா! என்னை எவ்வளவு கேவலமாக எண்ணினார்கள்? இப்போது?''

மறுபடியும் முத்தையன் சிரித்தான். அந்தச் சாயங்காலம் நடந்த பேரத்தை நினைக்க நினைக்க அவனுக்கு அடங்காத சிரிப்பு வந்தது. யாரோ ஒரு பெண் பிள்ளை ரொம்பத் திமிர் பிடித்தவள்— அவளோடு சண்டை பிடிக்கத் திறமையில்லாத ஒரு பெரிய மனுஷன் – அவள் வீட்டில் கொள்ளையடிப்பதற்காக இரண்டாயிரம் ரூபாய் பணம் கொடுத்திருக்கிறான்! இது ரொம்பக் கேவலம் தான். அந்தப் பெரிய மனுஷனுக்கு ஒரு சமயம் புத்தி கற்பிக்க வேண்டியது தான்.

ஆனால் இந்தப் பெண் பிள்ளைக்கு என்ன இவ்வளவு அகந்தை! கொள்ளிடக் கரைக் கள்ளனைப் பிடித்துப் போலீஸில் ஒப்பிக்கப் போகிறதாக அவள் சபதம் கூறியிருக்கிறாளாமே? அவள் எப்படிப்பட்ட திமிர் பிடித்த ஸ்திரீயாயிருக்கவேணும்? அவளுடைய கர்வத்தையும் அடக்கவேண்டியதுதான்.

* * *

இப்படி யோசித்துக் கொண்டே போன முத்தையன், ஓரிடத்தில் தண்ணீர்க் கரையிலிருந்து விலகி, நாணற் காட்டிற்குள் பிரவேசித்தான். கொஞ்ச தூரம் போனதும் அங்கே ஒரு பெரிய மரத்தின் அடிப் பாகம் கிடக்க, அதனருகில் சென்றான். எப்போதோ நதி

பிச்சைக்காரன் 1: உன் பையனுக்கு ராமசாமி தன் பெண்ணைத் தரமாட்டேனுட்டானமே!


பிச்சைக்காரன் 2: கெடக்கிறான் விடு! அவன் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் வெளியில பிச்சை எடுக்கிறானில்லே, அந்தத் தலைக்கனம்!

—இளையா அ. கதிர்வேல்



கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

ஒரு விலை கூடிய அலமாரி சிக்கனமானதாக எவ்வாறு அமைகிறது!



நேர்த்தியான அமைப்பும், நீடித்த உழைப்பாற்றலும் பெற்று விளங்கிட, இப்போது கீறல் விழாத மேம்பட்ட மெருகு.

நீடித்த உழைப்பாற்றல்: கோத்ரெஜிடம் மட்டுமே உள்ள காற்றற்ற, தானே இயங்கும் மின்சார வண்ணப் பூச்சு முறை காரணமாக, ஸ்டோர்வெல் அனைத்தும் மேன்மையான மெருகுடன் துலங்குகிறது. அப்பழுக்கற்ற தரமான எஃகினால் தயாராவதால், துருப் பிடிக்காது என்ற உறுதியான நம்பிக்கை கிடைக்கிறது. ஸ்டோர்வெல் பல தலைமுறைகளுக்கு நீடித்து உழைக்கிறது.

அதிகப்படியான பாதுகாப்பு: கதவிலும் லாக்கரிலும் தகர்க்க முடியாத கோத்ரெஜ் பூட்டு. மறைவான கீல்கள், இறுக மூடிக் கொள்ளும் மும்முனைப் பூட்டுமுறை அமைப்பு. கோத்ரெஜ் மட்டுமே அளிக்கும் நூதன சிறப்பு.

கிடைக்கும் இந்த நன்மைகளால்: நீடித்த உழைப்பாற்றல், அதிகப்படியான பாதுகாப்பு, தேர்ந்தெடுக்க கூடுதல் வாய்ப்பு.

தேர்ந்தெடுக்க கூடுதல் வாய்ப்பு: சிதையாத, குறையற்ற ஆளுயரப் பிரதிபிம்பம் தெரிய முழு நீள (1,37 cm) வெளி காட்டு 'ப்ளேட் கண்ணாடி.' அட்ஜஸ்ட் செய்யக் கூடிய ஷெல்புகள் டை பார் துணி தொங்கவிடும் ராட், விருப்பத்திற்கேற்றபடி பல வகை இணைப்புகளுடன் கிடைக்கிறது. மூன்று வண்ணங்கள்— ஆலிவ்க்ரீன், ஸ்பெஷல் க்ரே டீஏ (TA) க்ரே.

எளிதில் கிடைக்கும் வசதி: நாடெங்கிலும் உள்ள 400க்கும் அதிகமான விற்பனையாளர்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கோத்ரெஜ் மேம்பட்ட தொழில் நுட்பம் மற்றும் மதிப்பு.

ULKA-GS-1-82 TAM

யில் பெரு வெள்ளம் வந்தபோது, அந்தப் பெரிய மரம் வேருடன் பெயர்த்துக்கொண்டு வந்து அந்த இடத்தில் மணலில் தட்டிப் போய்க் கிடந்திருக்க வேண்டும்.

அந்த மரத்தில் வாய் குறுகலான ஒரு போறை இருந்தது. முத்தையன் அந்த மரத்தின் அருகில் உட்கார்ந்து அந்தப் போறையில் கையை விட்டான். அதற்குள்ளிருந்து விலை உயர்ந்த நகைகளையும், ரூபாய்களையும் நோட்டுக்களையும் வாரி வாரி எடுத்து மடியில் போட்டுக்கொண்டான். இரண்டு கையினாலும் அவற்றை அணைத்துக் கொண்டே ''கல்யாணி! கல்யாணி! ஒரு நாளைக்கு இவ்வளவு பணத்தையும் உன் காலடியில் போடப் போகிறேன் பார்!'' என்றான்.

* * *

கிருஷ்ணபக்ஷத்து சந்திரன் நாளுக்கு நாள் தேய்ந்து வந்தது. சந்திரோதயமும் நாளுக்கு நாள் இரவின் பிற்பகுதிக்குச் சென்று கொண்டிருந்தது. அமாவாசைக்கு முதல் நாள் இரவு நடு ஜாமத்தில் முத்தையனும், குறவன் சொக்கனும் ஒரு வீட்டின் புறக்கடையில் நின்று கொண்டிருந்தார்கள். கன்னங் கரிய இருள் சூழ்ந்திருந்தது. முத்தையனுக்கு வீட்டின் அடையாளமெல்லாம் சொல்லிக் காட்டி விட்டு, ''நானும் வரட்டுமா, சாமி!'' என்று கேட்டான். ''கூடாது; நான் ஒரு தடவை விசில் அடித்தால் உள்ளே வா. இரண்டு தடவை அடித்தால் ஓடிப் போய்விடு! தெரிகிறதா?'' என்றான் முத்தையன். சட்டைப் பையிலிருந்து ஒரு சின்ன டார்ச் லைட்டை எடுத்து ஒரே ஒரு நிமிஷம் வெளிச்சம்போட்டு, ஓட்டின் மீது ஏற வேண்டிய இடத்தைப் பார்த்துக் கொண்டான். உடனே விளக்கை அணைத்து விட்டு ஓட்டின் மீது ஏறினான்.

முற்றத்தில் அவன் குதித்தபோது அதிகச் சத்தம் உண்டாகவில்லை. ஆனாலும் ''யார் அது?'' என்று ஒரு பெண் பிள்ளையின் கலவரமான குரல் கேட்டது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்று, சட்டென்று டார்ச் லைட்டைக் கொளுத்திக் காட்டினான். அவள் ஒரு வயது வந்த ஸ்திரீ. முகமூடி தரித்துக் கையில் கத்தி பிடித்து நின்ற உருவத்தைத் திடீரென்று கண்டதும் ''ஐயோ! திருடன்!'' என்று அவள் அலறினாள். முத்தையன் கத்தியைக் காட்டி ''சத்தம் போட்டாயோ, கொன்றுவிடுவேன்!'' என்று சொல்லி விளக்கை அணைத்தான்.

இதற்குள் கூடத்தில் படுத்திருந்த இன்னொரு ஸ்திரீ எழுந்திருந்து முற்றத்தின் பக்கமாய் ஓடி வந்தாள். முற்றத்தில் நட்சத்திரங்களின் இலேசான வெளிச்சம் சிறிது இருந்தது. அந்த வெளிச்சத்தில் அவள் ஓடுவதைப் பார்த்து, முத்தையன் பாய்ந்து-சென்று அவளுடைய தோளைப் பிடித்தான். உடனே நின்று விட்டாள்.

''சத்தம் போடாதே! நகைகளையெல்லாம் கழற்றிக் கொடு; இல்லாவிட்டால்...'' என்று முத்தையன் ஆரம்பித்தான். ஆனால் அவனுடைய குரல் தழுதழுத்தது. மேலே பேச ஓடவில்லை. ஏனென்றால் அந்தப் பெண்ணின் தோளைத் தொட்ட மாத்திரத்தில் அவனுடைய உடம்பு ஒருமுறை சிலிர்த்தது. தனக்கு என்ன நேர்ந்து விட்டது என்று அவனுக்கே தெரியவில்லை. அந்தப் பெண் சட்டென்று திரும்பினாள். அந்த மங்கலான நட்சத்திர வெளிச்சத்தில் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். ''என் நகைகள்தானா உனக்கு வேண்டும், முத்தையா!'' என்று கேட்டாள்.

முத்தையனுடைய காலின் அடியிலிருந்து பூமியே நழுவி விட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது. அந்தக் குரல்? - அது யாருடையது?

டார்ச் லைட்டை அவள் முகத்துக்கு நேரே பிடித்தான். ஆமாம்; அவள் கல்யாணிதான்! (தொடரும்)

''பையன் கான்வெண்ட்லே சேர்ந்ததிலேருந்து ரொம்பக் கெட்டுப் போயிட்டான்.''

''ஏங்க?''

''என்னை யார் வந்து கேட்டாலும், டாடி, ஷாப்புக்குப் போயிருக்கார்னு சொல்றதுக்குப் பதிலா டாடிஷாப்புக்குப் போயிருக்கார்னு சொல்றானும்!''

—தனிரு நடராஜன்



"यस्मिन्देशेहि यो जात : तस्मै तज्ञौषधं हितम् ॥"

"எந்த தேசத்தில் (சீதோஷ்ண நிலையில்) எவன் பிறந்திருக்கிருனே அவனுக்கு அந்நாட்டு மூலிகைகளே சிறந்த பலனை அளிக்கும்."
—(சரகஸம்ஹிதை)



கும்பகோணம் "லலிதா பார்மஸி" மருந்துகளின் சிறப்பு அம்சங்கள்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் ஸ்ரீ தன்வந்திரியின் ஸன்னதியில் மருந்துகள் தயாராவது.

பல வருஷங்கள், முறைப்படி "ஆயுர்வேதத்தை" அத்யயனம் செய்த நிபுணர்களின் நேர்பார்வையில் மருந்துகள் தயாராவது.

எந்த மருந்தையும் எளிதில் முறைப்படி தயாரிக்க உதவியாகப் பல உயர் வைத்ய நூல்கள் கொண்ட புத்தகசாலை, சிறந்த மூலிகைசாலையுடன் இணைந்து விளங்குவது.

★

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

லலிதா பார்மஸி

(ஸ்தாபிதம் 1942)

தலைமை ஆபீஸ் :

கும்பகோணம் Pincode: 612001
போன் : 123

DRUG LICENCE No. 40/78
(மத்திய அரசால் சட்டுத் தொகைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

கிளைகள்

மஹாதானத் தெரு, மாயூரம் 609001
போன் : 379

வடக்கு வீதி, சிதம்பரம் - 608001

நெ. 39, ரங்கநாதன் தெரு,
சென்னை - 600017
போன் : 441454

நெ. 105, டீக்கேசி ரோடு,
சென்னை – 600004
போன் : 73007

கடிதம் மூலம் வைத்திய ஆலோசனை பெற விரும்புவோர்கள்
50 பைசா தபால் தலையுடன் தலைமை அலுவலகத்திற்கு எழுதக் கோருகிறோம்.
(கடிதங்கள் ரகசியமாக வைக்கப்படும்.)



பொதிமாடு

அன்னம்

காப்டன் சங்கர் ஒரு மாத லீவில் தன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தான்.

இத்தனை வருஷங்கள் அவனுக்குக் கவனம் வராத ஊர் அவனை இப்போது அழைத்தது. பதினைந்து வருஷங்களுக்கு முன் அவன் எட்டாவது வகுப்புப் பரீட்சையில் இரண்டாவது முறையாகப் பாஸ் ஆகவில்லை. அதற்காக அவன் அப்பா அவனை விசிறிக் காம்பால் விளாசிவிட்டார். ''உருப்படாத மூதேவி'' என்று திட்டினார். கைகால்களில் தடித்திருந்த அடித்த இடங்களுக்குத் தேங்காய் எண்ணெய் தடவ வந்த அம்மாவை உதறிவிட்டு வெளியே ஓடியவன்தான்.

சில வருடங்கள் ஒரு ஹோட்டல் கிளீனர்; சில ஆண்டுகள் ஒரு தியேட்டரில் சோடா–கலர் விற்பனை. வயது பதினெட்டைத் தாண்டியது. உழைப்பு உடலில் நல்ல உரமேற்றியிருந்தது. சாதாரண சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்தான். இளவயதில் படிப்பில் இல்லாத அக்கறை இப்போது வந்தது. தன் உழைப்பால் இப்போது உயர் அதிகாரியாக வளர்ந்து விட்டான். ஊரைப் பற்றி அவனும் கவலைப்படவில்லை. ஊரிலிருந்தும் யாரும் அவனைத் தேடியதாகத் தெரியவில்லை.

எங்கு எங்கேயோ அவன் வாழ்நாட்கள் கழிந்தன. பல்லைக் கடித்துக் கொண்டு விசிறிக் காம்பை ஓங்கிய அப்பாவின் முகம் மறக்கவில்லை. கைகளைப் பிசைந்தபடி நின்றிருந்த தாயின் முகம் கவனம் இருந்தது. ஆனால் அவர்களிடம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் எழவில்லை. அந்த ஊரையே — அந்த மண்ணையே அவன் வெறுத்தான்.

ஒவ்வொரு வருஷ லீவும் ஒரு நண்பனுடன் கழியும். தனக்கென்று ஒரு குடும்பம் வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டதில்லை.

அவனுடைய நெருங்கிய நண்பன் ரஞ்சித். இருவருமே இணை பிரியாதவர்கள். திடீரென்று ரஞ்சித் கான்ஸர் நோயால் பாதிக்கப்பட்டு மிலிட்டரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். அவன் முடிவு நெருங்கி வருவதைக் கண்டு சங்கர் கண் கலங்கினான்.

''யாருக்காவது தெரியப்படுத்த வேண்டுமா?'' எனக் கேட்டான் சங்கர்.

''யார் இருக்கிறார்கள் சங்கர்?... உனக்காகவும் எனக்காகவும் அழ?... நம்பெயரைச் சொல்லக் கூடக் குழந்தைகள் இல்லை. என் உடலை நீயே அடக்கம் செய்துவிடு!'' என்றான் ரஞ்சித்.

ரஞ்சித்தின் விருப்பம் நிறைவேற்றப் பட்டது.

அவன் மறைவு சங்கருக்கு ஓர் அதிர்ச்சியைத் தந்தது. எல்லோரையும் உதறிவிட்டு வந்தாயிற்று. இப்போது அவனுக்குத் தெம்பு இருக்கிறது. உடலில் வலுவிருக்கிறது. ஆனால் மனித மரம் பட்டுப்போகும் சமயத்தில், தவித்த வாய்க்கு ஆதரவுடன் தண்ணீர் வார்க்க யார் இருக்கிறார்கள்?

இம்முறை ஊர் திரும்பியதும் ஓர் ஏழைப் பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்துகொள்வது என்ற தீர்மானத்துடன் புறப்பட்டான் சங்கர். அவன் அப்பாவுக்கு வயது ஐம்பதைத் தாண்டியிருக்கும். அவன் தன் வீட்டை விட்டுப் புறப்பட்ட சமயம் இரண்டு தங்கைகள் இருந்தார்கள். அப்பொழுது ரொம்பவும் சிறியவர்கள். இப்போது அவர்களுக்குத் திருமணம் முடிந்து குழந்தைகளுக்குத் தாயாகிக் கூட இருப்பார்கள்.

சங்கர் தெற்கே போகிறான் என்று தெரிந்ததும் அவன் கூட வேலை பார்த்தவர்கள் தங்கள் உறவினர்களுக்கோ, வேண்டப்பட்டவர்களுக்கோ சாமான்கள் கொடுத்து உதவினார்கள். சங்கரும் அந்த வேலையைச் சுமையாகக் கருதாமல், கொடுத்த பொருட்களை வாங்கிக் கொண்டான்.

அப்படி ஒரு வீட்டுக்குச் சென்னையில் போனபோது—

''லக்ஷ்மி! காப்பி எடுத்துவா, அம்மா!'' என்றார் வீட்டுக்குப் பெரியவர்.

சாதாரணமாக ஒரு நூல் புடவை அணிந்த ஒரு பெண் வந்தாள். நல்ல எலுமிச்சை நிறம். கருகருவென்று கூந்தல். வயது இருபது—ஒன்று இரண்டு கூடவோ இருக்கும். சங்கர் அந்தப் பெண்ணையே உற்றுப் பார்த்தான்.

''உங்கள் பெண்ணா?'' என்று விசாரித்தான் அந்தப் பெரியவரை.

''இல்லை, இல்லை... கிராமத்திலிருந்து வந்திருக்கிறாள்... உதவிக்கு வைத்துக்கொண்டிருக்கிறோம்... நல்ல பெண். இவள் வயதுக்கும் குணத்துக்கும் நல்ல பையனாக அமைய வேண்டும்'' என்றார் அவர்.

ஏழைப் பெண். பார்க்க நன்றாக இருக்கிறாள். வேலைக்கு வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் நல்லபெயரை எடுத்துவிட்டாள். அப்புறம் என்ன?... இந்த இடம் போதுமே!

''பெண்ணுக்கு எந்த ஊர்?'' என்று கேட்டான் சங்கர்.

''தஞ்சாவூர் ஜில்லா.. நன்னிலம் பக்கம் காளையாங்குப்பம் கிராமம்.. அப்பா கோபாலன் பெரிய சம்சாரி... ஏதோ ஒரு சின்னப் பண்ணையில் காரியஸ்தர்... சொல்ப வருமானம்... ஏன்? உங்களுக்குத் தெரிந்த நல்ல வரன் யாராவது....?''

''அப்படி ஏதுமில்லை. சும்மா தான் கேட்டு வைத்தேன்'' என்றான் சங்கர்.

ஊருக்குப் போனதும் அப்பா அம்மா விடம் கூறிவிட்டு இந்தப் பெண்ணையே தன் மனைவியாக ஏற்றுக் கொள்வது என்ற தீர்மானத்துக்கு வந்தான்.

அவன் போட்டிருந்த திட்டப்படி மறு நாள் மாலைக்குள் அவன் திருவையாறுக்குப் பக்கத்தில் உள்ள தன் கிராமத்தில் இருக்க வேண்டியவன். ஆனால் சென்னையை விட்டுப் புறப்படும்போது கிருஷ்ணனைப் பார்த்து விட்டான். இரண்டு பேரும் உயிருக்குயிரான நண்பர்கள். கிருஷ்ணன் ராணுவத்தில் பதி னைந்து வருஷ சர்வீஸை முடித்துக் கோயம் புத்தூரில் பெரிய பிஸினஸ் நடத்திவந்தான்.

சங்கர் என்ன மறுத்தும் கிருஷ்ணன் கேட்பதாயில்லை. தன்னுடன் கோயமுத் தூருக்குக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றுவிட்டான். அங்கே சங்கருக்கு ராஜோ பசாரம் நடந்தது. கிருஷ்ணனின் குடும் பத்தினர் அவன் மேல் பாசத்தைப் பொழிந் தனர்.

கிருஷ்ணன் ஒரு நாள் மருதமலை கூட்டிப் போனான். இன்னுமொரு நாள் இருவருமாகக் குருவாயூர் போய் வந்தார்கள். தன் பிஸி னஸ் விஷயமாகக் கிருஷ்ணன் ஏர்க்காடு போனபோது சங்கரும் உடன் சென்றான். அங்கே எஸ்டேட்டில் பத்து நாட்கள் துரித மாகக் கழிந்து போனது.

சங்கரின் விடுமுறையில் எஞ்சிப் பத்து நாட்களே இருந்தன. திரும்பிப் போகப் பிரயாணத்துக்குத் தேவையான மூன்று நாட்களையும் விலக்கினால் மிஞ்சியது ஒரு வாரம் மட்டுமே!

கோயமுத்தூரிலிருந்து தஞ்சாவூருக்கு எக்ஸ்பிரஸ்ஸில் போனான். அங்கிருந்து திரு வையாறு போய் வேறு பஸ் பிடித்துத் தன் கிராமத்தருகே இறங்கிக் கொண்டான். அவனே அவனை அறிமுகப்படுத்திக் கொண் டால் தவிர — யாரும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

கிராமம் — முன்னைப் போலவே — இன் னும் மோசமாகக்கூட இருந்தது. குடியிருந்த வீடுகளைவிடப் பாழடைந்த வீடுகளே அதிகம்.

சந்நிதித் தெருவுக்குள் நுழைந்ததும் அவ னுக்கு அவன் வீடு அடையாளம் புரிந்தது. காலில் சற்று வேகத்தைக் கூட்டி நடக்க லானான்.


''ஜலங்... ஜலங்!'' — அவனைத் தாண்டி ஒரு ரெட்டை மாட்டு வண்டி ஓடியது. அவன் ஓரமாக நகர்ந்து நின்றான். அந்த வண்டி அவன் வீட்டு வாசலில் போய் நின்றது.

சங்கர் இருந்த இடத்திலேயே நிதானித் தான். வண்டியிலிருந்து இறங்கியவரை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந் தது. அவனைப் பெற்றவர்தான். பழைய விறைப்பு அப்படியே இருந்தது. தலையில் தான் கொஞ்சம் வழுக்கை.

கூட இருந்தது யார்?... அவனால் தீர ணிக்கவே முடியவில்லை. எந்தப் பெண்ணைத் தான் மணம் முடிக்கலாம் என்று நினைத் தானோ அவளேதான்! தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

வீட்டினுள்ளிருந்து வந்த இரண்டு பெண்கள் — சாயம் போன பாவாடையும் ஒட்டுப் போட்ட தாவணியும் அணிந்த இரு வர் — அவன் தந்தை அந்தப்பெண்ணுடன்

போட்டிக் கதை -15



சேர்ந்து நிற்க, ஆரத்தி எடுத்துவிட்டு வடக்குப் பக்கமாகக் கொட்டிவிட்டுப் போனார்கள்.

சங்கர் ஓர் ஓரமாக ஒதுங்கினான். அப்படியானால் அவன் அம்மா இல்லையா? போய் விட்டாளா?... அவன் உடல் அவனையும் அறியாமல் குலுங்கியது.

பக்கத்தில் தெருத் திண்ணையில் வெற்றிலைச் செல்லம் — எவர்சில்வர் கூஜா சகிதம்— சீட்டுக் கச்சேரி.

''ராமசாமி திரும்பிட்டான்... பார்த்தயோன்னோ?... குதிர் மாதிரி ரெண்டு பெண் வீட்டில் இருக்கும்போது இவன் போய் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறான்!... யார் கேட்கிறது மகா கோபக்காரன்!''

அப்படியானால் ஆரத்தி எடுக்க வந்த பெண்கள் — அவன் தங்கைகள். சங்கர் பெருமூச்சு விட்டான்.

திடீரென்று திரும்பி அவன் வேகமாக நடந்தான். அந்தவீட்டுக்கு இனிமேல்போய் என்ன பலன்? அந்தப் பெண்ணைப் பார்த்துப் பரிதாபப் படவா? தன்னை விடப் பத்து வயது இளையவளாகத் தனக்கு ஒரு அன்னை கிடைத்ததற்கு ஆனந்தப்படவா?

அவனுக்கு இப்போது திருமணம் இல்லை. மிகப் பெரிய பொறுப்பு இரண்டு இருக்கிறது. தன் கடமையைப் பற்றிக் கவலைப் படாத தகப்பன் இருக்கும்போது அந்தப் பளுவை அவன்தானே தாங்க வேண்டும்? அவன் ஏமாற்றத்தைத் தவிர்க்க இந்தப் பொறுப்பு ஒன்றுதான் முடியும்!

சீட்டுக் கச்சேரியில் ஒரு குரல் உயர்ந்து கேட்டது:

''ஏண்டா சாமா!... எவனோ காக்கிச் சட்டைக்காரன் வந்தான்... நின்னான்... திரும்பி போயிட்டான்... யார்ரா அது?''

சாமா புகையிலையைக் குதப்பிக்கொண்டே பதில் சொன்னான்.

''ஊருக்குப் புதுசு போலிருக்கு.. வெள்ளாளத்தெருன்னு நுழைஞ்சுட்டான். அக்கிரகாரம்னு தெரிஞ்சதும் திரும்பிப் போறான்!''

ஊருக்கு வெளியே — பெரிய சுமையைத் தானே வலியத் தன் தோள்மீது ஏற்றிக் கொண்ட அந்தப் பொதிமாடு பஸ்ஸுக்காகக் காத்திருந்தது!



அருள்வாக்கு

ஸௌந்தர்ய லஹரியில் நம் ஆசார்யாள் சொல்லிக் கொண்டு வரும்போது மூலாதார சக்ரத்தில் அம்பாள், ஈச்வரன் இரண்டு பேருமே நடனம் செய்பவர்களாக விளங்குகிறார்கள் என்று சொல்கிறார். லாஸ்யம் என்ற பெண்களுக்கான நடனத்தைச் செய்யும் 'ஸமயா' என்னும் ரூபத்தில் அம்பாள் இருக்கிறாளாம். நவரஸ மஹா தாண்டவம் — தாண்டவம்தான் புருஷர்களின் நடனம் — செய்கிற ஆனந்த பைரவர் என்ற மூர்த்தியாக ஈசுவரன் இருக்கிறாராம். இங்கே அவர் ஆடுவது ஊழிக் கூத்து என்ற ஸம்ஹார நடனமல்ல. ஊழியில் அழிந்த லோகத்தை மறுபடி ஸ்ருஷ்டி செய்வதற்காகவே தான் ஜனக-ஜனனியாக, அம்மா-அப்பாக்களாகத் தாங்களிருவரும் ஸகல லோகங்களையும் பெற்றெடுக்க வேண்டுமென்றேதான் இங்கே பரமேச்வரனும் பராசக்தியும் நர்த்தனம் செய்கிறார்களாம். தாயின் அன்பு மிளிர்கிற லாஸ்யத்தை அம்பிகையும், தகப்பனுக உலகத்தை அடக்கியாள்வதற்குரிய காம்பீர்யம் நிறைந்த தாண்டவத்தை சிவபெருமானும் மூலாதார சக்ரத்தில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனந்த பைரவி என்று ஒரு ராகத்தின் பேர் சொல்கிறோமே, இங்கே ஆனந்தபைரவரின் சக்தியாக இருக்கப்பட்ட ஸமயா தேவியின் இன்னொரு பெயர்தான் அது.


நாதம், நடனம் இவற்றிலிருந்தே சிருஷ்டி என்று சொல்வதிலிருந்து இந்த காந்தர்வ வித்யைகளின் பெருமை தெரிகிறது. Vibrationகளிலிருந்தே Creation (அதிர்வுகளிலிருந்து படைப்பு) என்கிற ஸயன்ஸ் கொள்கையும் இதுவும் ஒன்றுதான். அதிர்வு என்பதேஆட்டம்தானே. சப்தத்தின் பலவிதமான ஆட்டம் ஸங்கீதம். ரூபத்தின் பலவிதமான ஆட்டம் நாட்டியம். பூமி, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்ரம், க்ரஹம் எல்லாம் சுற்றிச் சுற்றி ஆடிக் கொண்டுதானிருக்கின்றன. சின்னதற்கெல்லாம் சின்னதான அணுவுக்குள்ளும் எலக்ட்ரானும் ப்ரோடானும் நம்ப முடியாத வேகத்தில் நாட்டியம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டியம் நடக்காவிட்டால் அவை அணு என்ற ரூபமே பெற முடியாது.

ஸ்ருஷ்டி இதிலிருந்துதான் பிறக்கிறதுஎன்பதாலேயே ஸ்ருஷ்டியிலிருந்து விடுபடுவதற்கும் இதன் மூலத்துக்குப் போகவேண்டும் என்றுதானே ஆகிறது? அதனால்தான் கீத, வாத்ய, ந்ருத்தியங்களையே மோக்ஷ மார்க்கமாக அப்யஸிக்கச் சொல்லி யிருக்கிறது.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

கவலையற்ற வருங்காலத்தை அமைத்துத் தருவது

லக்ஷ்மி கிருபா டெபாசிட் திட்டம்



26-10-82 முதல் வட்டி விகிதம் உயர்த்தப் பட்டிருப்பதால் திரும்பப் பெறும் துகை முன்னைவிட அதிகமாகியுள்ளது !

திட்டத்தின் முக்கிய அம்சம் — மாதம் ரூ. 50/- அல்லது அதன் பெருக்கத்திற்கு 5 வருடத்துக்கு சந்தா செலுத்தி, கூடிய வட்டி முதல் தொகையை 6, 7, 8, 9, 10 வருடம் சென்று திரும்பப் பெறலாம். அப்படி நீங்கள் திரும்பப்பெறும் தொகை உங்களை பிரமிக்கச் செய்யும் கணிசமானதாக இருக்கும்.

இத்திட்டத்தின் குறைந்த பட்ச கெடு 6 ஆண்டுகள். உயர்ந்த பட்ச கெடு 10 ஆண்டுகள். இன்றே உங்கள் அருகிலுள்ள எங்கள் கிளைக்கு விஜயம் செய்து பயன் தரும் இத்திட்டத்தில் சேருங்கள்.

மாதச் சந்தா 5 வருடத்திற்கு	கெடு முடிவில் திரும்பப் பெறும் துகை				
	6 வருடம்	7 வருடம்	8 வருடம்	9 வருடம்	10 வருடம்
50 100 200	4460.07 8920.14 17840.28	4971.86 9943.72 19887.44	5542.08 11084.16 22168.32	6176.32 12352.64 24705.28	6884.58 13769.16 27538.32


லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கரூர்-639 001

நிர்வாக அலுவலகம் : சென்னை-600 086

என். முத்தியாலு
சேர்மன்

அன்னிய செலாவணியில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் பெற்ற வங்கி.



கும்மியடி பெண்ணே கும்மியடி!
பத்து லட்சமென கும்மியடி!!
பொங்கலுக்கு தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு வழங்கும் முதல் பரிசு
ரூ.10 லட்சம்
மூன்று சிறப்பு
இரண்டாவது பரிசுகள்
ரூ. 1,00,000 வீதம்
மற்றும் ஆயிரக்கணக்கான இதர பரிசுகள்!
தித்திக்கும் பொங்கல்
சிறப்புக் குலுக்கல் நாள்: 30-1-1983
சீட்டின் விலை ரூ. 2/-
இயக்குநர், தமிழ்நாடு பரிசு சீட்டுத் திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002
மற்ற மாநில லாட்டரிகளைவிட தமிழ்நாடு அரசு பரிசு சீட்டின் சிறப்பு அம்சங்கள்:
• வருமான வரி பிடித்தம் மட்டும் போக மீதிப் பணத்தை அப்படியே வழங்குவது தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு ஒன்றே.
• விற்பனை ஆகாத சீட்டுகளின் எண்களை நீக்கி விட்டு மற்ற சீட்டுகளை குலுக்கலில் சேர்த்து முடிவுகளை அறிவிப்பதும் தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு ஒன்றே.
• நான்காவது பரிசு முதல் ஏழாவது பரிசு வரை பரிசு பெறும் எண்கள் ஒவ்வொரு வரிசைக்கும் தனித்தனியாக குலுக்கி எடுப்பதும் தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு ஒன்றே.
DIPR 674/82 (R)

உயர்ந்த லட்சியம் உண்டு!

● கன்யாகுமரி கடலோரப்பகுதிகளில் மீனவர் குடியிருப்புக்கள் அதிகரிப்பதாலும்கடல் பொங்கிப் பூமி அரிப்பு ஏற்படாதிருக்க எழுப்பப்பட்டுள்ள சுவர் காரணமாகவும் இயற்கை எழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. போதாக் குறைக்கு இப்போது விவேகானந்தர் நினைவாலயத்துக்கும் குமரி முனைக்கும் இடையே பாலம் அமைக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர். இதனால் கடற்கரையின் அழகே கெட்டுவிடும். கலை உள்ளம் படைத்த நமது முதல்வர் இதை அனுமதிக்க மாட்டார் என நம்புகிறேன்.

கன்யாகுமரி — சுவாமி ஜோதிர்மயாநந்தா

● கேள்வி பதில் பகுதியில் ஜனதா தலைவர் சந்திரசேகரின் பாதயாத்திரை அனாவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வருந்துகிறேன். உயர்ந்த லட்சியம் இப் பாதயாத்திரைக்கு உண்டு. காந்தீயம், ஜனநாயகம், சோஷலிஸம்,மதச்சார்பற்ற தன்மை, சகோதரத்வம் போன்ற உயர்ந்த லட்சியங்களையும் அவைகளின் அவசியத்தையும் திரு சந்திரசேகர் இந்தப் பாரத பாத யாத்திரையின் போது கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்வதுடன், கிராமப்புற சுகாதாரம், கிராமத் தொழில், கல்வி, போன்றவற்றின் நன்மைகளையும் எடுத்துக் கூறுவார். குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும் விளக்குவார். மக்களை நேருக்கு நேர் சந்திப்பதன் மூலமே மக்களுக்கு அதிக நன்மையைச் செய்ய முடியும் என்பதும் இப்பாத யாத்திரை மேற்கொள்வதற்கு ஒரு காரணமாகும்.

திருச்சி — கே. பாலசுப்பிரமணியம் (மாணவர் ஜனதா தலைவர்)

● திறமையான ஆட்சி இல்லை என்று பலர் அபிப்பிராயப்படுவதாக கேள்வி பதில் பகுதியில் தராசு கூறுகிறார். தமிழ் நாட்டில் கிராமங்கள் எம். ஜி. ஆர். ஆட்சியில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் அளவிடமுடியாதது. உதாரணமாக 1947க்குப் பிறகு 1979வரை துளிகூட முன்னேற முடியாதிருந்த 8,000 மக்கள் வசிக்கின்ற எங்கள் கிராமம் இன்று அடைந்துள்ள முன்னேற்றம் பாருங்கள்: இரண்டரை லட்சம் ரூபாயில் தார் சாலை, 2 பெருந்துகள், 50 ஆயிரம் ரூபாயில் ஒரு சிறு பாலம், ஏரி, மதகு சாலையைச் சீர்செய்து வழி பிறக்கச் செய்தது, ஒரு கால் நடை மருத்துவமனை, எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. இதுபோல் சிறு சிறு கிராமங்கள் கூட இன்றைக்கு அடைகின்ற அடிப்படை வசதிகள் ஏராளம்.

காட்டுக்காநல்லூர் கே.எஸ். பன்னீர்செல்வம்

(முதல்வரின் கிராமப்புற அபிவிருத்தி திட்டங்களால் ஏற்பட்டுள்ள நற்பலன்களைப் பாராட்டி எழுதப்பட்ட தலையங்கம் கல்கி 25-4-82 இதழில் காணலாம்.)

● இவ்வாண்டு இசை விழாக்களில் விருது பெறும் மூன்று இசைக் கலைஞர்களில் ஒருவர் படத்தை மட்டுமே அட்டையில் பிரசுரம் செய்திருப்பது ஏனோ? மற்ற இருவரையும் கூட இணைத்திருக்கலாமே!


சென்னை-33 — சரஸன்

● விருது பெறும் மும்மணிகளைப் பற்றி அவர்களது ரத்தினங்கள் (பிள்ளைகள்) மூலமாக ''என் தந்தை'' என்று வழங்கியது நன்றாக இருந்தது.

திருநெல்வேலி — எஸ். கணேசன்

● இசைச் சிறப்பிதழை யாருக்கும் 'வசை' பாடாத சிறப்பிதழாக அமைத்த கல்கிக்கு எங்கள் பாராட்டுக்கள்.

புதுச்சேரி-1 — தி. உமாபதிராசா



● காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள் அருளாசியைப் பெற்று வந்த கல்கி இதழைப் படித்ததும் மகிழ்ச்சியடைந்தாலும் முதல் பக்கத்தில்போடாமல் கடைசியில் போட்டது தான் வருத்தம் அடையச் செய்கிறது.

ஊசூர் வெளிகடை — ராஜன்

● சில இசைக் கலைஞர்கள் பற்றிய கட்டுரைகளைமட்டும் வெளியிடுவதனால் பல இசைக் கலைஞர்கள் பற்றிய செய்திகள் விடுபட்டுப் போகுமோ என்பதனால்தானோ துணுக்குகளாகவே பிரசுரித்து அதிக இசைக் கலைஞர்களைப் பங்குகொள்ள வைத்து இசைச் சிறப்பிதழைப் பன்மடங்கு சிறக்க வைத்துவிட்டீர்கள்!

தென்காசி — கு. அருணாசலம்

● இசைச் சிறப்பிதழில் இடம்பெற்றுள்ள அனைத்தும் இசைத் துக்கடாக்களே என்று அறிவித்துவிட்டு மத்தியில் நியூயார்க் கோதுமை வயல் வந்தது தப்புத் தாளமா?

மதுரை-16 — நாகுவேலன்

● ரமணியின் புல்லாங்குழல் சங்கீதம்தான் இசைக்கும் என்று நினைத்திருந்தோம். கதையும் சொல்கிறதே!

திருவாரூர் — என். நம்பி

ரூபாய்க்கு மூன்று கொலை

காட்சி 12

[அப்பு வீடு. மாலை 7 மணி. சாவித்திரி தரையில் விழுந்து கிடக்கிறாள். வீட்டுக்காரர், வக்கீல் வராகசாமி வருகிறார். அவளைத் தொட்டுப் பார்க்கிறார். கத்தியால் அவள் குத்தப்பட்டிருப்பதைக் கண்டு மிரண்டு போலீஸுக்குத் தகவல் தர ஓடுகிறார்.]

காட்சி 13

[போலீஸ் ஸ்டேஷன். கான்ஸ்டபிள் 102, வக்கீலைக் குறுக்கு விசாரணை செய்ய, வக்கீல் வராகசாமி குழம்புகிறார். அப்போது அங்கு இன்ஸ்பெக்டர் வருகிறார்.]

இன்: மிஸ்டர் வராகசாமி: மனைவி இறந்த சேதி கேட்டு அப்பு மயக்கமாயிட்டாரு. பாவம்... போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்திருக்கு. அதை வச்சுப் பார்க்கிறப்போ இந்தக் கொலை நகைக்காகவோ, கற்பழிப்புக்காகவோ நடக்கலை. கத்திக் குத்தைத் தவிர உடம்பிலே எந்தக் காயமும் இல்லை. ரொம்பக் கிட்டத்திலிருந்து திடீர்னு தாக்கியிருக்கணும். கொலைகாரன் இடது கைக்காரன். உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம்...?

வரா: ம்...அப்பு கொலை நடந்த அன்னிக்குக் காலையில என்கிட்ட ஆபீஸ் விஷயமா டூர் போறதாச் சொல்லிட்டுப் போனான். அவனுக்கு ரஞ்சித்னு ஒரு நண்பன். அவன் கூட வேலை பார்க்கிறவன். அப்பு இல்லாத போதுகூட அடிக்கடி வீட்டுக்கு வருவான். நான் ஜாடை மாடையாக் கண்டிப்பேன். அவனை.....

இன்: இப்போதைக்கு எந்த ஒரு அவசர முடிவும் எடுக்கக் கூடாது. பார்க்கலாம்...

காட்சி 14

[அப்பு வீடு. அப்புவைப் பார்க்க உள்ளே வருகிறார் இன்ஸ்பெக்டர். மேஜை மீது கிடக்கும் ஒரு புத்தகம் அவர் பார்வையில் படுகிறது. அதை எடுக்கிறார்.]

இன்: ம்... எனது வாழ்க்கை. ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக். தமிழாக்கம் ராஷ்மி.

(அதில் ஒரு பக்கம் மடித்து வைக்கப்பட்டிருப்பது கண்டு உரக்கப் படிக்கிறார்.)



"அது உங்க தியரி. எங்க கணக்குப்படி கொலைகாரன் கொலை நடந்த இடத்துக்கு வந்தே தீருவான்!"

படங்கள்: சு. வெ. ரா. மோகன்



வியட்நாம் வீடு சுந்தரம்

''என் சொந்த வாழ்க்கையில் நான் பயந்த சுபாவம் உள்ளவன். என் நிஜ வாழ்வின் அந்தக் குணமே நான் சினிமாவில் பயங்கரங்களைப் புகுத்தியதற்குக் காரணம். மெய்யான துணிவு இல்லாத நான் வெளிப்பார்வைக்கு ரொம்ப தைரியசாலி போல் நடந்து கொள்கிறேன்... ம்...இந்தப் புத்தகத்தை யார் படிக்கிறாங்க?

அப்பு (வந்துகொண்டே): வாங்க இன்ஸ்பெக்டர். நான்தான் படிக்கிறேன். எனக்கு ஹிட்ச்காக்னு ரொம்பப் பிடிக்கும்.

இன்: ஐ. ஸீ.

(ரஞ்சித் வருகிறான்.)

அப்பு: வா ரஞ்சித். சாவித்ரி இருந்தப்ப அடிக்கடி வருவே. இப்பல்லாம் வரதே யில்லே!

ரஞ்: அது வந்து....

அப்பு: கொலே நடந்த இடத்துக்கு வரப் பயமாத்தான் இருக்கும். அது சகஜம்.

இன்: அது உங்க தியரி. எங்க கணக்குப்படி கொலேகாரன் கொலே நடந்த இடத்துக்கு வந்தே தீருவான்!

(ரஞ்சித் சிகரட் பற்றவைக்கிறான். அவன் இடது கரத்தைப் பயன் படுத்துவதைக் கவனிக்கிறார் இன்ஸ்பெக்டர்.)

இன்: மிஸ்டர் ரஞ்சித்! கேஸ் விஷயமா சில தகவல்கள் தேவைப்படுது. சாயந்திரம் கொஞ்சம் ஸ்டேஷனுக்கு வரீங்களா?

ரஞ் (மிரண்டு): நானா? ஸ்டேஷனுக்கா!

அப்பு: சார்! அவனுக்கு எக்ஸிபிஷன்ல வட்டத்துக்குள்ள பின் அடிக்கிறது ரொம்பப் பிடிக்கும். சாயந்திரமானு எக்ஸிபிஷன் போயிடுவான்.

இன்: ஓ... பின் அடிக்கிறதில எக்ஸ்பர்ட்டா!

ரஞ்: அப்ப நான் வரட்டுமா? வரேன் சார்!

அப்பு: என்ன ரஞ்சித் வந்ததும் போறேங்கற?

ரஞ்: சும்மாத்தான் வந்தேன். நீ எங்க இருக்கப் போறே? பார்ட்டைம் வேலேக்குப் போயிருப்பேன்னு நினேச்சேன்.

(ரஞ்சித் போகிறான்.)

இன்: மிஸ்டர் அப்பு! நானும் புறப்படறேன். (புத்தகத்தை அப்பு பக்கமாக வீச, அப்பு இடது கரத்தால் அதைப் பிடிக்கிறான்.)

இன்: லவ்லி கேட்ச்! வரட்டுமா?

(போகிறார்.)

காட்சி 15

[ஆல்ஃபிரெட் இருப்பிடம். தன்னேப் போலீஸ் சந்தேகப்படுவதை உணர்ந்து இக்கட்டிலிருந்து தப்ப எண்ணி ஆல்ஃபிரெட் இருப்பிடம் தேடி வருகிறான் ரஞ்சித்]

ரஞ் (பரபரப்புடன்): ஆல்ஃபிரெட்... ஆல்ஃபிரெட்!

ஆல் (நாற்காலியில் அமர்ந்து முதுகைக் காட்டியவாறு): யெஸ்....?

ரஞ்: ஐ ஆம் ரஞ்சித்.

ஆல்: வெரி குட் ஸிட் டவுன்.

ரஞ்: எனக்கு உடனடியாக உங்க உதவி தேவை. அப்புவைக் கொல்லச் சொல்லி அவன் மனைவி சாவித்திரி உங்களே சம்பத் மூலமா அணுகி அட்வான்ஸும் கொடுத்தாங்க. அதுக்குள்ள எவனே பாவி சாவித்திரியையே கொன்னுட்டான். இப்ப போலீஸ்ல நான்தான் அவளேக் கொன்னிருப்பேன்னு சந்தேகப்படறாங்க. செய்யாத குற்றத்துக்கு எனக்கேன் தண்டனே? அப்பு வேற இன்ஸ்பெக்டர் என்னேச் சந்தேகப்படக் கூடிய விதத்தில் அசட்டுத்தனமாப் பேசிட்டான். சாவித்திரியைக் கொன்னது யார்? தயவு செஞ்சு கண்டு பிடிச்சுச் சொல்லுங்க! நீங்க எவ்வளவு பணம் கேட்டாலும் தரேன். சொல்லுங்க. சாவித்திரியைக் கொன்னது யார்?

ஆல்: சாவித்திரியைக் கொன்னது அப்பு.

ரஞ்: என்ன உளர்றீங்க? அப்புவாவது கொல்லவதாவது? அவன்தான் அன்னிக்கு ஊர்லயே இல்லேயே?

ஆல்: மடையா! அன்னிக்கு நான் ஊருக்கே போகலேடா. நான்தாண்டா கொன்னேன்.

(சுழல் நாற்காலியைத் திருப்ப அவனேப் பார்த்து ரஞ்சித் அதிர்ச்சி அடைகிறான்.)

(தொடரும்)

பா. ரா. மலையாளம் கற்கிறாராமே?



✖ டி விரிசெஸ்



✖ பா. ரா.



✖ கமல்

○ ஆர். ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்

? **பெரிய மனிதர்கள் அறிவுறுத்தியது, செய்து காட்டியது இவற்றையெல்லாம் கிடப்பில் போட்டு விட்டு, பிறந்த நாள், நினைவு நாள் கொண்டாட்டங்களின் பயன் என்ன?**

! இதை மக்கள் புரிந்துகொண்டதால்தானோ என்னவோ, தமிழக அரசு அண்மையில் நடத்திய ராஜாஜி விழாவுக்குக் கலைவாணர் அரங்கில் கூட்டம் மிக மிகக் குறைவு. அதிகபட்சமான நாற்காலிகளை நோக்கியே சொற்பொழிவாற்றினாலும் பேசிய எல்லோருமே உருக்கிவிட்டார்கள். குறிப்பாக ம.பொ.சியும் மூதறிஞரும் சில கருத்து வேற்றுமைகளுக்கும் அன்புப் பிணைப்புக்கும் இடையில் சிக்கித் திணறியதை, சிலம்புச் செல்வரே விவரித்தபோது மேனி சிலிர்க்காதவர் அரங்கில் இல்லை.

○ பி. எஸ். பரமசிவம், மதுரை

? **நயாகரா அருவியின் உச்சியிலிருந்து குதித்து வெற்றி பெற நினைக்கும் பம்பாயைச் சேர்ந்த 25 வயது இளைஞர் குல்கர்னி பற்றி...?**

! வென்றால் கின்னஸ் புக் : தோற்றால் சித்ர குப்தன் புக்.

○ எஸ். இராமநாதன், அருப்புக்கோட்டை

? **தேசிய விளையாட்டுக் கொள்கைபற்றி அறிவிக்கப் போவதாக மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் பூட்டாசிங் கூறியுள்ளாரே?**

! எல்லாக் கொள்கைகளையுமே விளையாட்டாக எடுத்துக் கொள்ளும் நம் ஆட்சியையாளர்கள் விளையாட்டுக் கொள்கையையாவது ஸீரியஸாக ஏற்றுக் கொண்டு செயல்பட்டால் சரி.

○ மோ. க. இரத்தினசாமி, மோகனூர்

? **பா. ரா. மலையாளம் கற்கிறாராமே? கவர்னர்களாக நியமிக்கப்படும் ஒவ்வொருவரும் எதற்கு இந்த தமாஷ் பண்ணுகிறார்கள்?**

! அட, நீர் ஒண்ணு, இதையெல்லாம் கூடவா குறை சொல்றது? கவர்னர்களுக்கும் பாவம், பொழுது போக வேண்டாமா?

○ சி. சௌந்தரபாண்டியன், கிருஷ்ணகிரி

? **எசண்டா கோப்பைக்கான ஹாக்கி போட்டியில் பாகிஸ்தானை மண்ணைக் கவ்வ வைத்த இந்தியாவின் ஆட்டம் பற்றி...?**

! இறுதிப் போட்டியில் இந்தியாவை மண்ணைக் கவ்வ வைத்த ஆஸ்திரேலிய ஆட்டத்துக்கு ஈடாகாது. ஏஷியாத் தலை குனிவை நிமிர்த்தியதாகவும் கருதமுடியாது. அசல் வைரத்தைத் தொலைத்து விட்டுப் போலியாவது பத்திரமாக இருக்கே என்று திருப்திப்படுவதுபோல் தான்.

○ எஸ். சௌரிராஜன், லெட்சுமாங்குடி ★

? **மனித சக்தியின் மாபெரும் சாதனைகளில் இன்று வியக்க வைப்பது எது?**

! செயற்கை இருதயம் பொருத்தும் ஆபரேஷன் வெற்றி அடைந்ததுதான். கிளார்க் என்ற பல் வைத்தியர் இருதயம் பழுதுபட மரணத் தருவாயிலிருந்தார். அமெரிக்க ஸர்ஜன் டி விரிசெஸ் செயற்கை இருதயத்தை மிருகங்களிடம் பரிசோதித்து வெற்றி கண்டிருந்தார். அதை ஏற்கும் முதல் மனிதராக விளங்க கிளார்க் சம்மதித்தார். 'மிகவும் வேதனை தருவதாக இருக்கலாம்: உயிருக்கும் உத்தரவாதம் இல்லை' என்று கூறியும், 'எப்படியானாலும் சாகப் போகிறேன். இதைப் பரிசோதித்துப் பார்க்க விஞ்ஞான உலகுக்கு என் உடலை வழங்குவதில் பெருமைப்படுகிறேன்' என்றார் இந்த தீரர். ஆபரேஷன் வெற்றிபெற்றது என்றாலும் கிளார்க் நீண்ட காலம் உயிர் வாழ்வாரா? கூற முடியாது. ஆனால் செயற்கை இதயத்துடன் மனிதன் வாழ்வது சாத்தியமே என்று நிரூபித்துவிட்டதால் சரித்திரத்தில் கிளார்க் என்றும் வாழ்வார். செயற்கை இருதயம் இன்னும் பல முன்னேற்றங்களை எதிர்காலத்தில் காணும். அதற்குப் பலர் உதவுவார்கள். என்றாலும் சரித்திரப் பெரும்

புகழ். ''இந்த ஆபரேஷனைச் செய்தது ஓர் ஆன்மீக அனுபவம்'' என்று வர்ணித்த டாக்டர் டி விரியெஸ், செயற்கை இருதயத்தைத் தயாரித்த டாக்டர் ஜார்விக் ஆகியோருக்கே.

○ அ. கஸ்தூரிஜமால், திருமங்கலக்குடி

? தலைநகரை எப்படியும் திருச்சிக்கு மாற்றியே தீருவோம் என்று மீண்டும் பேசக் கிளம்பியுள்ளதே?

! ''மதராஸ் மனதே'' போராட்டத்தை எதிர்த்துச் சென்னையைத் தமிழகத் தலைநகராகக் காத்துத் தந்தவர்களுக்கு நன்றி கூறும் முகமாக முதலில் ஒரு ஞாபகச் சின்னத்தைத் திருச்சியில் எழுப்பிவிட்டுப் பிறகு தலைநகரை மாற்றும் முயற்சி பற்றி பேசினால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

○ இளஞ்சேரன், கோபி

? தேசிய புத்தக வாரம் கொண்டாடும் நோக்கில் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

! புத்தகங்களே வாங்காமலிருந்து நூலக இயக்கத்துக்கு மாபெரும் சேவை செய்து வரும் நூலக இயக்குனர் ஆனந்தராஜ் அவர்களின் ஆற்றல்களைப் பற்றி அண்மைக் காலமாக வெளி வந்து கொண்டிருக்கும் செய்திகளைத் தொகுத்து ''சிக்கன சிகாமணி'' என்ற தலைப்பில் புத்தகமாகப் பதிப்பித்து அதனை முதல்வர் அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்யலாம். அதற்காவது அறுநூறு பிரதிக்கு ஆர்டர் கொடுக்கிறாரா ஆனந்தராஜ் என்று பரீட்சித்துப் பார்க்கலாம்.

? சோவியத் நாடு செல்லும் இந்தியக் குழுவின் தலைவராக பீகார் முதல்வர் செல்வது குறித்து?

! சுப்ரீம் கோர்ட் மிச்ராவைத் தப்பவிட்டு விட்டபோதிலும், ஜஸ்டிஸ் டுல்ஸபர்கார் மட்டும் 'மிச்ரா மீது கிரிமினல் வழக்கு தொடுக்கப்படப் போதிய ஆதாரங்கள் உள்ளன: வழக்கை வாபஸ் பெறுவது தவறு' என்று தைரியமாகக் கூறியுள்ளார். இப்படியெல்லாம் அதிகார துஷ்பிரயோகம் செய்யும் நீதிபதிகளை எப்படி அடக்கி ஆள்வது என்பதை ருஷ்ய விஜயத்தின்போது மிச்ரா கற்றுக் கொண்டு திரும்புவார் என்று எதிர்பார்க்கலாம்!

○ ஆர். விமல்—வித்யா, கிருஷ்ணராயபுரம்

? டிசம்பர் சீசனில் சங்கீதக் கச்சேரிகள் கேட்டதில் உண்மையில் மனத்தைத் தொட்டது யாருடைய கச்சேரி?

! இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் ஆரம்ப விழா வன்று, ''விமர்சகர்களுக்கு என்ன தெரியும்? வம்பர்கள், விடலைகள், வீணர்கள்'' என்று ஒரு பல்லவி பாடினார் பாருங்கள், வீணை எஸ். பாலசந்தர்; அரை மணி நேரத்துக்கு மேல் நீடித்த இந்தப் பல்லவி மனசைத் தொடுவதாவது, கசக்கி,பிழிந்து ரணமாக்கியேவிட்டது. போங்கள்!

'கிரிடிக்கு'களுக்கு இசைக் கலைஞர்களைக் கடுமையாக விமர்சிக்க உரிமை உண்டு எனில் பாலசந்தருக்கும் 'கிரிடிக்'குகளைக் கிழித்து நார் நாராக்க உரிமை உண்டு தான், மறுக்கவில்லை. ஆனால், விமர்சகர்கள் என்ன தவறுகளைச் செய்கிறார்கள் என்று பாலசந்தர் சுட்டிக் காட்டினாரோ, அதே தவறுகள் பலவற்றை பாலசந்தரும் அன்று செய்து கொண்டிருந்தாரே, அது தான் வேதனை அளித்தது!

○ ரவி, சென்னை

? இனி கௌரவ வேடங்களில் நடிக்க மாட்டேன் என்று கமலஹாசன் கூறியது பற்றி?

! அவர் கெஸ்ட் ரோலில் நடிக்கும் படங்கள் தோல்வியுற்றிருக்கலாம். அதனால் சலிப்புற்று இப்படிக் கூறியிருக்கலாம். அது சரி, நான்தான் கேட்கிறேன், ஒரு கோடி, ஒன்றரை கோடி என்று வடக்கே முதலீடு செய்து படம் எடுப்பவர்களுக்குக் கமலின் கால்ஷீட் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கும்போது இங்கே அவர் கழுதையுடன் கௌரவ வேடத்தில் நடிப்பது அவசியமா?

○ ஆனந்தன், நாங்குநேரி

? திரை உலகில் உங்களை சிரிக்க வைத்த சம்பவம்?

! அஞ்சலி தேவி நடித்த பழைய ''டவுன் பஸ்'' திரைப்படத்துக்கான சமீபத்திய விளம்பரத்தில், கமல், ரஜினி, கார்த்திக், பாக்யராஜ், ராதா, ஸ்ரீதேவி போன்ற பலர் படங்களைப் போட்டு, 'இந்த மாபெரும் நட்சத்திரங்கள் இல்லாத மாபெரும் படைப்பு' என்று காணப்பட்டது சிரிப்பை வரவழைத்தது. அதே சமயம், 'இதைப் புதுமை என்று கூற முடியாது: காலத்தின் கொடுமை என்று தான் சொல்ல வேண்டும்' என்ற எண்ணமும் எழுந்து மனசைச் சங்கடப்படுத்தியது.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

எஸ். சௌரிராஜன்,
8, கொரடாச்சேரி, ரோடு,
லெட்சுமாங்குடி (போஸ்ட்)-614 102
(தஞ்சை மாவட்டம்)

✖ ஜார்விக்



✖ பாலசந்தர்



நீங்கள் கேட்டவை தராசு



SRI JAGADESWARI

Electronic Service Centre

17, Ramanathan Street, T. Nagar,
MADRAS-600017

Watch Specialists in **Quartz, Electronic**
Omega, Rado, Rolex, Seiko,
Citizen, HMT Etc.,

The Service only

Sri Mookambika Screen Printers

17, Ramanathan Street, T. Nagar, Madras-600017

Specialist in Stickers Sunshade

For CAR & AUTO, PVC, SILVER FOIL, GOLD FOIL,
PAPER, TIN BOARDS BANNERS Etc.,

CAR Stickers: **AMBASSADOR Rs. 4/- FIAT Rs. 3-75**

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இனாம் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி) ஏஜெண்டுகள் தேவை



மெரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால் பெட்டி 1405, 14, ரெங்கநாதன் தெரு.
தி.நகர் சென்னை-600 017.

விடிவதற்குள் வா

23

மறு நாள் காலை கிரிஜாவை டாக்டர் சாவித்திரியிடம் கட்டாயமாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று வற்புறுத்தினான்.

அம்மா கவலையுடன், ''எதுக்குங்க, லேடி டாக்டர்? ஏதாவது அவங்க சொன்னாங்களா?'' என்றார்.

''ஒண்ணும் சொல்லலை. ஆனா உங்கமகளைக் காட்ட வேண்டியது அவசியம்'' என்றான் சற்றுக் கடுமையாக.

''மாப்பிள்ளை ஏதும் விபரீதமா இருந்துட்டா என்ன செய்வீங்க?'' என்றாள் கண்களில் கண்ணீருடன்.

''பரிசோதனை பண்ணுறதுக்குள்ளாறவே என் இப்படி முடிவு கட்டுறீங்க?''

''எல்லா அதிர்ச்சிக்கும் தயாரா இருக்கணுமில்லே? என்ன செய்வீங்க, என் பொண்ணை? நட்டாத்திலே விட்டுராதீங்க?''

''அதையெல்லாம் பத்தி அப்புறம் யோசிக்கலாம்.''

''அய்யோ பிடிகொடுத்துப் பதில் சொல்ல மாட்டங்கிறீங்களே. அது அறியாப் பொண்ணுங்க. நகை ஆசையைத் தவிர வேற ஏதும் குற்றமில்லே. அவகிட்ட மாப்பிள்ளை அவசரப்பட்டு ஏதும் முடிவெடுத்துராதீங்க'' என்றாள்.

கிரிஜாவை எழுப்பி ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்று சொன்ன போது அவள் மறுத்தாள்.

'' வந்துதான் ஆகணும்.''

'' எனக்கெதுக்கு? டாக்டர் ஊசி குத்துவாங்க, வலிக்கும்! எனக்கு ஒண்ணுமில்லே. சரியாப் போச்சு!'' என்றாள்.

''இத பாரு, கிரிஜா, பிடிவாதம் பிடிக்காதே. சொன்னபடி கேளு.''

'' நீங்க நான் சொன்னபடி கேப்பீங்களா?''

''சொல்லு!'' என்றான் ஆயாசத்துடன்.

''எனக்குப் புது செட்டு நகை வாங்கித் தருவீங்களா?''

''முதல்லே டெஸ்ட் ஆகட்டும் பார்த்துக்கலாம்.''

''பார்க்கலாம்னு சொல்லக் கூடாது. அப்புறம் நீங்க ஏமாத்திப் பிளேன்ல ஏறிப் போய்விடுவீங்க.''

''இத பாரு, கிரிஜா! நகை நகைன்னு பைத்தியம் பிடிக்க அலையாதே'' என்று அதட்டினாள் அம்மா.

'' சரி, கிரிஜா! ஆஸ்பத்திரிக்கு வந்தியானா உனக்கு நகை வாங்கித் தர்றேன். எல்லாம் சரின்னு தீர்மானமாகட்டும்'' என்றான். அம்மாவைப் பார்க்கத் தயங்கினான். அவள் கண்களில் நீர்த் திரை உறுத்தியது. தான் செய்யப் போவது அநியாயம் என்று மனசின் ஓரத்தில் ஏதோ புத்தி சொல்லிக் கொண்டே இருந்தது. அந்தச் சின்னக் குரலை அவன் கவனிக்கவில்லை.



இந்திரா புதுசாகப் புடவை கட்டிக் கொண்டு பனிச்சென்று அலங்காரம் பண்ணிக் கொண்டு அவர்களுடன் வர, வண்டி வைத்துக்கொண்டு மூவரும் ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். கனகசபை போகும் வழியில் தன் வசனங்களைத் தயார் பண்ணிக் கொண்டு சென்றான். இந்திரா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இத பாருங்க, டாக்டர் பரிசோதிச்சுப் பார்த்தாரு. உங்க மக உண்டாயிருக்கா. இதுக்கு என்ன சொல்றீங்க?

''இந்தச் சூழ்நிலையில் எந்தக் கணவனால் ஒரு மனைவியை ஏத்துக்க முடியும்? சொல்லுங்க. நீங்களே சொல்லுங்க! இதைப் போயி கோர்ட்டிலே பிராது போட்டுக் குழப்பவேண்டாம்னு பார்க்கறேன். விவாகரத்து அது இது எல்லாம் வேண்டாம். உங்க மக உங்ககூட இருக்கட்டும். எப்போதுமே இருக்கட்டும். நான் என் வழியிலே போயிடறேன். வேணுமின்னா அப்பப்ப பணம் அனுப்பறேன். ஆனா இனிமே உங்க மகளை ஏத்துக்கச் சொல்லாதீங்க. அவ களங்கப் பட்டவ. அது எதனாலே, எப்படி நேர்ந்தது எல்லாம் எனக்கு ஒரு பொருட்டில்லே. என் நிலையில் எந்த ஆம்பிளையும் இப்படித்தான் செய்வான்.

''தேவகி, தேவகி! இத பாரு. யார் வந்திருக்கேன்? பாரு!'' தேவகி என் தளைகளை எல்லாம் அகற்றிவிட்டு உனக்காக என்னைச் சுதந்திரமாக ஆக்கிக் கொண்டு ஓடோடி வந்திருக்கிறேன், பாரு!''

வண்டி ஆஸ்பத்திரி வாசலில் நிற்க கிரிஜாவை அன்புடன் அழைத்துக்கொண்டு சென்று உட்கார வைத்தான்.

டாக்டர் சாவித்திரியுடன் உற்சாகமாகவே பேசினான். அவளைத் தனியாகக் கூப்பிட்டு, ''டாக்டர்! நீங்க உங்க கடமையைச் செய்யுங்க. என்கிட்ட உண்மையைச் சொல்றதுக்குத்தயங்கவே வேண்டாம். அந்த சிக்கலே நான் என்றைக்காவது ஒரு நாள் சந்திச்சுதானே ஆகணும்? அதனாலே தயங்க வேண்டாம்!'' என்றான்.

போலீஸ்காரர்: அந்த ஆசாமியைக் கழுதைன்னு திட்டினியாமே உண்மையா?

இவன்: நான் ஏனுங்க அந்த நாயைத் திட்டப் போறேன்?

—கடலூர் கன்னியப்பன்



''ஐ ரியலி அப்ரிஷியேட் யுர் அட்டிட்யூட் மிஸ்டர் கனகசபை! வாங்கம்மா! கிரிஜா என்னை ஞாபகம் இருக்குதா?''

''இருக்குது, டாக்டர்! உங்க ரூம்லே கூட பாப்பா போட்டோ இருக்குமே!''

இந்திரா, ''நானும் கூடப் போறேன்'' என்று அவனைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போனாள். அவளை இப்போது நேராகப் பார்ப்பதில் குற்ற உணர்ச்சி ஏதும் தோன்றவில்லை. மெல்ல விஸிலடித்தான். வெளியே போய் சிகரெட் குடித்துவிட்டு வந்தான்.

''தேவகி உனக்கு நான் ஓர்க் பர்மிட் வாங்கித் தர்றேன். இங்கேயே கல்யாணம் கழித்துவிட்டு உன்னை அழைத்துக் கொண்டு தான் போவேன். உனக்காக நான் புது வாழ்க்கை அமைக்கிறேன். உன் கஷ்டங்கள் எல்லாவற்றையும் நீ மறந்து போய் நேசமாக, சுகமாக....''

''மிஸ்டர் கனகசபை! கொஞ்சம் வாங்க!''

உள்ளே டாக்டர் சாவித்திரி அலம்பின கையைத் துடைத்துக் கொண்டிருந்தாள். கிரிஜா ஒரு ஓரத்தில் படுத்திருந்தாள். ''எழுந்திருக்கலாமா, டாக்டர்?''

''எழுந்திரும்மா, மெதுவா மெதுவா!''

'மெதுவா' என்று சொன்னதில் அவனுள் உற்சாகம் ஏற்பட்டது. ஊர்ஜிதமாகிவிட்டது!

''என்ன டாக்டர்!''

''உக்காருங்க! இந்திரா நீ அக்காவை அழைச்சுக்கிட்டுப் போம்மா. வெளியே இரு.''

அவர்கள் சென்றதும் டாக்டர் அவனைப் பார்த்து, ''கங்கிராஜு-லேஷன்ஸ்'' என்றாள்.

''என்ன டாக்டர்?''

''உங்க மனைவிக்கு எதும் விபரீதமா ஆயிடலே! ஷி இஸ் நாட் 'ப்ரெக்னண்ட்'. முதல்லே கொண்டு வந்தபோது எக்ஸாமின் பண்ணிப் பார்த்தப்ப, எனக்குக் கொஞ்சம் சந்தேகமாஇருந்தது. இன்னும் கொஞ்சநாள் பொறுத்து ஃபார்மேஷன் கன்ஃபர்ம் ஆனப்புறம்தான் சொல்லணும்னு நினைச்சேன். இன்னிக்கு நல்லாவே பார்த்துட்டேன்.... யூரின் டெஸ்டும் நெகட்டிவா இருக்கு. உங்க மனைவி கர்ப்பமா இல்லே! போங்க, அவள் கூட இனிமே சந்தோஷமாவாழுங்க! இந்தச் சம்பவத்தாலே உங்க வாழ்க்கையில் ஏதும் சிக்கல் வரவேண்டாம்.''

கனகசபை பிரமித்து வெளியே வந்தான். கிரிஜா வெளியே வந்ததும் எழுந்து நின்று: ''என்ன சொன்னாரு டாக்டர்? எனக்கு உடம்பு ஒண்ணுமில்லேதானே?''

''இல்லே.''

''என்ன சொன்னார் டாக்டர்? ஒண்ணும் ஆயிடலேயாமா?'' என்றாள் இந்திரா.

''இல்லே, கிரிஜா சரியாத்தான் இருக்கிறா'' என்றான் இயந்திரம் போல.

''அப்ப உங்க பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டியதுதானே!'' என்றாள், இந்திரா. அவள் குரலிலும் சற்றே ஏமாற்றம் இருந்தாற்போலத் தோன்றியது. அவளை முழுதும் பார்த்தான்.

"மம்மி, ப்ராமிஸ் திரும்பவும்
கோல்ட் மெடல் ஜெயிச்சிருக்கு..."



"எனக்கொன்றும் ஆச்சரியமில்லே
அதுதான் சிறந்த டூத் பேஸ்டாச்சே..."

ப்ராமிஸ் டூத் பேஸ்ட், டூத் பௌடர் இரண்டுமே சிறந்த தரத்திற்காக 1982க்கான மாண்ட் கோல்ட் மெடல் வென்றிருக்கின்றன.

பல்சாராவுக்கு இரட்டிப்பு வெற்றி

மாண்ட் ஸெலக்ஷன் கோல்ட் மெடல் தரத்தில் தனிச்சிறப்பு பெற்ற பொருளுக்கு அளிக்கப் படும் அகில உலக பரிசாகும். ப்ராமிஸ் டூத் பேஸ்ட் அதை இரண்டாவது தடவையாக வென்றிருக்கிறது.

மேலும், ப்ராமிஸ் டூத் பௌடருக்கு, உலகில் மாண்ட் கோல்ட் மெடல் பரிசு பெற்ற ஒரே டூத் பௌடர் என்ற பெரு மதிப்பும் உண்டு.



The
Monde Selection
Gold Medal

பல்ஸாரா தயாரிப்பு

ப்ராமிஸ்

டூத் பேஸ்ட் மற்றும் டூத் பௌடர் அருமையிலும் அருமை! அவற்றை அனுபவித்து உணருங்கள்.

CHAITRA-BLS-603 TAM



Shilpi IOCL 11/83 TAM

''ஒரு வண்டிக்கு ஏற்பாடு பண்ணு, இந்திரா !''

''நான் சொன்னதை வாங்கித் தருவீங்களா, இப்ப? எனக்கு வாக்குக் கொடுத்திருக்கீங்க!''

''என்ன வாக்கு?''

''டாக்டர்கிட்ட வர்றதா இருந்தா எனக்குப் புதுசா....''

''நகைதானே?''

''ஆமாம்.''

''கிரிஜா, உன்னை எப்படி நான் தனியா விட்டுட்டுப் போக முடியும்? நான் அந்த வேலையை விட்டுட்டு இந்தியாவிலேயே ஏதாவது கிடைக்குமா பார்க்கிறேன்.''—முடிந்தால் மணற் காட்டிலேயே.''

''அந்தச் சம்பாத்தியம் இங்கே வருங்களா?''

''வராதுதான். சம்பாத்தியம் முக்கியமில்லே, கிரிஜா!''

''அப்படி சொல்லாதீங்க. இழந்த சொத்தை மீட்கிறதுக்காகவாவது நீங்க மறுபடி அங்கே போயி வேலே பார்க்கவேண்டியிருக்கும். என் நகைங்க அத்தனையும் போயிருச்சில்லே? அதிலே பாதியாவது திருப்பி நாம சம்பாதிக்க வேண்டாம்?''

''அய்யோ, நகை நகை! ஏங்கா இப்படி நகைப் பைத்தியம் பிடிச்சு அலையுறே!''

''அதாண்டி அழியாத சொத்து. உறவு அழிஞ்சுரும், இளமை அழிஞ்சுரும், தங்கம் மட்டும் அப்படியே நிக்குமில்லே?''

''பேசாம ஒரு பெண்ணைப்பெத்துக்கிட்டுத் தங்கம்னு பேரை வெய்யி!''

''அதுக்கு நகை போட்டாத்தானே கல்யாணம் கட்ட முடியும்? உனக்காக அம்மா என்ன பாடுபட்டாங்க? கல்லு வளையல், ரெட்டைவட சங்கிலி எல்லாத்தையுமே அழிச்சுதானே பண்ணுங்க!''

''உனக்கு மட்டும் என்னவாம்?''

''நான்தான் எல்லாத்தையும் தோத்துட்டு வந்து நிக்கறனே!''

வண்டியில் முன் பக்கம் தொத்தி ஏறிக்கொள்ள, கனகசபை ஆடி ஆடிக் கொண்டே செல்ல, ''வேலே யெல்லாம் உடனே விட வேண்டாம். இன்னும் ரெண்டு வருசம் மூணு வருசம் சம்பாதிச்சுட்டு அப்புறம் விட்டுரலாம்'' என்றுள் கிரிஜா.

''அப்படியே ஆகட்டும், கிரிஜா!''

''இத்தினி நாளு தனியா இருந்து பழகியாச்சு. இன்னும் ரெண்டு வருசத்திலே என்ன போச்சு?''

''சரி, கிரிஜா!''

''கொஞ்ச நாள் சந்தோசமா இருந்துட்டு அப்புறம் போங்க! நான் உங்களைத் தொண தொணங்கமாட்டேன்!''

''சரி, கிரிஜா!''

சந்தோஷம் என்றதும் தேவகி ஞாபகம். அவளைப் போய்ப் பார்க்க வேண்டும்.

அவன் மண்டைக்குள் விதம் விதமான சதித் திட்டங்கள் எல்லாம் உருவாயின. ஒரு முறை கிரிஜாவின் கழுத்தைப் பார்த்தான். நெரித்தால் எத்தனை வலுவாக இருக்கும் என்று கணக்கிடுவதுபோல. இல்லே, பேசாமல் சவுதிக்குப் போய் அங்கிருந்து லெட்டர் எழுதாமல் அங்கிருந்தே அமெரிக்காவுக்கு விசா வாங்கிக் கொண்டு —

''ஆர் யூ மாரிட்....? நோ !''

சட்டென்று ஒரு முறை மணற்காட்டுக்கு வந்து தேவகியைக் கவர்ந்து கொண்டு—

மணற்காட்டில் கிரிஜா இருப்பாளே !

இது ஒன்றும் நடக்கப் போவதில்லை என்பதும் தெரியும். அதற்கெல்லாம் தைரியமில்லாத பிரஜை அவன். பாரிஸுக்கு விடுமுறையில் சென்றிருந்தபோதே சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் மனைவிக்கு வண்ணக் கார்டுகள் எழுதிப் போட்ட பிரஜை. மனத்தில் மட்டும் தீரச் செயல்கள் செய்யும் வெட்டி மனிதன். அவனுக்கு நியமிக்கப்பட்ட பாட்டையிலிருந்து வேறு தெரியாது. கிரிஜாவை ஒதுக்குவதற்கான சந்தர்ப்பங்களை எல்லாம் அவனுக்கு டாக்டர் சாவித்திரிகளும், கொள்ளைக்காரவழிப்போக்கர்களும்தான் தர வேண்டும். அவனாகத் தீர்மானித்து, ''இதோ பார், கிரிஜா! நீ எனக்கு வேண்டாம்''என்று சொல்லத் தைரியம் இல்லாதவன். அது ஒரு தைரியமான செயலா என்பது பற்றியே அவனுக்குச் சந்தேகங்கள். பிறர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என்னை அவதூறு செய்யக் கூடாது. ''கனகசபையா?.... ரொம்ப நல்லவன். வருஷக்கணக்கா வெளி நாட்டுக்குப் போய்ப் பெண்டாட்டிகிட்ட விசுவாசமா இருக்கிற தங்கக் கம்பிப்பா, அவன்!''

வீட்டுக்கு வந்தபோது கனகசபைக்கு கலெக்டர் ஆபீசிலிருந்து ஜீப் அனுப்பியிருந்தார்கள். ''கனகு! அம்மாவையும் அழைச்சுக்கிட்டு வரச் சொன்னுங்க. மந்திரி சர்க்யூட் அவுசில தங்கியிருக்காங்க. சமரசக் கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறுங்க. பத்திரிகைக்காரங்களும் வர்றுங்க!''

''என்னய்யா கலகம் செரியாப் போச்சா?''

''ஏதும் தெரியலீங்க. பேப்பர்லே செரியாப் போச்சுன்னுதான் சொல்றுதான். இன்னும் பூசல் இருந்துகிட்டுதான் இருக்குது. அப்பப்ப புகையுது. கொஞ்ச நாட்களில் இலங்களுக்கே அனுத்துப் போய்அடிக்கிறதை நிறுத்திக்கிடுவாங்கன்னு தோணுது. எலக்சன் கிலக்சன் வந்தா சவுகரியமாக இருக்கும். அதில மனசு போயிரும். நீங்க எதுக்கும் வாங்க அம்மாவை ரெண்டு கட்சிக்காரங்களும் பார்த்துக்கிட்டாங்கன்னு, அட நாம் சண்டையைத் துவங்கினதே தப்புரான்னு வெக்கப்பட்டுச் சமாதானத்துக்கு அஸ்திவாரம் போட்டுரலாம்னு யோசிக்கிறுங்க போல. நீங்க வாங்க.''

''சாப்ட்டுட்டு வர்றன்பா!''

''அவசரமில்லீங்க. மணக் காட்டில் இருந்து அவங்க வந்து சேர்றதுக்குப் பதினொண்ணு, பன்னண்டு ஆயிரும்.''

கனகசபை குளிக்கச் சென்றுன். வெந்நீரைத் தன் மேல் மொண்டு மொண்டு, ஊற்றிக் கொள்ளும்போது தீர்மானித்தான், இன்று இரவு எல்லாம் முடிந்ததும் தேவகியைப் பார்க்கச் செல்வது என்று.

(தொடரும்)

Choose MELTRON Super Acoustic Cassettes

—Super-sensitive, strong tape that will not snap or tear. Guarantees superb sound.
—Precise mechanism and perfectly balanced rollers for smooth tape running.
—A choice of running lengths — C-60, C-90 in cassettes.
—Competitively priced — and freely available.

MELTRON

Maharashtra Electronics Corporation Limited

- Plot No. 214, Backbay Reclamation, Raheja Centre, 13th Floor, Nariman Point, Bombay 400 021. Phone: 240538 Telex: 011-6817 ME Cable: MELTRON
- 7 A, Hansalaya, 15 Barakhamba Road, New Delhi 110 001. Phone: 40641 Telex: 031-2815 MELN
- 55, Rama Nivas, 10th Cross, West of Chord Road, II Stage, Bangalore 560 010. Phone: 80772

SOUND VALUE
SOUND QUALITY
SOUND REPRODUCTION



CHAITRA-ME-197

என்ன சார் புதுமை?

மவுண்ட்ரோடு ஹிக்கின்பாதம்ஸ் புத்தகக் கடைக்குள் நுழைந்தேன்.

'என்ன சார் புதுமை, சமீபத்திய புத்தகங்களில்'? என்று கேட்டதும்,

''அறிவுக்கு அப்பாற் பட்ட அதிசய சக்திகள்'' என்று ஒரு புத்தகம் வெளி வந்திருக்கிறது. ரவிச்சந்திரன் என்னும் இளைஞர் எழுத மாருதி பதிப்பகத்தினர் (சென்னை-14) வெளியிட்டுள்ளனர் என்றார் திரு. கருணாகரன்.

தமிழில் அமானுஷ்ய சக்திகள் பற்றி வெளியாகி இருக்கும் முதல் புத்தகம் இதுதான். ஐம்புலன் களுக்கும் அப்பாற்பட்ட E.S.P. சக்தி மனிதர்கள், மிருகங்கள், என்று எப்படி எல்லோரிடமும் வெளிப் படுகின்றது என்று உதாரணங்களுடன் விளக்கி இருக்கிறார்.

அற்புத விஷயங்கள் பற்றிப் படிக்கும் போது நேரில் படம் பார்க்கிற மாதிரியான உணர்வை உண்டாக்கி விட்டிருக்கிறார். ஒரு அனுபவம் மட்டும் இங்கே தருகிறேன்.

- கோபு ராமஸ்வாமி



ரஸ்புடீன் என்ற சொல்லுக்கு ரஷ்ய மொழியில் ''துஷ்டன்'' என்று பொருள். ரஷ்யாவின் சைபீரியா மாநிலத்தில் ஒரு மூலையில் உள்ள பீட்ரோவ்ஸ்கோயி என்ற சிற்றூரில் 7—7—1872ல் பிறந்து வளர்ந்த கிரிகோரி யஃபிமாவிச் ரஸ்புடீன் தன் பெயருக்கு ஏற்பத் துஷ்டத்தனமான வாழ்க்கை வாழ்ந்தவன். ஆஜானுபாகுவான ஆறடி உயரமுள்ள முரட்டு உருவமும், பரட்டைத் தலையும், புலியின் கண்களைப் போல ஆகர்ஷண சக்தி வாய்ந்த கண்களும் பெற்றிருந்த ரஸ்புடீன் (படம்) தனது வாழ்வில் எல்லாக் கெட்ட காரியங்களையும் தொடர்ந்து துணிவுடன் செய்தான்.

வாழ்வில் திருப்பம்

இப்படிப்பட்ட ரஸ்புடீன் வாழ்வில் 5—2—1903ல் ஒரு திரும்புமுனை ஏற்பட்டது. அன்று இரவு ரஸ்புடீன் ஒரு பாதிரியாரை வெர்கோ-டூரியி என்ற இடத்திலுள்ள மடத்தில் விடுவதற்காக வண்டியை ஓட்டிச் சென்றான். செமோரோவ்ஸ்கி என்ற அந்தப் பாதிரியார் வழிப் பிரயாணம் முழுவதும் அவனுக்கு அறிவுரைகளைக் கூறிக் கொண்டே வந்தார். அவருடன் அந்த மடத்தில் நான்கு மாதங்கள் வரை தங்கியிருந்த ரஸ்புடீன் வீடு திரும்பியபோது முற்றிலும் புதியவனாக வந்தான். 'தனக்கு முன்பாகப் புனித மைக்கேல் காட்சியளித்து-ஒரு பெரிய ஆலயம் ஒன்றைக் கட்டுமாறு தனக்கு ஆணையிட்டிருப்பதாக' அனைவரிடமும் அவன் கூறினான்.

சாமியாராக வாழலானான்

அதிலிருந்து அவன் நோய் தீர்க்கும் சாமியாராக வாழ ஆரம்பித்தான். மக்களால் அவன் சாமியாராகக் கருதப்பட்டாலும், அதிகார பூர்வமாகப் பாதிரியாராகவோ, பூசாரியாகவோ நியமிக்கப்படவில்லை. ஆனால், நோயாளிகளைக் குணமாக்கவும், முடவனுக்குக் காலையும், குருடனுக்குப் பார்வையையும் கொடுக்கும் ஆற்றலும் அவனுக்கு இருந்ததாகத் தெரிகிறது. இருந்தாலும், ரஸ்புடீனது முரட்டுத்தனமும் தோற்றமும் மட்டும் அப்போதும் மாறவில்லை.

மன்னர் நிக்கோலஸ், மகாராணி அலெக்ஸாண்டிரியா தம்பதிகளுக்கு அலெக்ஸிஸ் என்ற மூன்று வயது மகன் இருந்தான். அரசின் ஒரே வாரிசான இவனுக்கு ஹெமோஃபிலியா என்ற கொடிய நோய் வந்திருந்தது. இந்த நோய் உள்ளவர்களுக்கு ஏதேனும் சிறு காயம் பட்டால்கூட சாகும்வரை அதன் வழியாக ரத்தம் வழிந்துகொண்டே இருக்கும். சாதாரணமாக நமக்குக் காயம் ஏற்பட்டால் ரத்தம் வடிந்து உடனே உறைந்து விடுகிறதல்லவா? ஆனால் இந்த நோயுள்ளவர்களுக்கு. அப்படி ரத்தம் உறையவே உறையாது.

ஒரு நாள் அரச குமாரன் அலெக்சிஸ் தவறி விழுந்ததில் உள் அடி பட்டது. அதனால் ரத்தக் குழாய் உடைந்து உள்ளுக்குள் ரத்தம் பெருகியது. கால் தொடையில் வீக்கம் ஏற்பட்டது. கடுமையான ஜுரம் வேறு. அரண்மனை வைத்தியர்கள் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு ஒதுங்கிக் கொண்டனர். இந்நிலையில்தான் ரஸ்புடீனைப் பற்றிக் கேள்விப்பட்டுஅரண்மனையிலிருந்து அவனுக்கு அழைப்பு விடுத்தனர்.

இயேசுநாதர் படத்தின் அருகே எரிந்து கொண்டிருந்த இரண்டு மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தில் ரஸ்புடீன் அரச குமாரன் படுக்கையருகில் முழந்தாளிட்டு வணங்கியபடி ஆழ்ந்த தியானத்தில் இருந்தான்.

வெகுநேரம் அந்நிலையில் இருந்த ரஸ்புடீன் கண்களைத் திறந்தபோது அது நீல நிறமாக ஒளி வீசிப் பிரகாசித்ததாக ராணியே வியப்புடன் தெரிவித்தாள். ராணியைக் கண்டதும் ரஸ்புடீன் எழுந்து வந்தான்.

''மகாராணி! உங்கள் மகனின் காய்ச்சல் நீங்கிவிட்டது. நிம்மதியாகத் தூங்குகிறான். பிழைத்துக் கொள்வான். நான் அவனருகில் இருக்கும்வரை ஒரு ஆபத்தும் அவனுக்கு வராது'' என்றான்.

நோய் நீங்கிற்று

அடக்க முடியாத ஆவலுடன் மகனிடம் ஓடினாள் ராணி. அவன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான். காய்ச்சல் நின்றுவிட்டது. என்ன ஆச்சரியம்! கால் தொடையில் இருந்த வீக்கம் கூட மறைந்து விட்டிருந்தது.

மருத்துவத்துக்குக் கட்டுப்படாத நோய், ரஸ்புடீனின் அமானுஷ்ய சக்திக்குக் கட்டுப்பட்டிருந்தது. ரஷ்ய மகாராணி அலெக்ஸாண்டிரியா 1907 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதியிட்ட தனது நாட்குறிப்பில், தம் கைப்பட இச்சம்பவத்தை எழுதி வைத்துள்ளார்.

நாளடைவில் ஜார் அரச குடும்பத்துடன் ரஸ்புடீனுக்கு இருந்த செல்வாக்குப் பெருகியது. இதுவே அவனுக்கு நிறைய விரோதிகளைக் கொடுத்தது. இதன் காரணமாக அவன் அரச குடும்பத்தை விட்டு விலகித் தன் சொந்தக் கிராமத்துக்குச் சென்றான்.

எட்டு வயதாகி விட்ட இளவரசன் படகுச் சவாரி செய்யச் சென்றான். சவாரி முடிந்து படகு கரையை அடைந்ததும் விளையாட்டுப் பிள்ளையான அவன் துள்ளிக் குதித்து இறங்கினான். கால் தடுக்கிக் கீழே விழுந்ததில் மீண்டும் கால் முட்டியில் சிராய்ப்பு ஏற்பட்டது. உள்ளுக்குள் ரத்த நாளம் திறந்து கொண்டது. அன்று மாலையே தொடையில் வீக்கம் ஏற்பட்டுக் கடும் காய்ச்சல் கண்டது.

அன்று மாலை சிறுவனின் ஜுரம் 105 டிகிரியைத் தாண்டி விட்டது. முடிவு எந்த நேரத்திலும் வரலாம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். உடல் நீலம் பூத்துவிட்டது. மறுநாள் காலை அரச குமாரனின் முடிவை எதிர்பார்த்து, அனைவரும் காத்திருந்தனர். அப்போது அவர்கள் முன்னே மகாராணி மகிழ்ச்சியுடன் ஓடி வந்து நின்றாள்.

''இப்போதுதான் ரஸ்புடீனிடமிருந்து தந்தி வந்தது. இதோ பாருங்கள்'' என்றாள்.

''உங்கள் கண்ணீருக்குக் கடவுள் கருணை காட்டியுள்ளார். என் பிரார்த்தனைக்கு மீண்டும் செவி சாய்த்து விட்டார். கவலைப்பட வேண்டாம். உங்கள் மகன் உடனே குணம் அடைவான்'' என்று தந்தி வாசகங்கள் கூறின.

இறந்து விடுவான் என்று கருதப்பட்ட அரசகுமாரன் மறுநாளே தெளிவடைந்தான். காய்ச்சல்பூரணமாகநின்றுவிட்டது. தொடையின் வீக்கம் ஒரே இரவில் மறைந்தது. அன்று நிகழ்ந்த இந்த அற்புதத்துக்கு இன்று வரை எந்த வித மருத்துவ விளக்கமும் கிடைக்கவில்லை.

ரஸ்புடீன் மரணம்

ரஸ்புடீனது மரணம் மிகவும் பயங்கரமானது. பயங்கரமான முறையில் அவன் கொல்லப்பட்டான். கொலை முயற்சிகளை அவனைப் போல் தாங்கிக் கொண்ட நபர் உலகிலே யாரும் இருக்க மாட்டார்கள்.

அரச குடும்பத்தில் நாளுக்கு நாள் ரஸ்புடீனது செல்வாக்கு உயர்வதையும், அவன் என்ன சொன்னாலும் அரச தம்பதிகள் கேட்கத் தயாராக இருந்ததையும் கண்டு ஜார் மன்னரது மாமா நிக்கோலஸ் கோமகன் மனம் கொதித்தார். ரஸ்புடீனை ஒழிக்கத் திட்டமிட்டார். அதற்காக ஐந்து நபர்களைத் தேர்ந்தெடுத்தார்.


முதலில் விஷம் கலந்த மது, கேக் கொடுத்தார்கள். பிறகு மார்பை நோக்கிச்சுட்டான் ஒருவன்.

ரஸ்புடீனை அடக்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக அவர்கள் வெளியில் சென்றனர். யுசுபோவ் என்பவன் மட்டும் தனியாக இருந்தான். அப்போது

ஹென்டே சொன்ன மருந்து

வீரசிகாமணியில் நாட்டியமாடிய ஒரு பெண் குழந்தையின் பற்களில் காரை இருந்ததைக் கண்ட அமைச்சர் ஹென்டே உடனே ஒரு மருந்து சொன்னார்:

''மாவிலையை மடித்து பிரஷ் மாதிரி வைத்து பல் துலக்கினால் பல் பளபளப்பாக இருக்கும். காரை போகும். அழகும் கூடும்!'' —ஏ. பாரதிசங்கர்



தான் நம்ப முடியாத அந்தச் சம்பவம் நடந்தது.

செத்துப்போனதாக டாக்டர் லாசோவர்ட் அறிவித்த ரஸ்புடீன் அசாதாரண வேகத்துடன் முரட்டுத்தனமாக எழுந்தான். அவனது வாயில் நுரை தள்ளியது. விஷத்தின் வேலை போலும். 'யுசுபோவ், யுசுபோவ்' என்று வாய் பிதற்றியது. ஒரே எட்டில் யுசுபோவை அடைந்து, அவனது குரல்வளையைப் பிடித்துக் கொண்டான் ரஸ்புடீன். ஆனால் யுசுபோவ் தப்பிவிட்டான்...

யுசுபோவ் முதலில் சுட்டும் சாகாத ரஸ்புடீன் புரிஷ்கேவிச் மேலும் இரண்டுமுறை சுட்டும் சாகாமல், மேலும் நடந்து போய்க் கொண்டிருந்தான். புரிஷ்கேவிச் மீண்டும் இரண்டு முறை சுட்டார். ஐந்தாவது குண்டு பாய்ந்ததும் ரஸ்புடீன் கீழேவிழுந்தான். இருவரும் அவனருகே ஓடினார்கள்.

அப்போதும் ரஸ்புடீன் உயிரோடு இருந்தான். எழுந்து நிற்க முயற்சி செய்தான். உடனே புரிஷ்கேவிச் அருகிலிருந்த ஒரு விறகுக் கட்டையை எடுத்து ரஸ்புடீனுடைய தலையில் பலமுறை ஓங்கி அடித்தான். ரஸ்புடீன் கீழே சாய்ந்தான்.

விடிவதற்குச் சற்று முன் வெளியில் போன மூவரும் திரும்பினார்கள். பிறகு ஐவரும் ஒன்று சேர்ந்து ரஸ்புடீனின் கைகளையும் கால்களையும் இறுக்கமாக ஒரு கயிற்றினால் கட்டினார்கள். பிறகு அவனது உடலை ஒரு சாக்குப் பையில் போட்டு மூட்டை கட்டி, அந்த மூட்டையைக் காரில் ஏற்றிக்கொண்டு நேவா ஆற்றங்கரைக்குப் போனார்கள். அந்த ஆற்றின் மேலிருந்த பெடரோபவ்லோவ்ஸ்க்என்ற பாலத்தின் மீதிருந்து, அந்த மூட்டையை ஆற்றில் உருட்டி விட்டார்கள்.

நான்கு நாட்களுக்குப் பிறகு அந்தப் பிண மூட்டை மிதந்தது. அந்த மூட்டையை அவிழ்த்துச் சோதனை செய்தபோது மற்றொரு ஆச்சரியமான விஷயம் வெளிப்பட்டது. அதாவது ஆற்றில் உருட்டி விட்டபோதும் கூட ரஸ்புடீன் உயிருடன் இருந்திருக்கிறான். ஐந்து குண்டுகள் அவனது இதயத்தையும் உடலையும் துளைத்தும் கூட அவனது உயிர் போகவில்லை. ஆற்று நீருக்குள் மூச்சுத் திணறி உயிருக்குப் போராடிய அறிகுறிகள் அவனுடலில் தென்பட்டன.

மூட்டையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பெரு முயற்சி செய்திருக்கிறான். போராட்டத்தின் விளைவாகக் கைகளைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டிருக்கிறான். மூட்டையிலிருந்து அவனது உடலை வெளியே எடுத்தபோது அவனது கை உலகை ஆசீர்வதிப்பது போல உயர்ந்திருந்தது என்று ராபர்ட் மாசி என்ற அறிஞர் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

கொலைகாரர்கள் பிடிபட்டனர். அவர்களைத் தூக்கிலிடவேண்டும் என்று மகாராணி உத்தரவிட்டாள். ஆனால், ஜார் மன்னர் அவர்களை நாடு கடத்தி விட்டார்.

ரஸ்புடீன் இறந்த ஒரு வருடம் கழித்து ரஷ்யப் புரட்சியில் ஜார் குடும்பத்தினர் கைது செய்யப்பட்டு, 1918ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் தேதி சுட்டுக் கொல்லப் பட்டனர்.



பாரதி நூற்றாண்டு

சுந்தரம் கிளேட்டன் அளிக்கும்

CD TVS

டி.வி.எஸ்-50 மொபெட் பரிசுத் திட்டம்

ஐந்து பத்திகளை ஐந்து பாடல்களில் சரியானபடி அடுக்கொட்டுப் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :

அ. குமார்
7, ரத்தன் சிங் ரோடு,
ப்ரேசர் டவுன்
பெங்களூர் 560 005.

மேற்படி பரிசுத்திட்டத்தில் உற்சாகமாகப் பங்கேற்ற பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்கு நன்றி. பரிசு பெற முடியாது போனாலும் பாரதி பாடல்கள் சிலவற்றைக் கருத்தூன்றிப் படித்து அதன் நயங்களை அசை போட்ட அனுபவம் இருக்கிறதல்லவா? அதுவே மிகச்சிறந்த பரிசுதானே!





இணையற்ற இரட்டைக் கலைஞர்!

இந்த ஆண்டு கலாக்ஷேத்திரக் கலைவிழாவில் புதிய படைப்பு அங்கே பல லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் கலையரங்கமே. இந்த நாட்டிய, இசைக் கலை அரங்கம் நவீன வசதிகளுடன் கூடியதாக இருக்கும். அதே சமயத்தில் தென்னாட்டுக் கலை அரங்கப் பாணியை எடுத்துக் காட்டும் அழகிய கூடமாகவும் திகழும்.

அரங்கங்கள் எவ்வளவு கட்டினாலும், என்னதான் நவீன சாதனங்கள் பொருத்தினாலும் அதன் பயன் கலைஞர்களாலேயே பூர்த்தி பெறுகிறது அல்லவா?

ஏறக் குறைய 23 ஆண்டுகளாகக் கலாக்ஷேத்திர நாட்டிய நாடகங்களில் பங்கேற்று நாட்டியம் செய்து வருபவர் திரு ஜனார்த்தனன். அவரை லக்ஷ்மணனாகவும், ஸ்ரீ ராமனாகவும், புத்தராகவும், கலாக்ஷேத்திர நாட்டிய நாடகங்களில் பார்த்தவர்கள் ''எவ்வளவு சிறந்த கலைஞர்'' என்று பூரித்துப் போவார்கள். அதே நேரத்தில் கதகளியில் பச்சை வேடம், கறுப்பு வேடம் முதலிய எந்த வேடமாக இருந்தாலும் பிரமாதமாகச்செய்து விடுவார். துச்சாதனவதத்தில் பீமனாக அவர் வந்து ஆர்ப்பாட்டம் செய்யும்போது ''நம்முடைய சாது ஜனார்த்தனனா இது?'' என்று அவருடைய நண்பர்களும், சக ஆசிரியர்களுமே அதிசயிப்பார்கள்.

ஸ்ரீ சந்து பணிக்கர் கலாக்ஷேத்திரத்தில் 20 ஆண்டு காலம் கதகளி ஆசிரியராகப் பணியாற்றியவர். தேசிய விருது பெற்றவர். அவர் ருக்மிணி தேவியிடம் ''ஒரு சின்னப் பையன் இருக்கிறான். நாட்டியம் கற்றுத் தரலாம் என்று தோன்றுகிறது. கலாக்ஷேத்திரத்தில் சேர்த்துக் கொண்டால் நல்லது'' என்று கூறினாராம். ''உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் சேர்த்துக் கொள்கிறேன்'' என்றார் ருக்மிணி தேவி. ஜனார்த்தனனை வரவழைத்து விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்யும்போதுதான் இந்தப்பையன் அவருடைய புதல்வன் என்று தெரிய வந்தது. ''ஏன் முன்னமேயே சொல்லவில்லை?'' என்று கேட்டதற்கு, ''என் மகன் என்பதற்காக நீங்கள் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதால்தான் சொல்லவில்லை'' என்றார் சந்து பணிக்கர்.

திரு ஜனார்த்தனன் கூறுகிறார்: ''அப்பா ரொம்பக் கண்டிப்பானவர். மகன் என்பதால் இன்னும் அதிகமான கண்டிப்பு. ஆறு வருடங்கள் கதகளி, பரதநாட்டியம் இரண்டும் பயின்றேன். பல சமயம் நாட்டியமே வேண்டாம் என்று கூடத் தோன்றியிருக்கிறது. சக்கையாகப் பிழிந்துவிடுவார்.''

''கதகளி கலைஞரான உங்கள் தந்தை பரத நாட்டியம் பயில்வதற்கு எப்படிச் சம்மதித்தார்?''

''என் தந்தையாருக்குப் பரத நாட்டியக் கலையில் மிகுந்த மதிப்புண்டு. பரத நாட்டியத்தில் நிறைய நுணுக்கம் இருக்



கிறது. கதகளியைப் போலவே பரத நாட்டியத்தையும் நீ சிரத்தையுடன் ஆராதித்து வரவேண்டும்'' என்று கூறியிருக்கிறார். இதற்கு ருக்மிணி தேவியும் ஊக்கம் அளித்தார்.

''ஆறு வருடத்துக்குப் பிறகு மத்திய அரசாங்க உதவி பெற்றுக் கலாக்ஷேத்திரத்தில் மேலும் ஒரு வருடமும், கலா மண்டலம் கிருஷ்ணன் நாயரிடம் ஒரு வருடமும் பயின்றார் ஜனார்த்தனன். இப்போது கலாக்ஷேத்திரத்திலேயே ஆசிரியராகப் பணி புரிகிறார்.

''கலைஞன் சுயநலமற்றவனாகவும் கலையிலேயே ஒன்றி விடுபவனாகவும் இருக்க வேண்டும் என்று அப்பா வற்புறுத்துவார்'' என்று கூறும் ஜனார்த்தனன் ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்கிறார்:

''அம்பரீஷ சரித்திரம் கதகளி நாட்டியம் நடந்தபோது அப்பா துர்வாஸர். நான் பிரும்மா. எனக்கு அதிக வேலை இல்லை. துர்வாஸரைச் சக்கரம் துரத்தி வரும்போது அவர் பிரும்மாவின் காலில் ஓடி வந்து விழ வேண்டும். அப்பா என் காலில் விழுந்த போது எனக்கு நான் பிரும்மா என்று மறந்து போய் விட்டது. பதறிப்போய்விட்டேன். அவர் எழுந்து என்னை ஒரு பார்வை பார்த்தார். உடனே சமாளித்துக் கொண்டேன்.''

- நமது நிருபர்


அடக்கமே உருவான ஓர் உயர்ந்த கலைஞரை இவ்விதழ் மேலட்டையில் வண்ணப் படமாக விளங்கச் செய்பவர்: **உத்ரா**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy. Madras-600 032. (Phone: 431643)

Assistant Editor: P.S. Mani   Layout Artist: Nambi   Editor: K. Rajendran



புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
மஃபத்லால்
துணிகள்
மட்டுமே
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
MF-123 TAM


காந்தமென அலங்காரம் கவர்ந்திழுக்க
கவிபாடுதே உங்கள்
கண்கள்...கவர்ச்சி காட்டு
ரோஜா இதழ்கள். கட்டழ
மலருதே. நெற்றி கொண்
சிங்கார் குங்குமத்தால்.
சிங்கார்...உன்னத
பொருட்களால் உருவானது
உங்கள் உள்ள நிலைக்கும்
உடை அழகுக்கும் ஏற்ற
வண்ணங்களிலே.
சிங்கார்
குங்குமப் பொட்டு
இந்தியாவின்
ஒப்பற்ற
அழகுத்திலகம்.
Shingar